தொடரியல் கோட்பாடுகளின் வளர்ச்சி

தொல்காப்பியத்தை முன்வைத்து

பதிப்பாசிரியர்
முனைவர் கு. சிதம்பரம்

- தொடர்
  - முற்றுத் தொடர்
  - எச்சத் தொடர்
    - பெயரெச்சத் தொடர்
    - வினையெச்சத் தொடர்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

தொடரியல் கோட்பாடுகளின் வளர்ச்சி

தொல்காப்பியத்தை முன்வைத்து

பதிப்பாசிரியர்
முனைவர் கு. சிதம்பரம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாம் முதன்மைச் சாலை, மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்
தரமணி, சென்னை – 600 113

நூல் விவரக் குறிப்பு

நூல் தலைப்பு	:	தொடரியல் கோட்பாடுகளின் வளர்ச்சி தொல்காப்பியத்தை முன்வைத்து
பதிப்பாசிரியர்	:	முனைவர் கு. சிதம்பரம் உதவிப் பேராசிரியர் அயல்நாட்டுத் தமிழர் புலம் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தரமணி, சென்னை 600 113
வெளியீட்டாளரும் பதிப்பு உரிமையும்	:	உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் இரண்டாம் முதன்மை சாலை மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம் தரமணி, சென்னை 600 113 தொலைபேசி எண் 044/22542992
வெளியீட்டு எண்	:	770
தரவரிசை எண் (ISBN)	:	978–81–925359–3–7
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	முதற்பதிப்பு
பதிப்பு ஆண்டு	:	2014
பயன்படுத்திய தாள்	:	18.6 கிகி டி.என்.பி.எல் வெள்ளை மேப்லித்தோ
நூலின் அளவு	:	1/8 டெம்மி
எழுத்தின் அளவு	:	10 புள்ளி
பக்க எண்ணிக்கை	:	xii + 128
அச்சுப்படிகளின் எண்ணிக்கை	:	1200
விலை	:	ரூ.65/– (ரூபாய் அறுபத்தைந்து மட்டும்)
அச்சகம்	:	ஸ்ரீசரவணா அச்சகம் 144, தம்புத் தெரு சென்னை 600 001
பொருண்மை	:	தொல்காப்பியம்

முனைவர் கோ. விசயராகவன் எம்.ஏ., எம்.ஃபில், பி.எட்., பிஎச்.டி.
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை 600 113

அணிந்துரை

பேச்சு மொழியினை அடிப்படையாகக் கொண்டு தமிழ் மொழிக்கு இலக்கணம் வகுத்தவர் தொல்காப்பியர். அவர் தனது கால வழக்காறுகளையும் உள்ளடக்கி தொடரியல் கோட்பாடுகளையும் விளக்கி இருப்பதோடு, அவர் காலத்திற்கு முந்தைய தொடரியல் கோட்பாடுகளையும் ஆங்காங்கே மேற்கோள் காட்டியுள்ளார்.

சொற்களும் சொல்லமைப்புகளும் தொடர்களாக முதலில் அமைந்து, பின்னர் வாக்கியங்களாக அமைகின்றன. இவ்வமைப்பே தொடரமைப்பு என்றும் வாக்கிய அமைப்பு என்றும் அழைக்கப்படுகின்றது. தொடர் என்பது ஓர் அலகாகவும் அடிப்படை விளக்கக் கூறாகவும் செயல்படுவதால் இவ்விளக்கம் தொடரியல் விளக்கம் எனப்படுகின்றது. இதனை வெளிப்படுத்தும் இயல் தொடரியல்' என்பார் இக்கால மொழியியல் அறிஞர்கள்.

பேச்சு மொழி வழக்காறுகளிலும் எழுத்து மொழி வழக்காற்றிலும் வாக்கிய அமைப்புகள் அமையும் விதம் வேறுபாடு அடைகின்றது. நாளிதழ்களின் வாக்கிய அமைப்புகள் மேற்கூறிய இரண்டில் இருந்தும் சற்று மாற்றம் பெற்று அமைகின்றன. வாக்கிய அமைப்பும் வாக்கியங்களில் உள்ள சொற்களின் தேர்வும் அம் மாற்றத்தைத் தீர்மானிக்கக்கூடியதாக உள்ளது. அம்மாற்றம் பல்வேறு சமூகம் சார்ந்தக் காரணிகளின் அடிப்படையில் அமைவதாகவும் உள்ளது.

அதேபோல், கால மாற்றத்திற்கேற்ப தொடர் அமைப்புகளும் தொடரியல் கோட்பாடுகளும் மாற்றம் பெற்றே வந்துள்ளன. தொல்காப்பியரின் தொடரியல் கோட்பாடுகள், வீரசோழியத்

தொடரியல் கோட்பாடுகள், நேமிநாதத் தொடரியல் கோட்பாடுகள், நன்னூல் தொடரியல் கோட்பாடுகள், பிரயோக விவேகத் தொடரியல், தொன்னூல் விளக்கத் தொடரியல் கோட்பாடுகள், முத்துவீரியத் தொடரியல் கோட்பாடுகள், சாமிநாதத் தொடரியல் கோட்பாடுகள், இக்கால மொழியியலாரின் தொடரியல் கோட்பாடுகள் எனத் தொடரியல் கோட்பாடுகளின் வளர்ச்சி நிலைகளை நாம் வகைப்படுத்தலாம். அவ் வகையில் தமிழ்த் தொடரியலின் வளச்சிப் படிநிலைகளைக் காட்டக்கூடியதாக இந்நூல் அமைகின்றது.

ஆகவே, இந்நூல் மாணவர்களுக்கும், தொல்காப்பியம் மற்றும் தொடரியல் தொடர்பான ஆய்வுளை மேற்கொள்வோர் களுக்கும் – இது ஒரு சிறந்த வழிகாட்டி நூலாக அமையும் என்பதில் எவ்வித மாற்றமும் இல்லை.

'தொடரியல் கோட்பாடுகளின் வளர்ச்சி – தொல்காப்பியத்தை முன்வைத்து' எனும் தலைப்பில் தேசியக் கருத்தரங்கினை நடத்தி, அதன் ஆய்வுக் கட்டுரைகளைத் தொகுத்துப் பதிப்பித்த முனைவர் கு. சிதம்பரம் அவர்களுக்கு எனது வாழ்த்தினையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ் மீதும், தமிழர் மீதும், தமிழ்நாட்டின் மீதும், தமிழ்ப் பண்பாட்டின் மீதும் கொண்டுள்ள அன்பும் கருணையும் அளப்பரியன. ஆதலால், இவற்றின் மேம்பாட்டுக்கெனப் பல திட்டங்களை மேற்கொண்டு வருகின்றார்கள். ஒல்லும் வகையெல்லாம் தமிழ் வளர்த்துவரும் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா** அவர்களுக்கு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் நன்றிகளைப் பதிவு செய்கின்றேன்.

தமிழ் வளர்ச்சிக்கும் இந்நிறுவன வளர்ச்சிக்கும் ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையைக் காட்டிவரும் பள்ளிக் கல்வி, தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத்துறை அமைச்சர் மாண்புமிகு கே.சி. வீரமணி அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசுச் செயலாளர் முனைவர் மூ. இராசாராம் இ.ஆ.ப. அவர்களுக்கும் என் இனிய நன்றிகளை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

இந்நூலின் எழுத்துருவைக் கணினியில் செம்மையாக்கம் செய்த தட்டச்சர் திருமதி இந்திராகாந்தி, திருமதி எ.ம. லட்சுமிக்கு ஆகியோருக்கு எம் நன்றி. இந்நூலைச் சிறப்பாக அச்சிட்டுத் தந்த ஸ்ரீ சரவணா அச்சகத்தாருக்கும் என் பாராட்டுகள்.

இயக்குநர்

பதிப்புரை

ஒல்காப் புகழ் தொல்காப்பியர் முதல் இக்கால மொழியியல் அறிஞர்கள் வரை தமிழ் இலக்கணங்களை ஆராய்ந்து கோட்பாடுளை வகுத்துத் தந்துள்ளனர். கி.மு. இரண்டாம் நூற்றாண்டு தொடங்கி பல்வேறு இலக்கண நூல்கள் தமிழ் மொழியில் தோன்றியுள்ளன. கால வளர்ச்சியில் நோக்குகையில் தமிழ் மொழியின் இலக்கண வளமையின் சிறப்பினைத் தெளிவாக அறியலாம்.

தொல்காப்பியம்	– *தொல்காப்பியர்*	– *கி.மு. 2 ஆம் நூற்றாண்டு*
வீரசோழியம்	– *புத்தமித்தரர்*	– *11 ஆம் நூற்றாண்டு*
நேமிநாதம்	– *குணவீரப்பாண்டியர்*	– *12 ஆம் நூற்றாண்டு*
நன்னூல்	– *பவணந்தி முனிவர்*	– *13 ஆம் நூற்றாண்டு*
முத்துவீரியம்	– *முத்துவீர உபாத்தியாயர்*	– *17 ஆம் நூற்றண்டு*
பிரயோகவிவேகம்	– *சுப்பிரமணிய தீடசிதர்*	– *17 ஆம் நூற்றாண்டு*
இலக்கணவிளக்கம்	– *வைத்தியநாத தேசிகர்*	– *17 ஆம் நூற்றாண்டு*
இலக்கணக்கொத்து	– *சாமிநாத தேசிகர்*	– *17 ஆம் நூற்றாண்டு*
தொன்னூல்விளக்கம்	– *வீரமாமுனிவர்*	– *18 ஆம் நூற்றண்டு*
சுவாமிநாதம்	– *சுவாமி கவிராயர்*	– *19 ஆம் நூற்றாண்டு*

இருபதாம் நூற்றாண்டில், அமெரிக்க நாட்டு மொழியியல் அறிஞர் நோம் சாம்ஸ்கி அவர்கள் தொடரியல் குறித்தான தனது ஆய்வுச் சிந்தனைகளை வெளிப்படுத்தினார். அவ் ஆய்வுச் சிந்தனைகள் இதுகாறும் உலகளவில் தொடரியல் தொடர்பாக கொண்டிருந்த கோட்பாடுகளைத் திசைத் திருப்பக்கூடியதாக அமைந்தது எனலாம். இவர்தான் மேற்கொண்ட தொடரியல் ஆய்வுகளுக்கு ஆதாரமாக அமைந்தது தொல்காப்பியரின் சிந்தனைகள் என்பதை மேற்கோளாகக் காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதாவது, வாக்கியம் சொற்களைத் தெரிவுச் செய்கின்றதா?, சொற்கள் வாக்கிய அமைப்பை முடிவு செய்கின்றதா? என்ற இவ் வினாக்களுக்கான விடையினைத் தொல்காப்பியம் தனது சொல்லதிகாரத்தில் விளக்கியுள்ளதை மிகத் தெளிவாக அறியலாம் எனச் சுட்டிகாட்டியுள்ளார். எடுத்துக்காட்டாக, ஒரு வினைச் சொல்லை எடுத்துக்கொண்டால் அந்த வினைச்சொல் தனக்கு முன்பு எந்த சொல் வரவேண்டும் பின்பு எந்த சொல் வரவேண்டும் என்பதை முடிவுச் செய்கின்றது. அதேபோல அனைத்து வகையான

சொற்களுக்கும் இந்த குணம் உண்டு என்கிறார். இதனை அடிப்படையாக வைத்துதான் சாம்ஸ்கி அவர்கள் தனது தொடரியல் கோட்பாட்டினை முன்வைக்கின்றார்.

இதே காலக்கட்டத்தில் மொழியியல் தொடர்பான ஆய்வுகளை முன்னெடுக்கும் விதத்தில் தெ.பொ.மீனாச்சிச்சுந்தரனார் அவர்கள் மொழியிலை ஒரு கல்விப்புலமாகவும் ஆய்வு புலமாகவும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் உருவாக்கினார். அவரும் அவரது ஆய்வுக்குழுவும் தமிழகத்தில் மொழியியல் குறித்தான வளமான ஆய்வுகளை முன்னெடுத்தது. தொல்காப்பியத்தை மொழியியல் அடிப்படையில் விரிவாகப் புரிந்துக்கொள்வதற்கானத் தேவ்வையினை அச்சூழல் உருவாக்கியது. அவருடன் பணியாற்றிய பேராசிரியர்களும் அவரது ஆய்வு மாணவர்களும் அப்பணியினை முன்னெடுத்தனர்.

தற்போது தமிழகச் சூழலில் மொழியியல் ஆய்வுகள் குறைந்து வருகின்ற சூழலில் மீண்டும் மொழியியல் தொடர்பான ஆய்வுகளை முன்னெடுப்பதில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் நிதி நல்கி வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

அவ்வகையில் உலகளவில் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற மொழியியல் ஆய்வுகளோடு தொல்காப்பியத்தை இணைத்து நோக்கவேண்டியுள்ளது. தொல்காப்பியர் முதல் இக்கால மொழியியல் அறிஞர்கள் வரை தொடரியல் கோட்பாடுகளின் சிந்தனை போக்குகளை அறியும் பொருட்டாக – தொடரியல் கோட்பாடுகளின் வளர்ச்சி – தொல்காப்பியத்தை முன் வைத்து' எனும் பொருண்மையில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் நிதி உதவியினைப் பெற்று 2014 பிப்ரவரித் திங்கள் 19 – 21 ஆகிய நாள்களில் நடத்தப் பெற்ற கருத்தரங்க கட்டுரைகளின் தொகுப்பாக இந்நுல் அமைகின்றது.

இக் கருத்தரங்கம் நடைபெறுவதற்கும் இந் நூல் வெளிவருதற்கும் காரணாமாக அமைந்த உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் முனைவர் கோ. விசயராகவன் அவர்களுக்கும், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் பதிவாளர் முனைவர் மு. முத்துவேலு அவர்களுக்கும், நாமக்கல் அரசு கலைக் கல்லூரியின் உதவிப் பேராசிரியர் முனைவர் இரா. சந்திரசேகரன் அவர்களுக்கும்,உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இலக்கியம் மற்றும் ஓலைச்சுவடிப் புலத்தின் இணைபேராசிரியரும் தொல்காப்பியர் ஆய்விருக்கையின் பொறுப்பாளருமான முனைவர் அ. சதீஷ்

அவர்களுக்கும், கருத்தரங்கில் கலந்துக்கொண்டு கட்டுரை வழங்கியப் பேராளர்களுக்கும் எனது நன்றியினை உரித்தாக்குகின்றேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ் மீதும், தமிழர் மீதும், தமிழ்நாட்டின் மீதும், தமிழ்ப் பண்பாட்டின் மீதும் கொண்டுள்ள அன்பும் கருணையும் அளப்பரியன. ஆதலால், இவற்றின் மேம்பாட்டுக்கெனப் பல திட்டங்களை மேற்கொண்டு வருகின்றார்கள். ஒல்லும் வகையெல்லாம் தமிழ் வளர்த்துவரும் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா** அவர்களுக்கு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் நன்றிகளைப் பதிவு செய்கின்றேன்.

தமிழ் வளர்ச்சிக்கும் இந்நிறுவன வளர்ச்சிக்கும் ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையைக் காட்டிவரும் **பள்ளிக் கல்வி, தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத்துறை அமைச்சர் மாண்புமிகு கே.சி. வீரமணி** அவர்களுக்கும், **தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசுச் செயலாளர் முனைவர் மூ. இராசாராம் இ.ஆ.ப.** அவர்களுக்கும் என் இனிய நன்றிகளை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

இந்நூலின் எழுத்துருவைக் கணினியில் செம்மையாக்கம் செய்த தட்டச்சர் திருமதி இந்திராகாந்தி, திருமதி எ.ம. லட்சுமிக்கு ஆகியோருக்கு எம் நன்றி. இந்நூலைச் சிறப்பாக அச்சிட்டுத் தந்த ஸ்ரீ சரவணா அச்சகத்தாருக்கும் என் பாராட்டுகள்.

பதிப்பாசிரியர் குறிப்பு



முனைவர் கு. சிதம்பரம் அவர்கள் மொழியியலில் முதுகலை மற்றும் முனைவர் பட்டங்களைக் கோயம்புத்தூரில் அமைந்துள்ள பாரதியார் பல்கலைக்கழகத்தில் பெற்றவர். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முதுகலைத் தமிழையும், புதுதில்லியிலுள்ள இந்தியத் தேசிய மனித உரிமைகள் கழகத்தில் முதுகலை மனித உரிமைகள் பட்டயத்தினையும் பெற்றவர். கல்லூரி மற்றும் பள்ளிக் கல்வியினைத் தருமபுரி மாவட்டத்தில் தமிழ் வழியில் பயின்றவர்.

செப்டம்பர்த் திங்கள் 7, 2010 முதல் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின், அயல்நாட்டுத் தமிழர் புலத்தில் உதவிப் பேராசிரியராகப் பணியாற்றி வருகின்றார். மேலும்,உலகத் தமிழர் பண்பாட்டு வரவேற்பு (ம) தகவல் மையத்தின் பொறுப்பாளராகவும் செயல்பட்டு வருகின்றார். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனப் பணியினை ஏற்பதற்கு முன்பாகச் சீனாவில் சங்சுன் மாநிலத்திலுள்ள ரேபில்ஸ் பன்னாட்டுக் கல்லூரியில் இரண்டு ஆண்டுகள் மொழியியல் விரிவுரையாளராகவும், மைசூரிலுள்ள இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனத்தின் கட்டுப்பாட்டில் இயங்கும் இந்தியத் தேசியத் தேர்வுப்பணி மையத்தில் ஓராண்டும் தென்னிந்திய மொழிகளின் மையத்தில் ஓராண்டும் தமிழ் விரிவுரையாளராகக் கடமையாற்றியவர். பாரதியார் பல்கலைக் கழகத்தின் மொழியியல் துறையில் பல்கலைக் கழக மானியக் குழுவின் ஆராய்ச்சித் திட்டத்தில் திட்ட உதவியாளராகவும் கடமையாற்றியவர்.

இவர் அயல்நாடுகளில் தமிழை வளர்க்கவும் தமிழைப் பரப்பவும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் அயல்நாட்டுத் தமிழர் புலம் வாயிலாகப் பல்வேறு பணிகளைத் திறம்படச் செய்து வருகின்றார். இவர் இங்கிலாந்து, மலேசியா, சிங்கப்பூர், சீனா ஆகிய நாடுகளுக்கு ஆராய்ச்சிப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

2013 ஆகஸ்ட் திங்களில் இலண்டன் உலகத் தமிழியல் ஆய்வு நடுவம் இலண்டன் பலகலைக்கழகத்தில் நடத்திய உலகத் தமிழியல் ஆய்வு மாநாட்டின் துணைத் தலைவராகவும், 2014 ஆம் ஆண்டு மே திங்களில் சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியக் களமும் உலகத்

தமிழாராய்ச்சி நிறுவனமும் இணைந்து சிங்கப்பூரில் நடத்திய **புலம்பெயர்ந்த தமிழர் வரலாறும் வாழ்வியலும்** எனும் பன்னாட்டுக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராகவும் இருந்து செயல்பட்டவர். தமிழ்நாடு அரசு நிதிநல்கையுடன் **அயல்நாட்டுத் தமிழ் இலக்கியங்கள்** எனும் பொருண்மையில் இரண்டு நாள்கள் தேசியக் கருத்தரங்கினையும் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் நிதி நல்கையுடன் **தொடரியல் கோட்பாடுகளின் வளர்ச்சி-தொல்காப்பியத்தை முன்வைத்து** எனும் பொருண்மையில் மூன்று நாள்கள் தேசியக் கருத்தரங்கினையும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் நடத்தியவர்.

இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தகைசார் வாழ்நாள் பேராசிரியர் முனைவர் அ. சண்முகதாஸ் அவர்களுடன் இணைந்து **உலகத் தமிழியல் ஆய்வுகள்** (தொகுதிகள் 1&2), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் பேரா. முனைவர் கோ.விசயராகவன் அவர்களுடன் இணைந்து **அயல்நாட்டுத் தமிழ் இலக்கியங்கள்** (தொகுதிகள் 1&2), **புலம்பெயர்ந்தோர் இலக்கியங்களில் செவ்வியல் இலக்கியங்களின் தாக்கம், புலம்பெயர்ந்த தமிழர் வரலாறும் வாழ்வியலும்** ஆகிய நூல்களையும் பதிப்பித்துள்ளார். இவைதவிர தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட மாணவர்கள் இரண்டாம் மொழி ஆங்கிலம் கற்றல் கற்பித்தலில் உள்ள இடர்ப்பாடுகள் எனும் இணைய ஆங்கில நூலினையும் முப்பதுக்கும் மேற்பட்ட ஆங்கிலக் கட்டுரைகளையும் தமிழ் ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

மேலும், சீனாவின் தற்கால இலக்கியத்தின் முதல் கவிதைத் தொகுப்பான சீன எழுத்தாளர் குமோரோ அவர்களின் 'தேவதைகள்' எனும் கவிதைத் தொகுப்பினையும், சீன எழுத்தாளர் லு சுன் அவர்களின் உலகப் புகழ்பெற்ற 'மனநோயாளியின் நாட்குறிப்பு' எனும் சிறுகதையினையும் தமிழாக்கம் செய்துள்ளார். செவ்வாய் தோசம் பிடித்த சுதந்திரதேவி, ஆனந்த கண்ணீர், அன்று பள்ளி விடுமுறை ஆகிய சிறுகதைகளையும் எழுதியுள்ளார். வார்ப்பு, முத்துக்கமலம், கீற்று ஆகிய இணையத் தளங்கள் மூலம் கவிஞராகவும் அறிமுகமாகியுள்ளார்.

தற்போது தாய்மொழித் தமிழல்லாதோருக்கான ஆங்கிலம் - தமிழ் இருமொழி அகராதியினைப் பல்கலைக்கழக மானியக் குழுவின் திட்டப் பணியாகச் செய்துவருகின்றார். மேலும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் திட்டப்பணியாக உலகத் தமிழர் தகவல் களஞ்சியத்தினைத் தயாரித்து வருகின்றார். தேன் கூட்டில் ஒரு தேனீயின் பங்களிப்புப்போலத் தாய்த்தமிழுக்கு இவரது பங்களிப்பு சுவையினை அளிப்பதாக உள்ளது.

பொருளடக்கம்

	பக்கம்
1. தொல்காப்பியத் தொடரியல்	1
2. பெயரெச்சத் தொடரியல்	9
3. தொல்காப்பிய வினையெச்சத் தொடரியல்	14
4. வேற்றுமையியலிலும் வேற்றுமை மயங்கியலிலும் தொடரியல் கருத்துகள்	22
5. வேற்றுமையியல் கோட்பாடு	30
6. மரபு இலக்கணத்தில் தொகைநிலைத் தொடர்கள்	38
7. தொல்காப்பியத்தில் இயைபு	47
8. மொழி புணர் இயல்பு	53
9. பிரயோகவிவேகத் தொடரியல் கோட்பாடும் தொல்காப்பியமும்	69
10. வீரசோழிய வேற்றுமைத் தொடரும் தொல்காப்பியமும்	81
11. தொல்காப்பியம், தொன்னூல் விளக்கம் காட்டும் குறைச்சொல்தொடர்	100
12. நேமிநாதத்தில் தொல்காப்பியத் தொடரியல் கோட்பாடு	110
13. கிளவியாக்கத் தொடரியல் கூறுகளும் தற்கால மொழிநடையும்	119

தொல்காப்பியத் தொடரியல்

முனைவர் செ. சண்முகம்
பேராசிரியர்
மொழியியல் துறை
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்

தொடரியல்

தொடர்களைக் குறித்த விளக்கம் தரும் துறை தொடரியல் ஆகும். தொடரியல் சிந்தனையும் விளக்கமும் தொல்காப்பிய சொல்லதிகாரத்தில் காணப்படும் எல்லா இயல்களிலும் வெளிப்படுகின்றன. கிளவியாக்கம் என்னும் இயல் தொடரியலை அறிமுகப்படுத்தும் இயல். கிளவியாக்கம் என்பதைத் தொடர்களை ஆக்குதல் எனவும் தொடர்களை ஆக்கி பரிமாற்றத்திற்காகப் பயன்படுத்துதல் எனவும் வரையறுக்கலாம். தொல்காப்பியரின் தொடரியல் சிந்தனைகளை விளக்கி உலகுக்குத் தந்த பெருமை உரையாசிரியர்களையும், தமிழறிஞர் களையும், மொழியியல் அறிஞர்களையும் சாரும். இன்றைய காலக்கட்டத்திலும் இடையறாது தொல்காப்பிய தொடரியல் ஆராய்ச்சி குறித்த பல கட்டுரைகளும் நூல்களும் வந்துள்ளன; வருகின்றன. ச.அகத்தியலிங்கனார், சே.வை. சண்முகனார், க.பாலசுப்பிரமணியனார், ச.வே.சுப்பிரமணியனார், சி. சுப்பிரமணியனார், இராம. சுந்தரனார், கி. அரங்கனார், பொன். கோதண்டராமனார், க. வெள்ளைவாரணனார், சு.ப அண்ணாமலையார், இரா. கோதண்ட ராமனார் போன்றவர்கள் இக்கால தொல்காப்பிய ஆராய்ச்சியில் - குறிப்பாக தொடரியல் ஆராய்ச்சியில் - தடம் பதித்தவர்கள். தொடரியலின் விளக்கப் பொருள் தொடராகும். இங்கு தொல்காப்பியர் விளக்கிய செம்மாந்த தொடரியல் கருத்துகளில் சில மறுபடி ஆராயப்படுகின்றன.

தொடர்

வாக்கியம் அல்லது தொடர் என்பது தனக்கே உரிய உறுப்புகளைக் கொண்ட பெரும் அமைப்பு. அதை விளக்க முற்படுகையில் அதில் அங்கம் வகிக்கும் உறுப்புகள், அந்த உறுப்புகளுக்கு இடையிலான உறவு, வாக்கியம் ஏற்கும் முறை, வாக்கியங்கள் பல மாற்றங்களுக்கு உட்பட்டு வெவ்வேறு

வாக்கியங்களை உருவாகும் முறை, போன்றவை விளக்கப்பட வேண்டும். எனவே வாக்கியம் என்பது உறுப்புகளையும், உறவுகளையும், மாற்றங்களையும் காட்டுவது எனப் பொதுவாக விளக்கலாம். தொல்காப்பியரின் தொடர் விளக்கமும் இவ்வாறு அமைகிறது.

தொல்காப்பியம் காட்டும் தொடர் அமைப்பு - உறுப்பு

தொல்காப்பியர், வாக்கியத்தின் உறுப்புகளாகப் பெயரையும் வினையையும் கொள்கிறார் (பெயரையும் வேற்றுமையையும் கொள்கிறார் எனவும் கருதலாம்).வேற்றுமை உருபை ஏற்று உருபோடு நிற்கும் பெயர், வேற்றுமை உருபை ஏற்று ஆனால் உருபின்றி நிற்கும் பெயர் எனப் பெயர் இருவகையாகும். வேற்றுமை உருபின்றி நிற்கும் பெயர் எழுவாய் ஆகும். வேற்றுமை உருபோடு நிற்கும் பெயர் வினையின் சார்பு உறுப்பாகும். ஆக, வாக்கியம் எழுவாய், பயனிலை என்னும் இரு உறுப்புக்களால் ஆனது. எழுவாயாக வேற்றுமை உருபு இல்லாத பெயர் அமையும். பயனிலையில் வினை மைய உறுப்பாகவும், வேற்றுமை உருபோடு நிற்கும் பெயர் வினையைச் சார்ந்து வரும் உறுப்பாகவும் அமையும். இந்த மூன்று வாக்கிய உறுப்புகளிலும் வினையே மைய உறுப்பு.



வேற்றுமையும் எழுவாய்ப்பெயரும் வினையைச் சார்ந்து வரும் என்பதை நிறுவமுடியும். வினையே வேற்றுமையைத் தேர்வு செய்கிறது. (வீட்டை அடைந்தான், வீட்டைக் கடந்தான்). வினையின் ஈற்று உறுப்பின் உதவியால் எழுவாயின் திணை, பால் உணரலாம். (பேடி (+ பெண் பால்) <-- வந்தாள்.)

எழுவாய்

எழுவாய் என்பது வாக்கியத்தின் உறுப்பு. அது பயனிலையைச் சார்ந்தும், வேற்றுமை உருபின்றியும் வரும் பெயராகும். எழுவாயாக வரும் பெயர்கள் பல வகைப்படும். பெயர்த்தொகை (661 சோழன் நலங்கிள்ளி), இடப்பெயர்கள் (தன்மை, முன்னிலை, படர்க்கை), திணை-பால் பெயர் (645 உயர்திணை, அஃறிணை, விரவு) இயற்பெயர், சினைப்பெயர், சினை முதற்பெயர், முறைப்பெயர் (661-6668)

எழுவாய்ப்பெயர் சார்ந்து வரும் பயனிலை வினைக்கேற்ப வாக்கிய வகைகள் உருவாகும். எழுவாய்ப்பெயர் பொருண்மை சுட்டல்(சிலம்பு உளது), வியங்கொள வருதல் (அன்பே வா), வினாவிற்கு ஏற்றல் (இளங்கோ எவன்), பண்புகொள வருதல் (காடு கரிது), பெயர் கொண்டு முடிதல் (சோழன் வீரன்) என, பல செயல்பாடுகளைச் சார்ந்து வரும் பயனிலை அடிப்படையில் காட்டுகிறது. ஆகவே வாக்கியங்களையும் எழுவாயின் பண்புக்கேற்ப ஆறாகப் பகுக்கலாம்.

பயனிலை

வாக்கியத்தின் மைய உறுப்பு பயனிலை. இதில் மைய உறுப்பாக வினையும், சார்பு உறுப்பாக வேற்றுமையும் வரும்.

வேற்றுமை

வாக்கியப் பயனிலையின் ஓர் உறுப்பாக வேற்றுமை அமைகிறது. அது வினையோடு சார்ந்து வரும் பெயர்களை வேறுபடுத்தும் உறுப்பு வேற்றுமையானது. வினையையும் பெயரையும் சார்ந்து வரும். வேற்றுமையில் பெயரும் வேற்றுமை ஈறும் உறுப்புகளாக வரும்.

வேற்றுமையில் எட்டு வகைகள் இருந்தாலும் முதல் வேற்றுமையான எழுவாய் வேற்றுமை, ஆறாம் வேற்றுமையான உடைமை வேற்றுமை, எட்டாம் வேற்றுமையான விளி வேற்றுமை நீங்கலாக ஐந்து வேற்றுமைகள் வினையின் அடையாகவும் வினையைச் சார்ந்தும் வரும். ஒன்றாம் வேற்றுமை உருபின்றி அமையும் முதல் வேற்றுமைப் பெயர் எழுவாயாகச் செயல்படும். ஆறாம் வேற்றுமை என்னும் உடைமை வேற்றுமை, பெயரின் அல்லது எழுவாய்ப் பெயரின் அடையாகவும் சார்பு உறுப்பாகவும் வரும். எட்டாம் வேற்றுமையான விளிவேற்றுமை அழைப்புச் சொற்களாக வரும்.

வேற்றுமை உருபின் மயக்கம் காரணமாக பயனிலையின் சார்பு உறுப்பான வேற்றுமைகள் மயங்கித் தோன்றலாம். வேற்றுமை மயக்கத்தை தொல்காப்பிய சொல்லியலின் உறுப்பான வேற்றுமை மயங்கியல் தெளிவாக விளக்குகிறது. சார் என்னும் வினையின் உறுப்பாக வரும்போது இரண்டாம் வேற்றுமையும் ஆறாம் வேற்றுமையும் மயங்குகிறது (அரசரை/ அரசர்கண் சார்ந்தான் (தொல். 568)) வெட்டு என்ற வினையுடன் வரும் முதல் சினைப் பெயர்களோடு வரும் இரண்டாம் வேற்றுமையும்

ஏழாம் வேற்றுமையும் ஒன்றிற்குப் பதிலாக ஒன்று பெயர்ந்து நிற்பதைக் காணலாம். (மரத்தினது கிளையை வெட்டினான் (தொல்: 571) மரத்தைக் கிளைக்கண் வெட்டினான்). அமெரிக்க அறிஞரான ஃபில்மோர் என்பாரின் வேற்றுமை இலக்கணத்தில் விளக்கப்பட்ட வேற்றுமை மயங்கிய தொடர் விளக்கத்தைத் தொல்காப்பியர் 2000 ஆண்டுகளுக்கு முன்பே கூறியிருப்பது வியப்பைத் தருகிறது.

He painted	the wall	with red paint
He smeared	red paint	on the wall

வேற்றுமை உருபு வடிவத்தில் மாற்றமடைவதையும் தொல்காப்பியம் விளக்குகிறது. தொல் : 558, ஒடு வேற்றுமை உருபு இல், ஆன் என உருவெடுத்து நிற்பதும் உண்டு. (கல்வியிற்பெரியன் கம்பன், நாணான் உயிர் துறப்பர்)

வினை

வாக்கியப் பயனிலையின் மைய உறுப்பாக வரும். வினை என்பது வேற்றுமை உருபை எடுக்காமல் கால உருபோடு வரும். (683) வினையில் தெரி நிலை, குறிப்பு என்னும் இரு வகைகளும், முற்று, எச்சம் என்ற இரு வகைகளும் உள்ளன. முற்று வினையின் உறுப்புகளாக வினையும் காக உருபுகளும் இணக்க உருபுகளான திணை-பால் ஈறுகளும் வரும். எச்ச வினைகள் இணக்க உருபுகளின்றியும் எச்ச உருபுகளுடனும் வரும்.

வினை என்னும் வாக்கியப் பயனிலை உறுப்பு மயங்கியும் மரியும் தோன்றலாம் என்பதை தொல்காப்பியம் விளக்குகிறது. வினையின் உறுப்பான காலம் வினையில் ஏற்படும் மயக்கத்திற்கான காரணமாகலாம். குறிப்பாக, இறப்பும் - எதிர்வும், நிகழ்வும் - எதிர்வும் மயங்கித் தோன்றலாம் (தொல்:730, 732) வினை எனும் வாக்கிய உறுப்பு மரித்தோன்றுவதும் உண்டு. அத்தகைய மாற்றங்கள் சில பின்வருமாறு:

வினை ஈறுகளின் ஒலி = மாற்றம் வந்தான் → வந்தோன் 696,697

வினைஎச்சத்தின் மெய் கெடுதல் = வாகும் புரவி → வாம் புரவி 723

இரண்டாம் வேற்றுமை எழுவாயாக மாறுதல் = நாடகத்தை நடத்தினார்→நாடகம் = நடந்தது 731

வேற்றுமையும் வினையும் இணைந்த பல வகைத் தொடர்களைக் காணலாம்.

வாக்கியம்

எழுவாய்	வேற்றுமை	வினை
அவன்	அறிவைப்	பெற்றான்
அவன்	பொருளை	உடையன்
அவன்	வாளொடு	வந்தான்
அவன்	புலவர்க்கு	ஈந்தான்
அவன்	மரத்திங்கண்	நின்றான்
அவன்	அரசரை/அரசர்கண்	சார்ந்தான்

வாக்கியம்

வாக்கியம் என்னும் அமைப்பு எழுவாய் பயனிலை என்ற உறுப்புகளைக் கொண்டது. பயனிலையில் வேற்றுமையும், வினையோ, குறிப்பு வினையோ, பெயரோ காணப்படும். எனவே வாக்கியங்கள் இம்மூவகை உறுப்புகளையும் அடுக்கப்பெற்ற ஒரு கிளை அமைப்பைக் கொண்டவை.

பயனிலையைப் பொறுத்து வாக்கியங்கள் பெயர்கொண்டு முடிவன; குறிப்பு வினை கொண்டு முடிவன; வினைகொண்டு முடிவன; என வகைப் படுத்தப்படும். வினை கொண்டு முடியும் வாக்கியங்களில் முற்று, எச்சம் என இரு வகை உண்டு. முற்று வாக்கியம் - திணை, பால், ஈறுகளைக் கொண்ட வினையில் முடிவன.

எச்ச வாக்கியம் திணை-பால் ஈறு கொண்டு முடியாமல் எச்ச ஈறு கொண்டு முடியும் வினைகளைக் கொண்டவை.

வாக்கியங்களைச் செப்பல், வினவல், வியங்கொள வருதல் எனவும் பகுக்கலாம். செப்பல் வாக்கியங்கள் திணை - ஈறு கொண்டு முடியும் வினையைப் பயனிலையாகக் கொண்டவை. வினா வாக்கியங்கள் வினா உறுப்புக்களைக் கொண்டவை. வியங்கோள் வாக்கியம் வியங்கோள் உருபில் முடியும் வினைப் பயனிலையையும் படர்க்கைப் பெயரை எழுவாயாகவும் கொண்ட வாக்கியங்கள். இவையன்றி வேறுபாடுகளைக் காட்டும் வகையில் தகுதி வழக்கு, செய்யுள் வழக்கு வாக்கியங்களையும் இனங்காணலாம்.

வாக்கியங்கள் மூவகை உறவுகளைக் காட்டுகின்றன என தொல்காப்பியம் விளக்குகிறது. அவை அடுக்கு நிலை உறவு, சார்பு நிலை உறவு, தேர்வு நிலை உறவு என்பன.

அடுக்கு நிலை உறவு

ஓர் அமைப்பின் உறுப்புகள் ஒன்றன் பின் ஒன்றாக நிற்கும் உறவை அடுக்கு நிலை உறவு எனலாம்.தொடரின் உறுப்புகளான எழுவாய் - பயனிலை என்பனவற்றிற்கு இடையிலான உறவு, அடுக்கு நிலை உறவு. இவையன்றி தொல்காப்பியம் அடுக்கு நிலை உறவில் நிற்கும் பல உறுப்புகளை விளக்குகிறது. எழுவாயில் காணப்படுகின்ற, குறிப்பாக எழுவாயின் மைய உறுப்பான பெயருக்கும் அதனோடு வரும் பிற உறுப்புக்களுக்கும் இடையிலான அடுக்கு நிலை உறவு விளக்கப்படுகிறது. அடுக்கி வரும் தொடர்கள் பிரிக்க இயல்பவை, பிரிக்க இயலாதவை என பகுக்கலாம். பிரிக்க இயலாதவை இரட்டைக் கிளவிகள். பிரிக்க இயல்பவை அடுக்கு உறுப்புகள்.

உறுப்பு	உறுப்பு	உறுப்பு
வண்ணம்	சினை	பெயர்
சினை	முதல்	
பெயர்	சுட்டு	
சுட்டு	இயற்பெயர்	
காரணம்	சுட்டு	
சிறப்பு	இயற்	

சார்பு நிலை உறவு

ஒரு தொடரில் தோன்றும் இரு உறுப்புக்களில் ஒன்று தனித்தும், மற்றொன்று முன்னையதைச் சார்ந்தும் வரும் தன்மையில் இருந்தால் அவற்றுக்கிடையே இருக்கும் உறவு சார்பு நிலை உறவு எனப்படும். பயனிலை வினைக்கும் வேற்றுமைக்கும், பயனிலை வினைக்கும் எழுவாய்ப் பெயருக்கும் இடையிலான உறவை சர்பு நிலை உறவு எனலாம். முன்னர் அடுக்கு நிலை உறவில் குறிப்பிட்ட பெயரின் உறுப்புகளில் ஈற்று நிலையில் நிற்கும் பெயர் மைய உறுப்பாகவும் பிற உறுப்புகள் சார்ந்து நிற்பதாலும் அவற்றுக்கிடையிலான உறவையும் சார்பு நிலை உறவு எனலாம்.

தேர்வு/பொருத்த நிலை உறவு

ஒரு தொடரில் தோன்றும் இரு உறுப்புகளில் ஒன்று மற்றொன்றின் வருகையைக் கணிக்கும் வகையிலும் ஒன்று மற்றொன்றோடு பொருந்துகின்ற வகையிலும் இருந்தால்

அவ்வுறுப்புக்களினிடையே தேர்வு நிலை உறவு தோன்றும். அவ்வாறு தேர்வு நிலை உறவைக் காட்டும் பல உறுப்புக்களை தொல்காப்பியம் வகைப்படுத்திக் காட்டுகிறது.

வாக்கியத்தின் எழுவாய்ப் பெயரும் பயனிலை வினையும் ஒத்த திணை-பால் ஈறுகளால் பொருத்தம் காட்டுகிறது. இது சொன்மைப் பொருத்தம். எழுவாயும் பயனிலையும் தக்கவாறு பொருந்த வேண்டுமென்றால் இயற்கைப் பொருள் காட்டும் எழுவாயை உள்ளது என்னும் பயனிலையாலும், செயற்கைப் பொருள் காட்டும் எழுவாயை ஆக்கப் பயனிலையாலும், முடிக்க வேண்டும். எழுவாய் பால் - திணை ஐயமுள்ளதாக இருந்தால் ஈறில்லாத வேறு சொற்களைப் பயனிலையாகக் கொண்டு முடிக்க வேண்டும். அறிந்த பொருளைக் குறிக்கும் எழுவாயையும் அறியாத பொருளைக் குறிக்கும் எழுவாயையும் வேறுபட்ட சொற்களைப் பயனிலையாகக் கொண்டு முடிக்க வேண்டும். (பொருண்மைப் பொருத்தம்). இவ்வாறு பலவகையான கருத்துகள் எழுவாய் - பயனிலைப் பொருத்த உறவைக் காட்டும் வகையில் தொல்காப்பியத்தில் உள்ளன. கிளவியாக்கத்தில் காணப்படும் சில சான்றுகள் பின் வருமாறு:

ஈறுகொண்ட எழுவாய்ப்பெயர்	**ஈறுகொண்ட பயனிலைவினை**
சாத்தன்	உண்டான்
வேற்றுமை தாங்கிய இடப்பெயர்	**வா/தா, போ/கொடு வினைகள்**
என்னிடம் / உன்னிடம்	வந்தான்
என்னிடம் / உன்னிடம்	போனான்
எனக்கு / உனக்கு	தந்தான்
எனக்கு / உனக்கு	கொடுத்தான்
அவனிடம்	போனான்
அவனிடம்	வந்தான்
அவனுக்குக்	கொடுத்தான்
அவனுக்குத்	தந்தான்
ஈறில்லாத எழுவாய்ப் பெயர்	**ஈறுள்ள பயனிலை வினை**
பேடி	வந்தாள்
பெயர்+பெயர்+பெயர்	**ஒரே பயனிலை வினை/ பொது வினை**
ஒரு பெயர்	**பல பயனிலை வினை**

உறுப்புகளையும் உறவுகளையும் தழுவி பல வகையான பண்புகளைத் தொடர்கள் காட்டுகின்றன என, தொல்காப்பியம் விளக்குகிறது.

முடிவுரை

தொல்காப்பியத்தில் தொடரியல் குறித்த செய்திகள் பல இயல்களில் வெளிப்படுகின்றன. தொடர்களில் உறுப்பு உறவு, அமைப்பு என்னும் 3 பண்புகளைக் கொண்டவை. வாக்கியத்தின் உறுப்பாக எழுவாய், வேற்றுமை, பயனிலை என்னும் 3 உறுப்புகள் உள்ளன. அத்தகைய உறுப்புகளைக் கொண்ட வாக்கியங்கள் அந்த உறுப்புகளினிடையே அடுக்கு நிலை, சார்பு நிலை, பொருத்த நிலை என்னும் 3 உறவுகள் இருப்பதை வெளிப்படுத்து கின்றன. வாக்கிய அமைப்பைப் பார்க்கும்போது செப்பல், வினவல், வியங்கொள வருதல், முற்று, எச்சம் என்னும் வாக்கிய வகைகள் தொல்காப்பியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன என அறியலாம். தொல்காப்பியத் தொடரியல் இன்னும் ஆராய்ச்சிக்கு உரியது.

பெயரெச்சத் தொடரியல்

முனைவர் முகிலை இராசபாண்டியன்
தமிழ்ப் பேராசிரியர்
மாநிலக் கல்லூரி, சென்னை

தமிழ்மொழியில் தொடர் அமைப்பு எவ்வாறு அமையும் என்பதனைத் தொல்காப்பியர் சொல்லதிகாரத்தில் விளக்கியுள்ளார். அவ்வாறு அமையும் தொடர்கள் பெயர்ச்சொல்(எழுவாய்)-செயப்படுபொருள்-வினைச்சொல் (பயனிலை) என்னும் சொற்றொடர் அமைப்பில் அமையும். இவ்வாறு அமையும் தொடரில் எழுவாய் இல்லாமலும் சொற்றொடர் அமையும். 'பாண்டியன் நாடகத்தைப் பார்த்தான்' என்னும் தொடர் மேற்காட்டிய எழுவாய், செயப்படுபொருள், பயனிலை என்னும் இலக்கண அமைப்பின்படி அமைந்துள்ளது. 'நாடகத்தைப் பார்த்தேன்' என்று குறிப்பிடும்போது எழுவாய் இல்லாமல் தொடர் அமைந்திருப்பதைக் காண முடிகிறது. இங்கே எழுவாய் இல்லை என்றாலும் வினைச்சொல் தன்மை இடத்தை உணர்த்துவதால் நாடகத்தைப் பார்த்தவர் யார் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது. இவ்வாறு அமையும் தொடரில் இறுதியில் வரும் வினைச்சொல் தனக்கு முன்னர் வந்திருக்கும் பெயர்ச்சொல்லின் தன்மையைப் பெற்று வந்திருப்பதைக் காண முடிகிறது. பெரும்பாலும் சொற்றொடரின் இறுதியில் வரும் வினைச்சொல் வினைமுற்றுப் பொருளிலேயே வரும். இதே வினைச்சொல் சொற்றொடரின் இடையில் வரும்போது எச்சப் பொருளில் வரும்.

எச்சம்: எச்சம் என்னும் சொல்லுக்கு 'எஞ்சி நிற்பது' என்பது பொருள். ஒரு வினைச்சொல் சொல்ல வந்த கருத்தைச் சொல்லி முடித்த பின் அச்சொல் முழுமை பெற்றால் அது வினை முற்று எனப்படுகிறது.

'வந்தான்' என்னும் சொல்லில் நிகழ்ந்த வினை வருதல் என்பது ஆகும். இந்த வருதல் என்னும் தொழில் முற்றுப் பெற்று விட்டது என்பதனை எளிதில் அறிந்து கொள்ள முடிகிறது. இவ்வாறு தொழில் முற்றுத்தன்மையைப் பெற்ற பின் அந்தச் சொல்லும் முழுமை பெற்றுள்ளது. வந்தான் என்னும் சொல் முழுமைத்தன்மை பெறுவதற்குக் காரணமாக இச்சொல்லில் அமைந்திருப்பது 'ஆன்'

என்னும் பால் காட்டும் விகுதி. இந்த விகுதி இங்கே ஆண் பாலினைக் காட்டி நிற்கிறது. இதன் வாயிலாக வருதல் என்னும் தொழிலை நிகழ்த்தியவன் ஓர் ஆண் என்பதனை அறிந்து கொள்ளமுடிகிறது.

'வந்தான்' என்னும் சொல் பால் காட்டும் விகுதியாகிய 'ஆன்' இல்லாமல் வந்தால் வருதல் என்னும் தொழில் நிகழ்ந்திருக்கும். ஆனால் வந்தான் என்னும் வினைமுற்றுச் சொல் முழுமை பெறாமல் நிற்கும்.

வந்தான் என்னும் சொல் ஒரு பகுபதச் சொல். இதில் எத்தனை உறுப்புகள் இருக்கின்றன - அவை யாவை - என்பதனைப் பிரித்துக் காண்போம்.

வந்தான் - வா த்(ந்) த் ஆன்

வா - பகுதி, 'வா என்னும் பகுதி 'வ எனக் குறுகியது விகாரம்.

த் (ந்) - சந்தி, 'த் என்னும் சந்தி எழுத்து 'ந் என்னும் இன எழுத்தாக மாறியிருப்பது விகாரம்.

த் - இறந்த கால இடைநிலை

ஆன் - படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதி.

வந்தான் என்னும் வினைமுற்றுச் சொல்லில் பகுபத உறுப்புகளின் ஐந்து உறுப்புகள் வந்துள்ளன. இவற்றில் 'ஆன்' என்னும் பால் காட்டும் விகுதியை மட்டும் இப்போது நீக்கி விட்டுப் பார்ப்போம்.

வந்தான் = வந்து + ஆன்

'வந்தான் என்னும் சொல்லில் உள்ள 'ஆன்' என்னும் விகுதி நீக்கப்பட்டதால் 'வந்த்' என்று உருவான சொல் ஒலிப்பு வசதிக்காக உகரச் சாரியை பெற்று வந்துள்ளது. இப்போது 'வந்து' என்னும் சொல் மட்டும் இருக்கிறது. இந்தச் சொல்லை நாம் ஒலித்துப் பார்த்தால், இந்தச் சொல்லில் முழுமை இல்லை என்பதனை எளிதில் புரிந்து கொள்ள முடிகிறது.

'வந்து' என்று ஒருவர் பேசும் போது குறிப்பிட்டுவிட்டு நிறுத்தி விட்டால், அதனைக் கேட்டுக் கொண்டிருப்பவர் அவர் இன்னும் பேசி முடிக்கவில்லை; எதையோ சொல்ல வருகிறார் என்று கருதிக் கொண்டு அவரது முகத்தையே பார்த்துக் கொண்டு நிற்பார். ஏனெனில் அந்தச் சொல் எச்சப் பொருண்மை கொண்ட சொல் என்பதனை மொழியைக் கற்காத ஒரு தமிழன் கூடத் தனது மொழிப் பயன்பாட்டால் உணர்ந்து கொள்வான்.

இவ்வாறு எச்சமாக வருகிற வினைச்சொல்லினை 'எச்ச வினை' என்கிறோம். இந்த எச்ச வினைச் சொல் முழுமை பெற வேண்டும் என்றால் 'ஆன், ஆள், ஆர், அது, அ' என்னும் விகுதிகளில் எதேனும் ஒன்றனைப் பெற்று வரவேண்டும். அவ்வாறு விகுதியைப் பெற்று வரவில்லை என்றால் வேறு ஒரு வினைமுற்றைப் பெற்றால் மட்டுமே முழுமை பெறும்.

வந்து சென்றான்

என்னும் தொடரில் வந்து என்னும் எச்ச வினை சென்றான் என்னும் வினைமுற்றுச் சொல்லைப் பெற்ற பின்னே முழுமை பெற்றுள்ளமையைக் காண முடிகிறது.

வினையெச்சம்

வந்து என்னும் எச்ச வினைக்குப் பின்னர் நாம் எவ்வளவு முயன்றாலும் ஒரு பெயர்ச் சொல்லைச் சேர்க்க முடியாது. வினைச்சொல்லை மட்டும் தான் சேர்க்க முடியும். இவ்வாறு ஓர் எச்ச வினையானது வினையைக் கொண்டு முடிந்தால் அது வினையெச்சத் தொடர் எனப்படும். வினையை மட்டுமே ஏற்றுக் கொள்ளும் வகையில் அமைந்துள்ள எச்சவினையை வினையெச்சம் என்கிறோம்.

வினையெச்சச் சொல் பெரும்பாலும் உகரத்தை அல்லது இகரத்தை ஈற்றில் பெற்றிருக்கும். வந்து என்னும் வினையெச்சச் சொல் உகரத்தை ஈற்றில் பெற்றிருக்கிறது. எழுதி என்னும் வினையெச்சச் சொல் இகரத்தை ஈற்றில் பெற்றிருக்கிறது.

பெயரெச்சம்

வந்தான் என்னும் வினை முற்றுச் சொல் வந்து என எச்சம் பெறாமல் வந்த என எச்சம் பெற்றும் வரும். இவ்வாறு அகர ஈற்றினைப் பெற்று வரும் எச்ச வினைச் சொல்லுக்குப் பின்னர் எவ்வளவு முயன்றால் ஒரு வினைச் சொல்லைப் போட்டு இந்த எச்ச வினையை முழுமை பெற வைக்க முடியாது. பெயர்ச்சொல்லைப் போட்டால் மட்டுமே இந்த எச்சச் சொல் முழுமை பெறும். இவ்வாறு பெயர்ச்சொல்லை எச்சமாகப் பெற்று முழுமை பெறும் எச்ச வினை பெயரெச்ச வினை எனப்படுகிறது.

வந்த வளவன்

என்பது பெயரெச்சத் தொடர். இந்தப் பெயரெச்சத் தொடரில் உள்ள *'வந்த'* என்னும் சொல்லை ஒருவர் பேசிவிட்டு அப்படியே நிறுத்த முடியாது. ஏதேனும் ஒரு பெயரைப் போட்டு நிறைவு செய்ய வேண்டும் என்பது எளிதாக விளங்கும்.

பெயரெச்ச வினை மூன்று காலத்திலும் வரும். வந்த என்னும்போது இறந்த காலத்தையும் வருகிற என்னும்போது நிகழ்காலத்தையும் வரும் என்னும்போது எதிர்காலத்தையும் உணர்த்தும்.

வந்த பையன்

வருகிற பையன்

வரும் பையன்

என்னும் முறையில் பெயரெச்சத் தொடர் மூன்று காலத்திலும் வரும். பெயரெச்சத் தொடரில் ஒற்று மிகாது.

நிலனும் பொருளும் காலமும் கருவியும்
வினைமுதல் கிளவியும் வினையும் உளப்பட
அவ்அறு பொருட்கும் ஓரன்ன உரிமைய
செய்யும் செய்த என்னும் சொல்லே *(719)*

என்னும் தொல்காப்பிய நூற்பா பெயரெச்சத் தொடரின் இலக்கணத்தைக் குறிப்பிடுகிறது. இந்த நூற்பாவில் பெயரெச்சம் வரும் பகுதிகளாக ஆறு பகுதிகளைத் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். அவை இடம்(நிலம்), பொருள், காலம், கருவி, வினைமுதல்கிளவி(எழுவாய்), வினை(தொழில்) என்பவை அந்த ஆறு பொருள்கள் ஆகும். செய்யும், செய்த என்பன போல் வரும் சொற்கள் பெயரெச்சச் சொற்கள் என்கிறார் தொல்காப்பியர்.

'செய்யும்' என்னும் வாய்பாட்டில் அமைந்த பெயரெச்சத் தொடருக்கு எடுத்துக்காட்டுகள்.

கட்டும் வீடு	-	*இடம்*
செய்யும் பானை	-	*பொருள்*
வரும் நேரம்	-	*காலம்*
எழுதும் பேனா	-	*கருவி*
படிக்கும் பையன்	-	*எழுவாய்*
உண்ணும் சோறு	-	*தொழில்*

'செய்த' என்னும் வாய்பாட்டில் அமைந்த பெயரெச்சத் தொடருக்கு எடுத்துக்காட்டுகள்.

கட்டிய வீடு	-	*இடம்*
செய்த பானை	-	*பொருள்*
வந்த நேரம்	-	*காலம்*
எழுதிய பேனா	-	*கருவி*
படித்த பையன்	-	*எழுவாய்*
உண்ட சோறு	-	*தொழில்*

இவ்வாறு ஆறு வகைகளில் வரும் பெயரெச்சத் தொடர் எதிர் மறைப் பொருண்மையிலும் வரும்.

கட்டாத வீடு	-	இடம்
செய்யாத பானை	-	பொருள்
வராத நேரம்	-	காலம்
எழுதாத பேனா	-	கருவி
படிக்காத பையன்	-	எழுவாய்
உண்ணாத சோறு	-	தொழில்

இவ்வாறு எதிர்மறைப் பொருண்மையில் வரும் பெயரெச்சத் தொடரில் ஈற்றெழுத்து கெட்டும் வரும். அவ்வாறு ஈற்றெழுத்து கெட்டு எதிர்மறைப் பொருண்மையில் வரும் பெயரெச்சத் தொடர், ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் எனப்படும். ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தில் ஒற்று மிகும்.

கட்டா வீடு	-	இடம்
செய்யாப் பானை	-	பொருள்
வரா நேரம்	-	காலம்
எழுதாப் பேனா	-	கருவி
ஓடாக் குதிரை	-	எழுவாய்
உண்ணாச் சோறு	-	தொழில்

தொல்காப்பிய வினையெச்சத் தொடரியல்

முனைவர் பெ. மாதையன்
பதிப்பாசிரியர்
தமிழ்ப் பேரகராதித் திட்டம்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை

தொல்காப்பியர் செய்து முதலான தனிவினையெச்ச வாய்பாடுகளைத் தந்தும் பின், முன் முதலான வினையெச்சப் பின்னொட்டுகளைக் குறிப்பிட்டுக் கூட்டு வினையெச்சங்களைக் கூறியும் வினையெச்ச வகைகளை உரைத்துள்ளார். இருந்தபோதிலும் இந்த வினையெச்சங்களின் தொடரியல் செற்பாடுகள் அவரால் விரிவாகப் பேசப்படவில்லை.என்றாலும் அவர் செய்து, செய்யூ, செய்பு எனும் வாய்பாட்டு வினையெச்சங்களின் தொடரியல் செயற்பாட்டை வரையறைப் படுத்தியுள்ளார். இது அவரின் தொடரியல் கோட்பாட்டை வகுக்கத் துணை புரியும் சான்றாக உள்ளது. இந்த அடிப்படையில் தொல்காப்பிய வினையெச்சத் தொடரியலை ஆராய்வதே இந்த ஆய்வுரையின் நோக்கம்.

வினையெச்சமும் பிற வினைமுதல் வினையும்

ஒன்பது வகையான வாய்பாடுகளைக் குறிப்பிட்டுள்ள தொல்காப்பியர் அவற்றுள் செய்து, செய்யூ, செய்பு எனும் மூன்றும் தன்வினைமுதல் வினையையே கொண்டு முடிய வேண்டும் என்ற வரையறையை,

அவற்றுள்
முதனிலை மூன்றும் வினைமுதல் முடிபின (223)

என முன்வைத்துள்ளார். இந்த இலக்கணப்படி இந்த மூன்று வினையெச்சங்களின் எச்ச வினைகளும் அவை ஏற்கும் வினைமுற்றுகளும் ஒரே வினைமுதலைக் கொண்ட வினைகளாக இருக்க வேண்டும் என்பது வரையறை. இதன்படி "நான் சமைத்துச் சாப்பிட்டேன்" எனவே செய்துவாய்பாட்டு வினையெச்சம் வரவேண்டும். இவ்வாறன்றி "அவள் சமைத்து நான் சாப்பிட்டேன்" என வருவது தொல்காப்பிய வரையறைப்படி ஏற்கத்தக்க வினையெச்சத் தொடரன்று.

உரையாசிரியரும் பிறவினை முதல் வினைக்கோட்பாடும்

"வினையெஞ்சு கிளவியும் வேறுபல் குறிய" (447) எனும் நூற்பா உரையில், "உரற்கால் யானை யொடித்துண் டெஞ்சிய -யாவரி நீழற் றுஞ்சும் (குறுந்.232) என்றவழி உண்டெடன்பது வினைமுதல் வினையொடு முடியாமையின், உண்ணாவெனத் திரித்தல் வேண்டிற்று. இந்நிகரன ஈறுதிரிந்தன" (2003: 280) எனத் தெய்வச்சிலையாரும், "முதனிலை மூன்றும் வினைமுதல் முடிபின" (230) எனும் நூற்பா உரையில், 'உரற்கால் யானை யொடித்துண் டெஞ்சிய யாஅவிரி நீழற்றுஞ்சும்' (குறுந். 232) எனச் செய்தெனெச்சம் வினைமுதல் வினையல்லா வினையன் முடிந்ததா லெனின் அது 'வினையெஞ்சு கிளவியும் வேறுபல் குறிய' (சொல். 457), என்புழிப் பெறப்படும்" (2007:275) எனச் சேனாவரையரும் தந்துள்ள விளக்கங்கள் வினையெச்சங்களின் தொடரியல் செயற்பாட்டில் எழுவாய் அமையவேண்டிய நிலைகளை உணர்த்துகின்றன. வினையெச்சங்கள் பிறவினைமுதல் வினை ஏற்றல் பற்றிக் கருத்துரைக்கும் இளம்பூரணர்,

"ஞாயிறு பட்டு வந்தான், ஞாயிறு பட வந்தான் என்பதும் ஆகற்பாலது. பட என்பது செயவென் எச்சம்; அது திரிந்து பட்டு என்னுஞ் செய்தெ னெச்சமாகி நின்றதென்பது."கோழி கூவிப் பொழுது புலர்ந்தது" என்பதூஉம் செயவெனெச்சஞ் செய்தெனெச்சமாகித் திரிந்து நின்றது என்பது. அங்ஙனம் நின்றவேனும், அவற்றைச் செயவெனெச்சமாகவுணர்ந்து கொளல் வேண்டும். அல்லாக்காற் சொன்முடிபு எய்தாது. என்னை, 'ஞாயிறு பட்டு' என்றக்கால் வந்தான் என்றலும் முடியற்பாலது. பின்னும் ஞாயிற்றின் மேல் வினைகொண்டு முடியற்பாற்று", "முதனிலை மூன்றும் வினைமுதல் முடிபின " (தொல். சொல்.வினை. 31) என்று உரைத்தாராகலின் என்பது. கோழி கூவப் பொழுது புலர்ந்தது என்பதற்கும் அஃது ஒக்கும் (2003: 255) என உரைவிளக்கம் கூறியுள்ளார். தெய்வச்சிலையார் கருத்துப்படி செய்து வாய்பாட்டு எச்சத்தை "செய்யா" எனவும் இளம்பூரணர் கருத்துப்படி "செய்ய" எனவும் திரித்துக்கொள்ள வேண்டும். இலக்கியங்களில் பயின்றுவந்துள்ள செய்யா வாய்பாட்டெச்சம் "உண்ணா வந்தான்" என வருகின்ற நிலையில் உடன்பாட்டுப் பொருளில் "உண்டு வந்தான்" எனவே பெரும்பாலும் வந்துள்ளது. எனவே செய்து வாய்பாட்டு எச்சத்தைச் செய்யா எனத் தெய்வச்சிலையார் திரித்துக் கொண்டுள்ளது பொருந்தாது. பவணந்தியார் "முதலில் நான்கும் ஈற்றில் மூன்றும் வினைமுதல் கொள்ளும்" (344) எனக் கூறி முதலில் நான்கு எனும் வரையறையில் (செய்து, செய்பு, செய்யா, செய்யூ) இச்செய்யா வாய்பாட்டெச்சத்தையும் அடக்கி அது

பிறவினைமுதல் வினை ஏற்காது எனக் குறித்திருப்பதையும் நாம் இங்கே எண்ணிப்பார்க்க வேண்டும்.

"வினையெஞ்சு கிளவியும் வேறுபல் குறிய"

எனும் நூற்பாவிற்கான விளக்கத்தில்,

> "ஒடித்துண்டெஞ்சிய என்பதூஉம் ஞாயிறு பட்டு வந்தான் என்பதூஉம் பிறவினை கொண்டனவாயினும் செய்தெ னெச்சத்திற்குரிய இறந்தகாலம் உணர்த்தலான் ஏனைக் காலத்திற்குரிய செயவெனெச்சத்தின் திரிபெனப்படா; செயவெனெச்சத் திரிபாயிற் செயவென் எச்சத்திற்குரிய காலமுணர்த்தல் வேண்டும். மழை பெய்ய மரங்குழைத்தது எனச் செயவெனெச்சத்திற்கு இறந்தகாலமு முரித்தெனின்:- காரணகாரியப் பொருண்மை யுணர்த்தும் வழியல்லது செயவென் எச்சம் இறந்தகாலம் உணர்த்தாது. ஒடித்துண்டலும் ஞாயிறு படுதலும் எஞ்சுதற்கும் வருதற்கும் காரண மன்மையின் ஆண்டிறந்தகால முணர்த்தாமையின் செய்தெனெச்சமாய் நின்று தமக்குரிய இறந்தகால முணர்த்தினவெனப்படும். அதனால் செயவெனெச்சஞ் செய்தெனெச்சமாய்த் திரிந்தன வென்றலும் அவர் கருத்தின்றென்க.ஞாயிறு பட்டு வந்தான் என்பது ஞாயிறுபட்டபின் வந்தான் என இறந்தகால முணர்த்தலும் ஞாயிறுபட வந்தான் என்பது ஞாயிறு படநிற்க வந்தான் என நிகழ்கால முணர்த்தலும் வழக்கு நோக்கிக் கண்டுகொள்க" (2007: 427)

எனச் சேனாவரையர் இவற்றைச் செய்தெனெச்சங்களாகவே கொண்டு இறந்தகாலம் உணர்த்தி வந்தனவாகக் கொண்டுள்ளார். கண் நொந்து கிடந்தான், கண் துயின்று முன்றிற் போகா முதிர்வினள் யாய் (புறம்.159:4,5), தாளொற்றித் தப்பி வீழ்ந்தார் தறிவலை மானிற் பட்டார் (சீவக. 2768) என வருவன காரண காரியப் பொருட்டாய்ச் சினைப் பொருட்கண் வந்த வினையெச்சங்கள் என்கிறார் நச்சினார்க்கினியர் (2003:215). அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து நல்விருந்து ஓம்புவான் இல் (குறள், 84) என்பது காரணகாரியம் இன்றிப் பிறவினை கொண்டது என்கிறார் (மேலது).

> "தலைவன் பிரிந்து வருந்தினாள் எனவும் 'மாஅல் யானையொடு மறவர் மயங்கித் தூறதர் பட்ட ஆறுமயங் கருஞ்சுரம்' (கலி. 5: 2,3) எனவும் 'உடம்புயங்கி யானை, கடுந்தாம் பதிபாங்குக் கைதெறப் பட்டு

வெறிநிரை வேறாகச் சார்ச்சாரல் ஓடி, நெறிமயக்குற்ற' (கலி. 12: 4-7) எனவும் காரணகாரியப் பொருளவாய்த் தமக்கு உரிய வினைமுதலானன்றிப் பிற வினை முதலான் முடிந்தன" (2003: 216)

"ஞாயிறு பட்டு வந்தான்; ஞாயிறு படூஉ வந்தான்; ஞாயிறு படுபு வந்தான் என்பன காரணகாரியமின்றி அங்ஙனம் வந்தன. "உரற்கால் யானை ஒடித்துண்டெஞ்சிய யா" (குறுந். 232) என்பதும் அது" (மேலது)

என்கிறார் நச்சினார்க்கினியர். ஆக, உரையாசிரியர்கள் செய்தெனெச்சம் பிறவினைமுதல் வினை ஏற்கும் இடங்களில் அதைச் செய்யா, செய எனும் வாய்பாட்டெச்சங்களாகக் கொள்வதற்கு மறுபுறத்தே நச்சினார்க்கினியர் காரணகாரியத்துடனும் காரணகாரியமின்றியும் செய்து வாய்பாட்டு வினையெச்சம் பிறவினைமுதல் வினைகொண்டுவரலாம் என்கிறார். சேனாவரையர் இறந்தகாலம் உணர்த்தி வந்து பிறவினை முதல்வினை கொண்டது செய்தென் எச்சம் என்கிறார்.ஆக இவ்விருவரும் செய்து வாய்பாட்டெச்சம் பிறவினைமுதல் வினை கொள்வதை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

வினையெச்சங்கள் பிறவினைமுதல்வினை ஏற்கும் புறனடை

தொல்காப்பியர் மேற்படி எச்சங்கள் பிறவினைமுதல் வினைகளை ஏற்பதற்கான சூழல் ஒன்றையும்,

அம்முக் கிளவியுஞ் சினைவினை தோன்றின்
சினையொடு முடியா முதலொடு முடியினும்
வினையோ ரனைய என்மனார் புலவர் (225)

எனக் குறிப்பிட்டுள்ளார். இந்த வரையறைப்படி "கை ஒடிந்து விழுந்தது"என வருவதோடு "கை ஒடிந்து விழுந்தான்" எனச் சினைவினை தனக்குரிய முதல்வினையைக் கொண்டு முடியலாம். எனவே தொல்காப்பியருக்கு "நான் சொல்லி அவன் எழுதினான்", "மழை பெய்து ஊர் அழியும்", "புயலடித்து ஊர் அழிந்தது" என எச்சத்திற்கொன்றும் வினைமுற்றிற்கொன்றுமாகச் செய்தென் எச்சம் பிறவினைமுதல் வின்னைகளை ஏற்று வருவன ஏற்புடைய வினையெச்சத் தொடர்கள் அல்ல.

செய்து வாய்பாட்டு எச்சத்தின் கால இயைபு

செய்தெ னெச்சத் திறந்த காலம்
எய்திட னுடைத்தே வாராக் காலம் (234)

எனத் தொல்காப்பியர் செய்தென் எச்சம் இறந்தகாலம் உடையது என்பதையும் அது எதிர்காலத்தையும் ஏற்றுவரலாம் என்பதையும் குறிப்பிட்டுள்ளார். இதன்படி "உண்டு வந்தான்" என்பதுடன் "உண்டு வருவான்" என்பதும் ஏற்றுக் கொள்ளப்படும் என்கிறார் தொல்காப்பியர். இந்நூற்பாவிற்கு இளம்பூரணர்,

> *"இறந்த காலத்துச் செய்தெனெச்சம் ஒழிந்த நிகழ்காலமும் எதிர்காலமும் கொள்வழி யுடைத்து" (2003:175)*

எனப் பொருள் கூறி, "செய்தெனெச்சம் நிகழ்காலத்திற்கு ஏற்றது, கொடியாடித் தோன்றும் என்பது; என்னை? தோற்றமும் ஆட்டமும் உடனிகழுமாகலின் என்பது. இனி, உழுது வருஞ் சாத்தன், உண்டு வரும் சாத்தன் என்புழிச் செய்தெனெச்சம் எதிர்காலத்திற்கு ஏற்றது" (மேலது) எனச் சான்றுகளைக் காட்டியுள்ளார்.ஆக, எச்சம் மூன்று கால வினைச்சொற்களையும் ஏற்று வரலாம் என்பது இளம்பூரணர் கருத்தாகின்றது. இதற்குச் சேனாவரையர் நீயுண்டு வருவாய், உழுது வருவாய் என்பனவற்றைச் சான்றுகளாகக் காட்டி செய்து வாய்பாட்டு எச்சம் எதிர்காலத்தை ஏற்று வந்ததைக் குறிப்பிட்டுள்ளார் (2007: 286).

நச்சினார்க்கினியர்,

> "நீ உண்டு வருவாய் என்பது நாளை உண்டு வருவாய் என்னும் பொருள் உணர்த்தவும், வருதல் தொழிலுக்கு உண்டல் தொழில் முன்நிகழ்ந்து ஆண்டும் தன் இறந்த காலமே உணர்த்திற்றாம்.கொடி ஆடித் தோன்றும் என்புழித் தோற்றமும் ஆட்டமும் உடன் நிகழ்தலின் செய்து என்பது நிகழ்காலத்திற்கும் உரித்து ஆதல் வாராக்காலம் எனவே அடங்கும்" (2003: 223)

எனச் சான்றுகாட்டிச் செய்து வாய்பாட்டு வினையெச்சம் பிறகால வினைமுற்றுகளை ஏற்றுவந்தாலும் தன் இறந்தகாலத்தில் மாற்றம் இன்றி முன்னிகழ்வாகவே இருப்பதை விளக்கியுள்ளார். இந்நூற்பாவிற்கான உரையில், "இறந்த காலத்தாற் கூறப்படும் வினை அது நிகழ்ந்துழிக் கூறுதலன்றி, நிகழாத முன்னும் அவ்வாய்பாட்டான் வரப்பெறும் என்றவாறாம்" (2003: 190) எனக் கூறி "நாளை உழுது வருவன்", "இனித் தவம் செய்து சுவர்க்கம் புகும்" என்பனவற்றைச் சான்றுகளாகக் காட்டி எதிர்காலம் ஏற்கும் செய்தென் எச்சத் தன்மையை விளக்கியுள்ளார் தெய்வச்சிலையார். நச்சினார்க்கினியர்,

> "ஒன்றென முடித்தலான் செய்யூ, செய்பு என்பன வற்றிற்கும் ஒழிந்த எச்சங்கட்கும் இம்மயக்கங்கொள்க" (2003:223)

என வினையெச்சங்கள் ஏற்கும் வினைகளின் காலவரையறையை உரைத்துள்ளார். பாவலர் ச. பாலசுந்தரம்,உண்டுவருவான் என்பதைக் காட்டி,

> "உண்ணுதல் தொழில் நிகழாமையும் உண்ணுதலும் வருதலும் எதிர்காலத்தவாய் நிற்கின்றமையும் நோக்கி எய்திடன் உடைத்தே வாராக்காலம் என்றார்" (2013: 216)

எனவும்

> "செய்து என்பது இறந்தகாலத்திற்குரியது என்பதை உணரவைத்து அது மயங்கும் என்பதும் கூறப்பட்டது" (மேலது)

எனவும் கூறியுள்ளார். ஆக, உரையாசிரியர்கள் செய்துவாய்பாட்டு எச்சத்தின் செயலை முன்னிகழ்வாகக் கொண்டு அதாவது வினைமுற்றின் செயலுக்கு முன்னே நிகழ்வதாகக் கொண்டு அதையே இறந்தகாலம் எனக் குறிப்பிட்டுள்ளனர். இந்த முன்னிகழ்வாகிய இறந்தகாலப் பொருண்மை மாறாமல் அது எதிர்கால வினைமுற்றை ஏற்று வந்தது என்றுள்ளனர். இவற்றின் அடிப்படையிலும் தொல்காப்பிய இலக்கணக் கோட்பாட்டின் அடிப்படையிலும் தொல்காப்பியரின் வினையெச்சத் தொடரியல் ஆராயப்பட வேண்டியதாக உள்ளது.

தொல்காப்பிய வினையெச்சத் தொடரியல் கோட்பாடு

மேலே கண்ட தொல்காப்பிய இலக்கண வரையறைகளும் உரையாசிரியர் களின் விளக்கங்களும் செய்து வாய்பாட்டு வினையெச்சத்தின் தொடரியல் கோட்பாட்டில் அது பிற வினைமுதல் வினையை ஏற்காமை, இறந்த காலத்தை உணர்த்தும் செய்து வாய்பாட்டு எச்சத்தின் எதிர்கால ஏற்புநிலை என்ற இரண்டை முன்வைத்துள்ளன. நச்சினார்க்கினியர் செய்துவாய்பாட்டு வினையெச்சங்களைத் திரிக்காமல் வந்தவாறே கொண்டு காரணகாரியப் பொருண்மை, அது இன்மை எனும் இரண்டின் அடிப்படையிலும் அது பிறவினை முதல் வினையை ஏற்று வரலாம் என்பதை உரைத்துள்ளார். பிறர் இதனைச் செயவென் எச்சமாகவும் செய்யா எனும் எச்சமாகவும் திரித்துக் கொள்ள வேண்டும் என்றுள்ளனர். இந்த வரையறைகள் அவரவர் காலகட்ட மொழித் தரவையும் அவரவர் கொள்கையையும் சார்ந்தனவாக உள்ளனவே அன்றித் தொல்காப்பியரின் வினையெச்சத் தொடரியலை விளக்குவனவாக அமையவில்லை.

தொல்காப்பியர்தம் வரையறை எதைச் செய்து வாய்பாட்டு வினையெச்சத் தொடரியலாக முன்வைத்துள்ளது என்பது ஆய்வுக்குரியது. "படித்து எழுதினேன்", "படித்து எழுதினாள்", "படித்து எழுதியது", "படித்து எழுதுவார்கள்" என வருவன இயல்பான தொடர்களாகத் தொல்காப்பியரால் ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளன. இவ்வடிப்படையில்"சமைத்துச் சாப்பிட்டோம்" எனும் வினையெச்சத் தொடரின் எழுவாய் நாங்கள் என்பதாகவே இருக்க வேண்டும் என்பதே தொல்காப்பிய வரையறை. இந்த வினையெச்சத் தொடரின் புதைவடிவம் "நாங்கள் சமைத்தோம்" "நாங்கள் சாப்பிட்டோம்"எனும் இருதொடர்களாகவே உள்ளன. ஆக, தொல்காப்பிய இலக்கண வரையறைப்படி இரண்டு வினைமுற்றுத் தொடர்கள் இணைந்து செய்து வாய்பாட்டு எச்சத்தொடர்கள் அமைய வேண்டும் என்றால் அவ்விரு தொடர்களும் ஒரே எழுவாயைக் கொண்டனவாக இருக்க வேண்டும். ஆனால் இக்காலமொழி வழக்கில் "அம்மா சமைத்து நாங்கள் சாப்பிட்டோம்" என்ற நிலையில் அமையும் செய்து வாய்பாட்டு எச்சத்தொடர்கள் ஏற்படையனவாகவே உள்ளன.இந்தத் தொடரின் புதைநிலை வடிவம் "அம்மா சமைத்தாள்","நாங்கள் சாப்பிட்டோம்" என்ற இருதொடர்களைக் கொண்டது. இந்த இரு எழுவாய் நிலைகளையே தொல்காப்பியர் மறுத்துள்ளார் எனக் கொள்வது பொருந்தும்.

"படித்து எழுதினேன்", "படிக்க எழுதினேன்" என்ற இரு தொடர்களில் முதலாவது எச்சத்தொடர் "நான் படித்து நான் எழுதினேன்" எனவும் "பிறர் படித்து நான் எழுதினேன்" எனவும் அமையலாம். இவ்வாறே "படிக்க எழுதினேன்" என்ற தொடர் "படிப்பதற்காக எழுதினேன்" எனும் நிலையிலும் "பிறர் படிக்க நான் எழுதினேன்" என்ற நிலையிலும் வரலாம். இந்த அடிப்படையில் தொல்காப்பியர் மேற்காட்டியது போன்று இருவேறு எழுவாய்களை உடைய முற்றுத் தொடர்களை வினையெச்சத் தொடர்களாக ஆக்கக் கூடாது என்கிறார். எனவே, தொல்காப்பிய வரையறைப்படி செய்து வாய்பாட்டு எச்சத் தொடரிலக்கணம்"மழை பெய்து வெள்ளம் வந்தது", "மருந்துண்டு நோய் தீர்ந்தது" எனும் எச்சத் தொடர்களைத் தவிர்ப்பதாக உள்ளது. தொல்காப்பியர் செய்தென் எச்சம் பிறவினை முதல் வினை ஏற்பதற்குத் தந்துள்ள சினை வினை முதல் வினை ஏற்பைப் போலவே பல நிலைகளில் செய்து வாய்பாட்டு எச்சம் பிற வினை முதல் வினைகளை ஏற்று வரும் இயல்பைச் சங்ககாலந் தொட்டு வரும் மொழி வழக்கிலும் இக்கால மொழிவழக்கிலும் பரவலாகக் காண்கின்றோம். இக்கால மொழிவழக்கில் செய்து வாய்பாட்டெச்சம் பிற வினைமுதல் வினை ஏற்பது பற்றிதனி ஆய்வு ஜேம்ஸ் லின்டோம் என்பவரால் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் தொல்காப்பியரே இந்த ஏற்புக்கு வித்திட்டவராக உள்ளார்.

"தூங்கி எழுந்தான்", "தூங்கி எழுந்தன", "தூங்கி எழுகிறார்கள்" எனும் தொடர்கள் முறையே "தூங்கினான் எழுந்தான்", "தூங்கின எழுந்தன", "தூங்குகிறார்கள் எழுகிறார்கள்" எனும் முற்றுகளின் எச்சவடிவங்களே ஆகும். இங்குத் தூங்கி என்ற ஒரே வடிவம் தான் ஏற்றுவரும் வினைமுற்றின் எழுவாய்க்கு, திணை பால் இட அடிப்படைக்கு ஏற்ப எப்படி விரிகின்றதோ அவ்வாறே தான் ஏற்கும் வினையின் காலத்திற்கு ஏற்பவும் விரிகின்றது. இங்குச் செய்து வாய்பாட்டில் அமையும் ஒரே வடிவத்தை, நாம் வினையெச்சம் ஏற்கும் வினைமுற்றிற்கு ஏற்ற கால வடிவங்களிலிருந்தே தருவித்துக்கொள்ள வேண்டியுள்ளது. இதனால் செய்து வாய்பாட்டு எச்சம் இறந்தகால வினைமுற்றின் புறநிலை வடிவமாக மட்டுமே கொள்ளத்தக்கது அல்ல. அது ஏற்கும் வினைமுற்றினுக்கு முன்னே நிகழும் முன்னிகழ்வுப் பொருண்மையை எல்லா இடங்களிலும் பெற்று வந்தாலும் ஏற்கும் மூன்றுகால வினைமுற்று வடிவங்களிலிருந்தும் தருவித்துக்கொள்ளத்தக்கதாக உள்ளது. இவ்வாறு செய்து வாய்பாட்டு எச்சம் முன்னிகழ்வாய் நின்றாலும் அது எதிர்காலத்தையும் தழுவி வரும், அதாவது எதிர்கால வினைமுற்றுச் சொல்லையும் புதைநிலை வடிவினதாகக் கொண்டு செயற்படும் என்பதே "செய்தென் எச்சத்து இறந்தகாலம் எய்திடன் உடைத்தே வாராக்காலம்" எனத் தொல்காப்பியரால் வரையறைப்படுத்தப்பட்டுள்ளது எனக் கொள்ளலாம்.

துணை நூல்கள்

1. *தொல்காப்பியம் சொல்லதிகாரம் இளம்பூரணம், 2003.தமிழ்மண் பதிப்பகம், சென்னை.*
2. *தொல்காப்பியம் சொல்லதிகாரம் தெய்வச்சிலையம், 2003. தமிழ்மண் பதிப்பகம், சென்னை.*
3. *தொல்காப்பியம் சொல்லதிகாரம் நச்சினார்க்கினியம், 2003.தமிழ்மண் பதிப்பகம், சென்னை.*
4. *தொல்காப்பியம் சொல்லதிகார மூலமும் சேனாவரையருரையும், 2007. கணேசையர் பதிப்பு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.*
5. *தொல்காப்பியம் (தொகுதி-2) சொல்லதிகாரம் ஆராய்ச்சிக் காண்டிகையுரை, 2012.ச. பாலசுந்தரம் (உ.ஆ.), பெரியார் பல்கலைக்கழகம், சேலம்.*
6. *நன்னூல் மூலமும் சங்கர நமச்சிவாயப் புலவர் இயற்றிச் சிவஞான முனிவர் திருத்திய விருத்தியுரையும், 1974.மறுபதிப்பு, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.*

வேற்றுமையியலிலும் வேற்றுமை மயங்கியலிலும் தொடரியல் கருத்துகள்

முனைவர் ந. முருகையன்
செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், தரமணி, சென்னை

தொடரியல்

மொழியியலார் மொழியில் முக்கியமாக மூன்று பகுதிகள் (Parts or areas) அல்லது துறைகள் (Departments) அல்லது கட்டமைப்புகள் (Building Blocks) உள்ளதாகக் கருதுகிறார்கள். அவற்றை முறையே i) உச்சரிப்பு (Pronunciation) அல்லது எழுத்து (Orthography) என்றும் ii) இலக்கணம் அல்லது தொடரியல் (Grammar or Syntax) என்றும் iii) கிளவி அல்லது பொருள் (lexis or semantics) என்றும் இனம் கண்டு கொள்வார்கள். இடையில் நடுநாயகமாக உள்ள தொடரியல் முன்னே உள்ள உச்சரிப்போடும் அடுத்ததாக உள்ள பொருளியலோடும் தொடர்புடையது. எனவே அடை இருமுனைக் குறியீட்டைப் (<------->) (Double-headed arrows) பயன்படுத்தி விளக்கிடுவார்கள். இலக்கணத்தைப் பற்றிப்பேசும் மொழியியலார் முதலில் விவரிக்க முற்படுவது தொடரியலைத்தான். மொழியை ஒரு மரத்துக்கோ அல்லது செடிக்கோ ஒப்பிடுவோமேயானால், அதன் மூன்று பகுதிகளான வேர், தண்டு மற்றும் கிளையிலை ஆகிய மூன்றுக்கும் இணையாக மொழியில் பொருளியல் (Semantics), தொடரியல் (Syntax), ஒலியனியல் (Phonology) அல்லது எழுத்து (Orthography) இருப்பதைக் கண்டு கொள்ளலாம். எனவே மொழியென்னும் வளர்ந்து வரும் மரத்தின் வேர் பொருண்மையியல் என்றும், அதன் தண்டு தொடரியல் என்றும் அதன் கிளை இலை பூக்கள் பேச்சு மொழியோடு தொடர்புடைய ஒலியன்களை ஒரு புறத்தும் எழுத்து மொழியோடு தொடர்புடைய எழுத்துகளை மற்றொரு புறத்தும் நமக்கு நினைவூட்டி நிற்கின்றன. இத்தருணத்தில் மொழி எங்கெங்கெல்லாம் பயன்படுத்தப்படுகிறதோ அங்கெங்கெல்லாம் அது இரு வகையாகப் பயன்படுத்தப்படுகிறது. அவற்றின் பெயர்கள் முறையே பேச்சு (Speech) எழுத்து (Writing) என்பனவாகின்றன என்பனவற்றையும் நினைவுகூர்தல் பொருத்தமாகும்.

தொடரியல் கருத்துகள் தொல்காப்பியத்தில் எழுத்து, சொல்,

பொருள் ஆகிய மூன்று அதிகாரங்களிலும் விரவிக்கிடக்கின்றன. மேற்கண்ட வாக்கியத்தைக் கருதுகோளாகக் கொண்டு தொல்காப்பியத்தின் மூன்று அதிகாரங்களிலு முள்ள இயல்களில் காணப்படும் தொடரியல் கருத்துகளைத் தொகுத்து வகைப்படுத்தி பயன்பாட்டு வேறுபாடுகளை விளக்கிடுவது தொல்காப்பிய ஆராய்ச்சியில் பலனளிக்கக் கூடிய முயற்சிகளில் ஒன்றாக அமையலாம். இக்கட்டுரையின் நோக்கம் தொடரியல் கருத்துகள் வேற்றுமையியலிலும் வேற்றுமை மயங்கியலிலும் எப்படி பயன்பாடு பெறுகின்றன என்பதை விளக்கிக் குறிப்பிடுவதேயாகும்.

வேற்றுமை

வேற்றுமை (Case) இலக்கணத்தைச் சேரும் வகைப்பாடுடையது. அது ஒரு தொடரிலோ அல்லது வாக்கியத்திலோ செயலாக்கம் பெறும் இலக்கணப் பயன்பாட்டை நிகழ்த்துகிறது. ஒரு சில மொழிகளில் பெயரோ அல்லது மாற்றுப் பெயரோ அதோடு இணைந்துவரும் பெயரடையோ அவை எந்த வேற்றுமையுடன் பயன்படுத்தப்படுகின்றனவோ அதற்கேற்ப உருமாற்றமடைகின்றன (Forms get inflected). ஆங்கில மொழி அதன் வேற்றுமை அமைப்பைப் பெரும்பாலும் இழந்துவிட்டது. அதில் மாற்றுப் பெயர்களை (Pronouns) பயன்படுத்தும்போது மட்டும் வேற்றுமை பயன்பாடு காணப்படுகின்றது. ஆனால் தொன்மையான மொழிகளாகிய கிரேக்கம், இலத்தீனம், வடமொழி (சமஸ்கிருதம்), தமிழ், இரஷ்யன், செர்போ குரோஷியன், பின்னிஷ் ஆகிய மொழிகள் வேற்றுமை அமைப்பைப் பெருமளவில் பயன்படுத்துகிற மொழிகளாகின்றன. வேற்றுமை உருபு எல்லா மொழிகளிலும் காணப்படுகின்ற அமைப்பு என்றும் அது முன்னுருபாகவும் (Prepositions) அல்லது பின்னுருபாகவும் (Postpositions) அல்லது ஒட்டாகவும் (Affixes) வெளிப்படுகின்றது என்று குக் (Cook) கூறுகிறார். சார்லஸ் ஜெ பில்மோர் என்பார் வேற்றுமை இலக்கணம் ஒரு பொருளியல் (Semantics) இலக்கணம் என்று குறிப்பிடுகிறார்.

தொல்காப்பியத்தில் வேற்றுமை பற்றிய கருத்துகள்

ஸ்வெலபில் (1982: 16) குறிப்பிடுவதைப்போல வேற்றுமை உருபுகளைப் பற்றிய கருத்துகளை சொல்லதிகாரத்தில் உள்ள வேற்றுமையியலில் வேற்றுமை உருபுகளோடு ஏழு வேற்றுமைகள் பற்றி அவற்றின் அடிப்படைப் பொருளோடு அடுத்த நிலையில் உள்ள பொருள்களை விளக்கியும், அவ்வதிகாரத்தையே சேர்ந்த வேற்றுமை மயங்கியலில், வேற்றுமை உருபுகளின் பயன்பாடு (functional syncretism) ஒன்றாவதை விளக்கியும் உள்ளார். விளி மரபென்றயியலில் விளிவேற்றுமையைப் பற்றிப் பேசுகிறார். ஒரு வாக்கியத்தில் வரும் பெயர், அந்த வாக்கியத்தில் உள்ள

எழுவாயின் வினையாக உள்ளத்தால், பெயரை வேற்றுமை இயலில் இணைத்துப் பேசுகிறார். அதே சமயத்தில் விளி வேற்றுமையை மற்ற வேற்றுமைகளைப் பேசுமிடத்தில் பேசாமல், தனியாகப் பேசுவதற்குக் காரணம் விளி வேற்றுமையில் பெயருக்கும் வினைக்கும் உள்ள தொடர்பைப் பேச வாய்ப்பு இல்லாததால் தான் என்பது நமக்குப் புலனாகிறது.

வேற்றுமையியல்

தொல்காப்பியர் இவ்வியலில் 62 முதல் 83 வரையில் உள்ள 22 நூற்பாக்களில், ஏழு வேற்றுமைகளை விளக்குகிறார். ஆறு நூற்பாக்களில் முதல் வேற்றுமையை விவரிப்பவர் 2 முதல் 7 வரை உள்ள ஆறு வேற்றுமைகளை 12 நூற்பாக்களிலும், இவ்வியலோடு இணந்த பொதுவான கருத்துகளை முதல் மூன்று நூற்பாக்களிலும் கடைசி நூற்பாவிலும் அளிக்கிறார். முதல் வேற்றுமையை எழுவாய்ப் பெயர்வேற்றுமை என்று கூறப்படுகிறது. அதன் உருபு சுழி (பூஜ்யம்) என்று மொழியியலார் கூறுவர். எழுவாய் அல்லது பெயர் ஒரு வினையின் எழுவாயாக அல்லது அவ்வினையுடன் கூடி செயல் நிகழ்த்தும் நிலை உள்ளதால் தொல்காப்பியர் ‘எழுவாய் வேற்றுமை பெயர் தோன்று நிலையே’ என்று கூறி வேற்றுமையியலில் அதை முதலில் வைக்கிறார். பெயர் என்னும் சொல் ஒரு வடிவச்சொல் (Formal term). பெயர்ச்சொல் எழுவாயாக பயன்படுவதால் அது பயனிலை என்று கூறப்படுகிறது. மேற்கண்ட நூற்பாவில் தொல்காப்பியர் வடிவச்சொல்லான பெயர் என்பதையும் பயன்பாட்டுச்சொல்லான (Functional Term) எழுவாய் என்னும் சொல்லையும் பயன்படுதுகிறார். அதற்கு அடுத்த நூற்பாவான 66ல் பொருண்மை சுட்டல், வியங்கொளவருதல் முதலான ஆறு பயன்பாட்டுத் தொடர்களை காண்கிறோம். இவை பெயரின் பயனிலைகள். ஆங்கில மொழியில் பெயர் எழுவாயகவும், செயப்படுபொருளாகவும், பொருள் நிரப்பியாகவும், முன்னுருபின் செயப்படுபொருளாகவும் என்று கூறப்படுவதைபோல பெயரின் பயன்பாட்டில் சிலவற்றை பட்டியலிட்டுக் காட்டுகிறார்.

பொருண்மை சுட்டல், வியங்கொள வருதல்,
வினை நிலை உரைத்தல், வினாவிற்கு ஏற்றல்,
பண்பு கொள வருதல், பெயர் கொள வருதல், என்று
அன்றி அனைத்தும் பெயர்ப் பயனிலையே.

மற்றும் இசுரேல் குறிப்பிடுவதைப் போன்று எழுவாய் என்று சொன்னலே பயனிலை இருக்கிறது என்று பொருள். ஏனெனில் பயனிலை இல்லாமல் எழுவாய் இருக்கமுடியாது. எழுவாய்ப் பெயர் என்று சொல்லதிகாரம் 65 வது நூற்பாவிலே சுட்டிய

தொல்காப்பியர், 66 வது மேற்கண்ட நூற்பாவிலே எழுவாயின் பயனிலைகளின் மாதிரிகளைப் பட்டியலிட்டுக் காட்டுகிறார்.

வடிவச்சொற்களும் பயன்பாட்டுச் சொற்களும்

மொழியியலார் விவரிக்கும் வடிவச்சொற்களுக்கும் பயன்பாட்டுச் சொற்களுக்கும் இடையிலே உள்ள வேறுபாடு மொழியை எளிதாகப் பேச்சு வழக்கிலும் எழுத்து வழக்கிலும் பயன்படுத்திட உதவும் என்ற கருத்து இத்தருணத்தில் வெளிப்படுகிறது. மற்றும் மரபிலக்கணம் வடிவங்களை அடிப்படையாகக் கொண்ட மொழி வருணனைகளுக்கு முன்னுரிமை கொடுத்து வந்தது என்ற கருத்தையும் இத்தருணத்தில் பதிவு செய்வது கட்டாயத் தேவையாகிறது. ஆனால் தற்சமயம் பயன்பாட்டை அடிப்படையாகக் கொண்ட மொழி வருணனைகள் மொழிப் பயன்பாட்டுத் துறைகளான மொழிபயிலல், பயிற்றுவித்தல், மொழிபெயர்ப்பு, அகராதியியல் ஆகிய துறைகளில் பெரிதும் பயனளிக்கும் நிலையை இன்று காண்கிறோம்.

இரண்டாம் வேற்றுமை

இரண்டாகுவதே,

'ஐ' எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி; எவ் வழி வரினும், வினையே, வினைக்குறிப்பு,

அவ் இரு முதலின் தோன்றும், அதுவே. (சொல். 71)

தெய்வச்சிலையார் மேலேகண்ட நூற்பாவில் உள்ள வினை, வினைக்குறிப்பு என்னும் சொற்களைக் கீழ்க்கண்டவாறு விளக்குகிறார்:

“வினை என்பது செயல். வினைக்குறிப்பு என்பது அவ்வினையாற் குறிக்கப்பட்ட பொருள். அஃதாவது செயஃப்படுபொருள்.”

மேற்கண்ட விளக்கம் தெய்வச்சிலையார் உரையில் மட்டுமே காணப்படுகிறது. மற்ற உரையாசிரியர்களான சேனாவரையரிடமோ அல்லது கல்லாடரிடமோ காணப்படவில்லை. உரையாசிரியர்கள் ஒவ்வொருவரும் நூற்பாவுடன் தொடர்புடைய ஒருசில கருத்துகளையே அளிக்கிறார்கள். எனவே ஒவ்வொரு நூற்பாவுக்கும் எல்லா உரையாசிரியர்களின் கருத்துகளையும் அறிந்திருத்தல் நூற்பாவில் வலியுறுத்தப்படும் கருத்தைத் தெளிவுபட அறிந்து கொள்ள அனுகூலமாய் இருக்கும்.

எழுவாய்ப் பெயரை அல்லது முதல் வேற்றுமையை ஆறு சூத்திரங்களில் விவரித்த தொல்காப்பியர் இரண்டாம் வேற்றுமையை

இரண்டு நூற்பாக்களில் மட்டும் பேசுகிறார். நேரடிச் செயப்படுபொருளைப் பற்றிப் பேசுகிற வேற்றுமை இரண்டாம் வேற்றுமை எனக் கூறப்படுகிறது. மற்றும் மேற்கண்ட நூற்பா இரண்டாம் வேற்றுமை 'ஐ' உருபின் பயன்பாடு வாக்கியத்தில் செயப்படு பொருள் குன்றாவினை இருப்பதைப் பொருத்திருக்கிறது. அவ்வாக்கியத்தில் உள்ள வினையின் செயப்படு பொருள் இரண்டாம் வேற்றுமையில் இருக்கும்.

வடமொழி வேற்றுமைகள்

வடமொழியிலும் வேற்றுமைகள் உள்ளன. அவற்றை விபக்தி என்று வடமொழியாளர் குறிப்பிடுவர். வடமொழியில் உள்ள வேற்றுமைகளை முறையே பிரதம விபக்தி (முதல் வேற்றுமை), த்விதியா விபக்தி இரண்டாம் வேற்றுமை, திரிதியா விபக்தி மூன்றாம் வேற்றுமை, சதுர்த்தி விபக்தி நான்காம் வேற்றுமை, பஞ்சமி விபக்தி ஐந்தாம் வேற்றுமை, சஷ்டி விபக்தி ஆறாம் வேற்றுமை சப்தமி விபக்தி ஏழாம் வேற்றுமை என்றும், இருமொழிகளிலும் விளி வேற்றுமை எட்டாம் வேற்றுமை என்றும் அழைக்கப்படுகின்றன. 17-18 நூற்றாண்டைச் சார்ந்த சுப்பிரமனிய தேசிகர் வடமொழி மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் வேற்றுமைகளைக் குறிக்க ஒரே வரிசையில் ஒன்று முதல் எட்டு வரை உள்ள எண்கள் பயன் படுத்தப்படுவதால் தமிழ் வடமொழியின் இலக்கண அமைப்பைப் பின் பற்றுகிறது என்று குறிப்பிட்டார். ஆனால் கால்டுவெல் அவரது

திராவிட ஒப்பிலக்கண நூலில் (1875) இக்கருத்தை வன்மையாகக் கண்டித்து "இது தமிழின் உயர்வையும் தனித்துவத்தையும் ஏற்க மனமின்றி அதைக் குறைத்து மதிப்பிடுவார் கூற்று" என்று குறிப்பிடுகிறார். தமிழில் உள்ள வேற்றுமைகளுக்கு அளிக்கப்பட்டுள்ள எண் வரிசையைப் பற்றி 64 வது நூற்பாவுக்கு அவர் அளித்த விருத்தி உரையில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுவது கருத்தில் கொள்ளற்பாலது:

"ஐ இரண்டாவதென்றும், ஒடு வினை மூன்றாவதென்றும், இவ்வாறே இவை கூறுதற்குக் காரணம் உண்டோவெனில், காரணமும் இல்லை. காரணம் இல்லை யெனின் வேண்டியவாறு கூறினும் அமையும் எனின், அமையாது, முன்னூலுள் ஓதிய முறை அதுவென்பது."

இரண்டாம் வேற்றுமை : திரிபுகளைப் எழுத்ததிகாரம் 157வது நூற்பா பேசுகிறது. உயர்திணை மற்றும் பொதுப் பெயர்களோடு ஐ வேற்றுமைப் பயன்பாடு தேவை என்றும் அஃறிணைப் பெயர்களோடு அதன் பயன்பாடு பயன்படுத்துவார் விருப்பத்திற்கேற்ப பய்ன்படுத்தலாம் என்றும் கூறப்படுகிறது.

மூன்றாம் வேற்றுமை

இவ்வேற்றுமை 73 மற்றும் 74 ஆகிய நூற்பாக்களில் பேசப்படுகிறது. இதை ஒடு வேற்றுமை என்றும் கூறுவர். இதன் பன்பாட்டில் பொருண்மையியல் கருத்துகள் இடம்பெறுகின்றன. ஒடு கருவியாகவும், கூட்டுணர்வின் அடிப்படையிலும் பயன்படுத்தப்படுகிறது. கீழ்க்கண்ட புறநானூறு 164ஆம் பாடல் வரியில் ஒடு வேற்றுமை கருவியாகப் பயன்படுத்தப்படுகிறது.

நீரொடு நிரைந்த கண்

ஆன் என்ற உருபும் இதே பொருளில் கிழ்க்கண்ட குறள் வரியில் பயன்படுத்தப்படுகிறது.

தீயினாற் சுட்ட புண் (இங்குப் பயன்படுத்தப்படும் உருபு ஆன்)

தூங்குகையான் ஒங்கு நடைய (-ஆன் உருபு பயன்பாடு)

தொல்காப்பியர் காலத்திலே ஒடு, ஓடு, ஆன் அகிய மூன்று உருபுகளும் அவற்றில் ஏதாவது ஒன்றை மற்ற இரண்டுக்குப் பதிலாக பயன்படுத்தும் நிலையில் இருந்தன.

கு வேற்றுமை அல்லது நான்காம் வேற்றுமை

இவ்வேற்றுமை நூற்பாக்கள் 75யிலும் 76யிலும் பேசப்படுகின்றன. இதன் உருபு கு . இது கொடை, பகை, நட்பு, தகுதி, அதுவாதல் பொருட்டு, முறை என்னும் பொருள்களிலும் வரும்.

ஏழைக்குக் கொடுத்தான் ன் (கொடை)

பாம்புக்குப் பகை மயில் (பகை)

ஐந்தாம் வேற்றுமை அல்லது இன் வேற்றுமை

இதன் உருபுகள் இன், இல் என்பன. இவ்வுருபுகள் ஒப்புமைக்கும், வேறுபாட்டைக் குறிக்கவும் ப்யன்படுகின்றன.

எடுத்துக்காட்டுகள் :

மலையின்வீழருவி -- நீங்கல்

தேளின் கொடியது பாம்பு - ஒப்புமை

கொடையிற் சிறந்தவர் பாரி - ஏது

ஆறாம் வேற்றுமை

அது, உடைய ஆகிய உருபுகளைக் கொண்டு வரும்.

முருகனது பெருமை

கந்தனது வீடு

கண்ணனுடைய வீடு

நெல்லினது குவியல்

கவிதையில் பன்மையைக் குறித்திட -அ சேர்க்கப்படும்

தம்முடைய நெஞ்சம்

களிறு அவர காப்புடைய காயம் பதியினை (புறம் 15)

ஏழாம் வேற்றுமை

இது கண் வேற்றுமை எனக் குறிக்கப்படும். தொல்காப்பியர் 81 ம் நூற்பாவில் இவ்வுருபு இடம் காலம் ஆகியவற்றைக்குறிக்கும் என்று குறிப்பிடுகிறார். இரண்டாவது நூற்பாவில் பொருண்மை கருத்துகளைக் குறிப்பிடாமல் கண் போன்ற மற்றைய உருபுகளைப் பட்டியலிடுகிறார். இவற்றில் ஒரு சில பின்னுருபாக இல்லாமல் முழுப்பெயராக உள்ளதால் இப்பட்டியலில் சித்தமற்ற உருபுகள் பல உள்ளன என்று ஹாக்கட் என்பார் குறிப்பிடுகிறார்.

வேற்றுமை மயங்கியல்

இவ்வியல் தொல்காப்பியத்தில் 84 முதல் 117 வரையுள்ள 34 நூற்பாக்களைக் கொண்டுள்ளது. இந்நூற்பாக்கள் மூன்று பகுதிகளாகப் பகுக்கப்பட்டிருக்கின்றன. முதல் பகுதியான வேற்றுமை உருபுகள் மயங்குதல் என்ற தலைப்பில் 18 நூற்பாக்களும், இரண்டாம் தலைப்பான அவ்வுருபுகளின் இயல்புகள் என்ற பகுதியில் 12 நூற்பாக்களும் (நூற்பா 102 -- 113) மூன்றாம் தலைப்பான ஆகுபெயர் என்னும் தலைப்பில் நான்கு நூற்பாக்களும் (114 -117) உள்ளன.

பொதுவாக, தொல்காப்பியர் இவ்வியலில் பயன்பாட்டு ஒன்றாகும் தன்மையை (Functional Syncretism)விவரிக்கிறார். இந்த பயன்பாட்டு ஒன்றாகும் தன்மை இரண்டு வகைப்படும். அவை முறையே பொருள் மயக்கம் (பொருள்கள் ஒன்றாதல்), உருபு மயக்கம் (உருபுகள் ஒன்றாதல்) என்பனவாம்.

பொருள் மயக்கம் தொடர்நிலையில் தான் காண இயலும்:

பழியின் அஞ்சும்

பழியை அஞ்சும்.

பழி என்னும் பெயருடன் இன் மற்றும் ஐ என்கிற வேறுபட்ட வேற்றுமை உருபுகளைப் பயன்படுத்திடினும் பொருள் மாற்றமின்றி ஒரே பொருளைப் பெறும் நிலை பொருள் மயக்கத்தால் ஏற்படுத்தப்படுகிறது. எனவே ஆறாம் வேற்றுமை உருபாகிய இன்

னும் இரண்டாம் வேற்றுமை உருபாகிய ஐ யும் ஒன்று மற்றதன் மாற்றாய் உள்ளன.

நம்பிக்கு மகன்

நம்பியது மகன்

இங்கு நான்காம் வேற்றுமை உருபாகிய க்கு வும் ஆறாம் வேற்றுமை உருபாகிய அதுவும் ஒரே பொருளைக் கொடுத்துப் பொருள் மயக்கத்தை ஏற்படுத்தி ஆறன் உருபு நாலன் உருபுக்கு மாற்றாய் உள்ளன.

நாலாம் வேற்றுமை உருபு மயக்கம் தக்க எடுத்துக்காட்டுகளுடன் விளக்கப்படுகிறது:

அவர்க்கு செய்யத் தகும் இக்காரியம் (அவரால் இக்காரியம் செய்யப்படும்) 4ஆம் வேற்றுமை உருபுக்கு 3ஆம் வேற்றுமை உருபின் பொருளைத் தரும் நிலை.

கருவூருக்குக் கிழக்கே (கருவூருக்குக் கீழ்த்திசையில்) நான்காம் வேற்றுமை உருபு ஐந்தாம் வேற்றுமைப் பொருளைத் தரும் நிலை.

அவன் சாத்தார்க்கு நெடியன் (அவன் சாத்தாரின் உயரம்) நான்காம் வேற்றுமை உருபு ஐந்தாம் வேற்றுமைப் பொருளைத் தருகிறது.

அவன் காலைக்கு வரும் (அவன் காலையில் வருவான்). நான்காம் வேற்றுமை உருபு ஏழாம் வேற்றுமை உருபின் பொருளைத் தருகிறது.

உருபு எதுவாக இருந்தாலும் அதன் பொருளை முடிவு செய்வது அது இடம் பெறும் வாக்கிய அமைப்புச் சூழல் (Context) என்ற கருத்தை வலியுறுத்துகிறது.

துணை நூல்கள்

செ.வை. சண்முகம், தொல்காப்பியத் தொடரியல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை 600 113 - 2004

Fillmore, Charles, The Case for Case, in Bach E. and Harms R. Universals in Linguistic Theory, pp. 1-90, New York: Holt Rinehart Winston, 1968

Zvelebil, K., Tolkappiyam - Collatikaram Part II: On Case, Journal of Tamil Studies 21, pp 9-19, 1982

.... Tolkappiyam - Collatikaram Part II Morphology Syntax, 67-80, Journal of Tamil Studies 28, International Institute of Tamil Studies, December, 1985

வேற்றுமையியல் கோட்பாடு

முனைவர் இரத்தின புகழேந்தி
பட்டதாரி ஆசிரியர்
அரசு உயர்நிலைப்பள்ளி
மன்னம்பாடி, விருதாச்சலம்

முன்னுரை

தமிழில் எட்டுவகை வேற்றுமை உருபுகள் உள்ளதாகத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. தொல்காப்பியர் காலத்தில் கூறப்பட்ட எட்டுவகை வேற்றுமை உருபுகளின் இன்றைய நிலை என்ன? அந்த வேற்றுமை உருபுகள் அனைத்தும் தற்காலத்தில் வழக்கில் உள்ளனவா? தற்காலத் தொடரியல் மாற்றத்தினால் வேற்றுமை உருபு ஏதேனும் வழக்கொழிந்துள்ளதா? காலமாற்றத் திற்கேற்ப புதிய வேற்றுமை உருபுகள் தோன்றியுள்ளனவா? என்பனவற்றைத் தற்கால இலக்கண அறிஞர்களின் வழிநின்று ஆராய்கிறது இக்கட்டுரை.

வேற்றுமை

வேற்றுமை என்பதற்குத் தமிழ் இலக்கணங்களில் தெளிவான, அறிவியல்பூர்வமான விளக்கம் இதுவரை அளிக்கப்படவில்லை என்றே பொற்கோ போன்ற தற்கால இலக்கண அறிஞர்கள் கருதுகின்றனர். பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்துவது வேற்றுமை என்னும் விளக்கம் போதுமானதாக இல்லை.

1. *அமைச்சர் வரவேற்றார்.*
2. *அமைச்சரை வரவேற்றார்.*

முதல் தொடரில் அமைச்சர் வேறு யாரையோ வரவேற்றார் என்ற பொருள் வெளிப்படுகிறது. இரண்டாவது தொடரில் ஐ என்னும் வேற்றுமை உருபு சேர்ந்ததால் அமைச்சரை வேறு யாரோ வரவேற்றார் என்று பொருள் வேறுபடுகிறது. ஐ என்னும் வேற்றுமை உருபு சேர்ந்ததால் அமைச்சர் என்னும் பெயர்ச்சொல்லின் பொருளில் எவ்வித வேறுபாடும் நிகழவில்லை என்பதை உணர்கிறோம். ஆனால் இதனை இன்னும் நுட்பமாக ஆராய்ந்தால் வேற்றுமையின் உண்மையான விளக்கத்தை அறியலாம். முதல் தொடரில் எழுவாய் நிலையிலிருந்த அமைச்சர் என்னும்

பெயர்ச்சொல் இரண்டாவது தொடரில் செயப்படு பொருள் நிலைக்கு மரியுள்ளதை அறியலாம். இந்தப் புரிதலின் அடிப்படையில்தான் "பெயர்க்கு தொடரியலிலுள்ள நிலைகளை வேறுபடுத்துவது வேற்றுமை" என விளக்கம் கூறினார் பேராசிரியர் ச.அகத்தியலிங்கம்.

தொடர்களில் பெயருக்கும் வினைக்கும் உள்ள இலக்கண உறவுகளை வேறுபடுத்திக் காட்டுவது வேற்றுமை என்றும் வேற்றுமைக்கு விளக்கம் கூறுவர்.

3. புலி மனிதனைக் கொன்றது.

4. மனிதன் புலியைக் கொன்றான்.

மூன்றாவது தொடரில் கொல் என்ற வினைக்கு புலி என்ற பெயர் எழுவாய் உறவில் நிற்கிறது. அதே பெயர் நான்காவது தொடரில் ஐ என்ற வேற்றுமை உருபை ஏற்றுச் செயப்படுபொருள் உறவில் நிற்கிறது. இந்த உறவுநிலை மாற்றங்களை ஐ என்ற உருபுதான் வெளிப்படுத்துகிறது. எனவே இந்த விளக்கம் தற்கால இலக்கண அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இருப்பினும் இன்னும் சரியான விளக்கம் தேவைப்படுகிறது.

தொல்காப்பியர் கூறும் வேற்றுமைகள்

தமிழில் எட்டு வேற்றுமை உருபுகள் உள்ளதாகத் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். அவை; பெயர், ஐ, ஒடு, கு, இன், அது, கண், விளி எனப்படும். இந்த எண்ணிக்கை தமிழில் இன்றளவும் மாறாமல் உள்ளதா? என்பது ஆய்வுக்கு உரியது. ஏனெனில் உலக மொழிகளில் வேற்றுமைகளின் எண்ணிக்கை காலந்தோறும் மரி வந்திருக்கின்றன என மொழியியல் அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். அந்த மாற்றம் தமிழிலும் நிகழ்ந்துள்ளதா என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டியது இலக்கண வளர்ச்சிக்கு கட்டாயத் தேவையாகிறது.

வேற்றுமைகளின் இன்றைய நிலை

தொல்காப்பியர் வேற்றுமையை எண்ணிக்கை அடிப்படையில்,

"வேற்றுமை தாமே ஏழென மொழிப"

எனக்கூறி அடுத்த நூற்பாவில்,

"விளிகொள் வதன்கண் விளியொடு எட்டே"

எனக் கூறினார். இந்த எட்டு வேற்றுமை உருபுகளின் இன்றைய நிலை என்ன? என ஆராய்வோம். தொல்காப்பியர் முதல் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை, மூன்றாம் வேற்றுமை என்று எண்ணிக்கை அடிப்படையில் வேற்றுமைகளுக்குப் பெயர் தந்தார். உருபுகளின் பெயராலும் ஐ வேற்றுமை, ஆல் வேற்றுமை எனவும் குறிப்பது வழக்கம், வேற்றுமைகளைப் பொருள் அடிப்படையில்

இக்கால இலக்கண அறிஞர்கள் வகைப்படுத்துகின்றனர். அவை எழுவாய் வேற்றுமை, செயப்படுபொருள் வேற்றுமை, கருவி வேற்றுமை, உடனிகழ்ச்சி வேற்றுமை, நேர்ச்சி வேற்றுமை, உடைமை வேற்றுமை, இட வேற்றுமை, விளிவேற்றுமை என்பனவாம். இவற்றோடு நிலை வேற்றுமை என்பதையும் சேர்க்கவேண்டும் என்னும் இக்கட்டுரை வலியுறுத்துகிறது.

எழுவாய் வேற்றுமை

உருபின்றிப் பெயர் மட்டும் தனித்து நின்ற முதல் வேற்றுமையை பெயர் வேற்றுமை என்று அழைக்கத்தொடங்கினர். பெயர் எழுவாயாக செயல்படுவதால் இது எழுவாய் வேற்றுமை என்றும் குறிப்பிடப்படுகிறது. இதற்குத் தனியே ஓர் உருபு இல்லை. திரிபு இல்லாத நிலையில் வரும் பெயர் எழுவாயாகச் செயல்படுகிறது என்பார் பொற்கோ.

ஆனால் எழுவாய் வேற்றுமை உருபுகளாகச் சிலவற்றை வீர சோழியம் போன்ற இலக்கண நூல்கள் குறிப்பிட்டுள்ளன. அவை தமிழுக்கு தொடர்பற்றவையாக உள்ளன. தமிழில் ஒரு வேற்றுமை உருபு தன்மேல் இன்னோர் உருபை ஏற்காது என்பதே வேற்றுமைக் கோட்பாடு.

செயப்படு பொருள் வேற்றுமை

ஒரு தொடரிலுள்ள வினையும் பெயரும் செயப்படுபொருள் உறவில் அமையும்போது அந்தப் பெயர் ஐ என்னும் உருபை ஏற்கும். சில உயிரிலா அஃறிணைப் பெயர்கள் அருவ உருபை ஏற்கும் என்பர் அறிஞர்.

நான் கண்ணனைப் பார்த்தேன்.

நான் குதிரையைப் பார்த்தேன்.

நான் உங்கள் பெயரை மறந்துவிட்டேன்.

நான் படம் பார்த்தேன்.

மேற்கண்ட தொடர்களில் படம் என்னும் உயிரிலா அஃறிணைப் பெயர் அருவ உருபை ஏற்றது.

இரண்டாய்ப் பிரிந்த மூன்றாம் வேற்றுமை

மூன்றாம் வேற்றுமை உருபாகத் தொல்காப்பியர் 'ஒடு' என்னும் சொல்லைக் குறிப்பிட்டுள்ளார். இன்று மூன்றாம் வேற்றுமை உருபு இரு பிரிவாகியுள்ளது.'ஆல்' என்ற வேற்றுமை உருபு கருவி வேற்றுமையாகவும் 'ஒடு' என்ற வேற்றுமை உருபு உடனிகழ்வு வேற்றுமையாகவும் பிரிந்துள்ளன.

கருவி வேற்றுமையும் காரண வேற்றுமையும்

ஒரு தொடரிலுள்ள வினையும் பெயரும் கருவிப்பொருள் உறவில் அமையும்போது அந்தப் பெயர் கருவி உருபை ஏற்று வரும். கருவி வேற்றுமையிலிருந்து காரண வேற்றுமையைத் தனியே பிரித்தறிய வேண்டும் எனக் கூறியவர் பொற்கோ. இவ்விரு வேற்றுமைகளும் தொடரியல் அமைப்பில் வேறுபடுவதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கத்தியால் வெட்டினான்.

என்னும் இத்தொடரை வெட்டின கத்தி என்று பெயரெச்சத்தொடராக மாற்றலாம்.

காய்ச்சலால் இறந்தான்.

என்னும் தொடரை இறந்த காய்ச்சல் என்று மாற்ற இயலாது. காய்ச்சல் காரணமாக இறந்தான். அவன் இறப்பதற்கு 'காய்ச்சல்' காரணமாக இருந்ததா? கருவியாக இருந்ததா? கருவி என்பதை விட காரணம் என்பதே சரியெனத் தொன்றுகிறது.

உடனிகழ்ச்சி வேற்றுமை

ஒரு தொடரிலுள்ள வினையும் பெயரும் உடனிகழ்ச்சி உறவில் அமையும்போது அந்தப்பெயர் ஓடு அல்லது உடன் என்ற உடனிகழ்ச்சி உருபை ஏற்று வரும்.

அமைச்சரோடு செயலர் வந்தார்.

அமைச்சருடன் செயலர் வந்தார்.

இரண்டு தொடர்களிலும் ஓடு, உடன் என்னும் இரண்டு உருபுகளும் உடனிகழ்ச்சிப் பொருண்மையைக் குறிக்கின்றன.

இந்த இரு தொடர்களிலும் அமைச்சர் என்னும் பெயரோடு ஓடு, உடன் என்னும் வேற்றுமை உருபுகள் சேர்க்கப்பட்டுள்ளன. இத்தொடர்களை

அமைச்சர் செயலோரோடு வந்தார்.

அமைச்சர் செயலருடன் வந்தார்.

என்றும் குறிப்பிடலாமே என்னும் வினா நம் மனத்தில் தோன்றலாம் எனக் கருதிய தொல்காப்பியர் வேற்றுமை மயங்கியலில், "ஒருவினை ஒடுச்சொல் உயர்பின் வழித்தே" என்றார். உயர்ந்த பொருளைக்குறிக்கும் சிறப்புடைய பெயரோடு இவ்வுருபுகளைச் சேர்க்கவேண்டும் என்பார்.

நேர்ச்சி வேற்றுமை

நான்காம் வேற்றுமையாகத் தொல்காப்பியரால் குறிப்பிடப்பட்ட இவ்வேற்றுமையை நேர்ச்சி வேற்றுமை, கொடை வேற்றுமை, இலக்கு வேற்றுமை, பயனடைவோர் வேற்றுமை என்றும் மொழியியல் அறிஞர்கள் குறிப்பிடுவர். இந்த வேற்றுமைக்குப் பல்வேறு பொருள்கள் இருப்பினும் தலைமையான பொருளாக நேர்ச்சிப்பொருளே அமைகிறது என்பதனால் இதனை நேர்ச்சி வேற்றுமை என்றே குறிப்பிடலாம். ஒரு தொடரில் உள்ள வினையும் பெயரும் நேர்ச்சி உறவில் அமையும்போது அந்தப் பெயர் 'கு' என்னும் நேர்ச்சி உருபை ஏற்று வரும்.

ஆசிரியர் மாணவருக்குப் பரிசு கொடுத்தார் .

என்னும் தொடரை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

நீங்கல் வேற்றுமை

ஐந்தாம் வேற்றுமையாகத் தொல்காப்பியர் குறிப்பிடும் இவ்வேற்றுமைக்கு இன் என்பது உருபாகக் குறிப்பிடப்படுகிறது. இது குறித்து இலக்கண அறிஞர்களிடையே மாறுபட்ட கருத்துகள் நிலவி வருகின்றன. கால்டுவெல், மு.வரதராசனார், அகத்தியலிங்கம் போன்ற அறிஞர்கள் ஒரு கருத்தை வலியுறுத்துகின்றனர். நீங்கல் வேற்றுமையை மட்டுமே உணர்த்தும் தனி உருபு தமிழில் இல்லை என்றும் அதனைத் தனி ஒரு வேற்றுமையாகக் குறிப்பிடல் தேவையற்றது என்றும் அது இட வேற்றுமையோடு சேர்ந்து ஒன்றாக வேண்டத்தக்கது என்பார். இக்கருத்தையே மு.வரதராசனார், அகத்தியலிங்கம் போன்றோர் வழிமொழிகின்றனர். தொல்காப்பியர் குறிப்பிடும் இன் என்னும் வேற்றுமை உருபு இன்று முற்றிலும் வழக்கொழிந்து போனது. உரையாசிரியர்கள் கூறும் எடுத்துக்காட்டுகள் அனைத்தும் மரபுத் தொடர்களாகவே உள்ளன. வழக்குத் தொடர்கள் ஒன்றும் இல்லை. எனவே இவ்வேற்றுமை இன்று வழக்கொழிந்தது என்று துணியலாம்.

உடைமை வேற்றுமை

மற்ற வேற்றுமைகளிலிருந்து உடைமை வேற்றுமை வேறுபடுகிறது. ஆறாம் வேற்றுமை என்று தொல்காப்பியரால் குறிப்பிடப்பட்ட இவ்வேற்றுமை தவிர மற்ற வேற்றுமைகள் அனைத்தும் பெயருக்கு வினையோடு உள்ள தொடர்பைக் காட்டுகின்றன. இவ்வேற்றுமை மட்டும் பெயருக்குப் பெயரோடு அமையும் தொடர்பைக் காட்டுகிறது.

ஒரு தொடரிலுள்ள இரு பெயர்கள் உடைமை உறவில் அமைந்திருந்தால் இடப்புறம் உள்ள பெயர் அது என்னும் உருபை ஏற்கும்.

எனது நிலம்.

என்னுடைய நிலம்.

அது என்னும் உருபுக்குப் பதிலாக உடைய என்னும் உருபையும் ஏற்கும். ஆனாலும் உடைய என்பது சொல்லுருபாகவே கருதப்படுகிறது. வேற்றுமை உருபாகக் கருதப்படுவதில்லை.

இட வேற்றுமை

ஏழாம் வேற்றுமையாகத் தொல்காப்பியர் கூறுவது இட வேற்றுமை. இவ்வேற்றுமை 'கண்' என்னும் உருபை ஏற்கும் என தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. ஆனால் இன்று 'இல்' என்னும் உருபே இட வேற்றுமைக்கான உருபாக சுட்டப்படுகிறது.

வீட்டின்கண் இருக்கிறான் என்பது மரபுத் தொடராகவும்

வீட்டில் இருக்கிறான் என்பது வழக்குத் தொடராகவும் உள்ளதைக் காணலாம். மேலும் தற்காலத்தில் இடம் என்னும் உருபும் வழங்க்கத்தில் உள்ளது.

ஆசிரியரிடம் கற்றேன்.

அவனிடம் உள்ளது.

ஆகிய தொடர்களில் இடம் என்னும் உருபு ஏற்பதைக் காணலாம். மேற்கண்ட தொடர்களிலிருந்து உயர்திணைக்கு 'இடம்' என்னும் உருபும் அஃறிணைக்கு 'இல்' என்னும் உருபும் உரியனவாக உள்ளன என்பதை அறியலாம்.

நிலைவேற்றுமை

நிலைவேற்றுமை என்பது தமிழில் புதிதாகத் தோன்றிய வேற்றுமையாக சென்ற நூற்றாண்டில் பொற்கோ அவர்களால் கண்டறியப்பட்டதாகும். ஒரு தொடரில் பெயருக்கும் வினைக்கும் இடையே நிலை என்ற உறவு அமையுமாயின் அந்தப் பெயர் ஆக என்னும் உருபை ஏற்று வரும்.

வண்டி வேகமாகச் சென்றது.

அமைச்சர் கோபமாகப் பேசினார்.

மக்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்தனர்.

மேற்கண்ட தொடர்களில் வண்டி சென்ற நிலை, அமைச்சர் பேசிய நிலை, மக்கள் வாழ்ந்த நிலை ஆகியவற்றை ஆக என்னும் உருபு வெளிப்படுத்தி நிற்கிறது. எனவே ஆக என்பதும் வேற்றுமை உருபே என்பதை தமிழ் இலக்கணம் ஏற்க வேண்டும். ஆக என்பதை வேற்றுமையாக கொள்வதற்குத் தடைகளாகக் கருதப்படும் காரணிகளையும் சரியான எடுத்துக் காட்டுகளோடு மறுப்பார் பொற்கோ.

காலப்பொருளில் வந்த இல் என்னும் உருபை இடப்பொருளில் அடக்கியதுபோல ஆக என்னும் உருபுக்கு உரிய நிலைப் பொருளையும் இடப்பொருளில் அடக்குவது பொருத்தம் என்று குறிப்பிடுவார்.

எழுபதுகளின் தொடக்கத்தில் பொற்கோ எடுத்துக்கூறிய இந்த வேற்றுமை குறித்து, தமிழ் இலக்கண அறிஞர்கள் யாரும் இதுவரை மறுப்பு எதுவும் கூறவில்லை. எனவே இந்தக் கட்டுரையின் வாயிலாக நிலை வேற்றுமை என்னும் ஒரு வேற்றுமையையும் அதற்கு உரிய வேற்றுமை உருபு 'ஆக' என்பதையும் தமிழ் இலக்கண உலகம் ஏற்க வேண்டும் என்ற கோரிக்கையை வைத்து இது தொடர்பான தொடர் ஆய்வுகள் நிகழ்த்தப்படவேண்டும் என வலியுறுத்தப்படுகிறது.

விளி வேற்றுமை

தொல்காப்பியர் விளி வேற்றுமையைத் தனி ஓர் இயலில் விளி மரபு எனக் குறிப்பிடுவார். ஒரு தொடரில் புற உறுப்பாக நிற்கும் பெயர் விளிப்பொருளில் அமையுமாயின் அது ஆ, ஏ முதலான விளி உருபுகளை ஏற்று வரும். விளியின் அடையாளமாகப் பெயரின் ஈறு மறைந்து ஈற்றயல் நீளல் முதலான வேறு பல திரிபுகளையும் பெயர்களில் நாம் காணலாம்.

தன்மை, முன்னிலைப்பெயர்கள் விளி ஏலாப்பெயர்கள் என்பதை இலக்கண அறிஞர்கள் விளக்கியுள்ளனர். படர்க்கைப் பெயர்கள் விளி ஏற்கும் என்பதை உணரலாம்.

முருகன் - முருகா

சிவன் - சிவனே என்றாவதை உணர்க.

முடிவுரை

தற்காலத் தமிழில் உள்ள வேற்றுமைகளை நாம் கீழ்க்கண்டவாறு குறிப்பிடலாம்.

வேற்றுமையின் பெயர்	உருபு
எழுவாய் வேற்றுமை	*இல்லை*
செயப்படு பொருள் வேற்றுமை	*ஐ*
கருவி வேற்றுமை	*ஆல்*
உடனிகழ்ச்சி வேற்றுமை	*ஓடு - உடன்*
நேர்ச்சிவேற்றுமை	*கு*
உடைமை வேற்றுமை	*அது*
இட வேற்றுமை	*இல்*
நிலை வேற்றுமை	*ஆக*
விளி வேற்றுமை	*ஆ...*

கால மாற்றத்திற்கேற்ப வேற்றுமைகள் மாறியுள்ளன. தொல்காப்பியரால் ஐந்தாம் வேற்றுமை உருபாகக் குறிப்பிடப்பட்ட இன் என்பதும், ஏழாம் வேற்றுமை உருபாகக் குறிப்பிடப்பட்ட கண் என்பதும் இன்று வழக்கொழிந்துள்ளன. மூன்றாம் வேற்றுமைக் கருவி வேற்றுமை, காரண வேற்றுமை என இரண்டாகப் பிரிந்துள்ளது. ஏழாம் வேற்றுமை இட வேற்றுமை, நிலை வேற்றுமை எனப் பிரிந்துள்ளது. எண்ணிக்கை அடிப்படையில் வேற்றுமைகளுக்கு பெயரிட்ட நிலையும் மாறியுள்ளது.

விரிவஞ்சி இக்கட்டுரையில் வேற்றுமை பற்றிய பல தகவல்கள் விடப்பட்டுள்ளன. முன்னுரையில் கருதுகோள்களாக குறிப்பிடப் பட்டவை பற்றி மட்டுமே ஆய்வு செய்யப்பட்டுள்ளது. வேற்றுமை குறித்த ஆய்வுகள் காலந்தோறும் நிகழ்த்தப்படவேண்டும். அதற்கான தேவையை நம் தமிழ் மொழி வேண்டி நிற்கிறது.

துணை நூல்கள்

1. *அரங்கராசன் மருதூர்* *2000* *தமிழில் வேற்றுமைகள்* ஐந்திணைப் பதிப்பகம், சென்னை
2. *கணேசையர்(பதி)* *2007* தொல்காப்பியம் சொல்லதிகாரம் உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை
3. *கோதண்டராமன்.பொன் 1999* தமிழ் உருபனியலும் தொடரியலும் தமிழ்மொழி வரலாறு, தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை
4. *கோதண்டராமன்.பொன் 1978* இலக்கண உலகில் புதிய பார்வை *தமிழ் நூலகம்*, சென்னை

மரபு இலக்கணத்தில் தொகைநிலைத் தொடர்கள்

முனைவர் இரா. துரை
உதவிப் பேராசிரியர்
மொழியியல் உயராய்வு மையம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

முன்னுரை

ஒரு மொழியின் இலக்கியம் மக்களை நல்வழிப்படுத்தும். இலக்கணம் மொழியைக் கட்டிக்காக்கும். தம் உள்ளத்தில் தோன்றும் கருத்தை வெளியிடவும் மற்றவர் கூறும் கருத்துகளைத் தெளிவாகப் புரிந்துகொள்ள உதவும் ஒரு கருவியாக இருப்பது மொழி. ஒரு மொழியின் அமைப்பை விளக்குவது இலக்கணம் என்பார் மொழியியலாளர். இது மொழியின் அமைப்பைப் பொருத்து மாறுபடும் தமிழ் மொழியின் இலக்கண அமைப்பு (SOV)என்ற முறையில் அமைந்துள்ளது. எழுவாய், செயப்படுபொருள், பயனிலை என்பதாகும். ஆங்கில மொழியின் இலக்கண அமைப்பு (SVO) என்ற முறையில் அமைந்துள்ளது. எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்பதாகும். தமிழ் இலக்கணம் ஐந்து வகைப்படும் அவை எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்பனவாகும்.

மரபு இலக்கணங்கள்

தமிழைப் பொருத்த வரையில் பத்து மரபு இலக்கணங்கள் உள்ளன 1. தொல்காப்பியம் 2. வீரசோழியம் 3. நேமிநாதம் 4.நனனூல் 5. இலக்கண விளக்கம் 6. பிரயோகவிவேகம் 7. இலக்கணக்கொத்து 8. தொன்னூல் விளக்கம் 9. முத்துவீரியம் 10. சுவாமிநாதம் ஆகியவை குறிப்பித் தக்கவையாகும்.

தமிழில் மரபு இலக்கணங்கள் தொல்காப்பியம் தொட்டு சுவாமிநாதம் ஈறாக பல்வேறு கால கட்டங்களில் பல்வேறு இலக்கண ஆசிரியர்களால், பல்வேறு நிலைகளில் எழுதப் பெற்றுள்ளன. இந்த மரபு இலக்கணங்கள் அனைத்தும் சூத்திர வடிவில் அமைந்துள்ளன. எனவே இச்சூத்திரங்களை விளக்கு வதற்காக பல்வேறு உரையாசிரியர்கள் பல்வேறு காலகட்டங்களில்

பல்வேறு அடிப்படையில் உரை வகுத்துள்ளனர். இலக்கண நூல்களின் காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து 18-ஆம் நூற்றாண்டு வரையில் அமைகின்றன. உரையாசிரியர்களுடைய காலம் 10-ஆம் நூற்றாண்டில் இருந்து 18-ஆம் நூற்றாண்டு வரையிலும் அமைகின்றன.

வேற்றுமை இலக்கணத்தை அடிப்படையாகக் கொண்ட இந்த பத்து மரபு இலக்கணங்களும் மாறுபடுகின்ற நிலைகளைக் கொண்டு மூன்று வகைகளாகக் காணப்பெறுகின்றன. தொடரியல் அடிப்படை என்ற நிலையில் அல்வழித் தொடர், வேற்றுமைத் தொடர் என்ற இரண்டையும் விளக்கு கின்றன.

மொழியியலாளர் மொழியை ஐந்து அடிப்படை அலகுகளாக பிரிக்கிறார்கள். அவையாவன:

1. ஒலியியல் 2. ஒலியனியல் 3. உருபனியல் 4. தொடரியல் 5. பொருண்மையியல் என்பனவாகும். இங்குத் தொடரியலை மட்டும் எடுத்துக் கொண்டு அதில் தொகைநிலைத் தொடர்களைப் பற்றி மரபு இலக்கணங்கள் சிலவற்றின் அடிப்படையில் வகைப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஒரு தொடரில் மொழிக்குக் காரணமான ஒலிகளோ, சொற்களோ இருப்பதால் மட்டும் பொருளை உணர்த்திவிட முடியாது.

'வளவன் காடு வால் சிங்கம் பார்த்தான் குரங்கு இல் அந்த'

என்று சொற்களை அமைப்பதால் பொருள் உணர்த்தப்படவில்லை.

'வளவன் அந்தக் காட்டில் சிங்கவால் குரங்கைப் பார்த்தான்'

என்று ஒரு வரை முறையில் அமைத்ததால்தான் அதன் பொருள் உணர்த்தப் படுகின்றது. இவ்வாறு பொருளை உணர்த்த வேண்டுமாயின் பேசுபவரின் மனநிலையை மட்டும் ஒட்டிச் சொற்கள் அமைத்தல் போதாது. கேட்பவருக்கும் பொருள் விளங்குமாறு சொற்கள் தொடர்ந்து அமைதல் வேண்டும். அதுவே சொற்றொடர்கள் உருவாக்கத்திற்கு மிக இன்றி யமையாதது ஆகும். எனவே பொருட்புணர்ச்சியால் வருவதே தொடர் என்று கொள்ளப்படும்.

தொல்காப்பியம்

தொல்காப்பியம், தமிழ் மொழி அமைப்பை எழுத்து, சொல் என்னும் இரண்டு அதிகாரத்தில் விளக்குவது என்பது எல்லோரும் அறிந்ததே. அதே சமயத்தில் அவற்றில் பொது மொழியியல்

கோட்பாடுகளும் கலந்துள்ளன என்பது பரவலாக அறியப்பட வில்லை. அவற்றைத் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் உலகப் பொது இலக்கணம் (Universal Grammar) என்று கூறுவார். அகத்தியலிங்கம் தான் (1985) முதன்முதலில் தொல்காப்பியரின் தொடரியல் விளக்கத்தில் மாற்றிலக்கண மொழியியல் கோட்பாடு புதைந்துள்ளது என்று விளக்கியவர்.

எடுத்துக்காட்டாகத் தொல்காப்பியம் எழுத்ததிகாரப் பிறப்பியல் சூத்திரங்கள், புணரியலில் 5 முதல் 10 சூத்திரங்கள், கிளவியாக்கத்தில் சூ. 13 முதல் 21 வரை, 38 முதல் 39, 52 - 55 சூத்திரங்கள், வேற்றுமையியலில் பெயர்ச் சொல் விளக்கம் (9), வேற்றுமை மயங்கியலில் தொழில் முதனிலை எட்டு (29), பெயரியலில் சொல்லின் பொது இலக்கணம் (1 முதல் 3 சூத்திரங்கள்), வினையியலில் வினையின் பொது இலக்கணம் (1) முதலியவை எல்லா மொழிக்கும் பொதுவான தொடரியல் உண்மைகள் ஆகும்.

தொல்காப்பியத்தில் பனுவல் (செய்யுள்), கருத்தின் (இரண்டு வாக்கியங்கள்), வாக்கியம், தொடர், தொகை என்னும் நிலைகளில் தொடரியல் கட்டமைப்பு விளக்கப்பட்டுள்ளது. 1. 'மொழி புணர் இயல்பு பற்றிய சூத்திரங்களும் (எச்ச வியல் 8 முதல் 13) பொருளதிகாரச் செய்யுளியலில் செய்யுள் உறுப்புகளில் ஒன்றாக மட்டும் (செய்யுளியல் முதல் சூத்திரம்) பனுவலை அடிப்படையாகக் கொண்டவை. கிளவியாக்கத்தில் காணப்படும் சுட்டு பற்றிய சூத்திரங்களும் 38,39) இரண்டு வாக்கியங்கள் கருத்தன் பற்றியவை. வினையியலில் இருக்கும் இரண்டு சூத்திரங்கள் (46,49) வாக்கியம் பற்றியவை. தொகை பற்றித் தொல்காப்பியர் நேரடியாகவே குறிப்பிட்டுள்ளர்.

தொல்காப்பியர் சொல்லதிகாரத்தில் தொடரியல் பற்றி ஓரளவு விரிவாகப் பேசினாலும் தொடரியல் நோக்கில் தொகையைத் தனி அலகாக ஏற்று அங்கீகரித்து போலத் தொடர், வாக்கியம், கிளவி ஆகியவைகளை தனி அலகுகளாக வேறுபடுத்திப் பேசவில்லை என்பது குறிப்பிடத் தகுந்தது. தொல்காப்பியத்தில் தொடர் என்னும் சொல் காணப்பட்டாலும் அது எழுத்ததிகாரத்தில் மட்டும் காணப்படுவதும், அது எழுத்துகளின் தொடர்ச்சியை அதுவும் இரண்டு எழுத்துக்கு மேற்பட்ட (பலகை, அஃது) தொடர்ச்சியைக் (குறிக்கவே தொடர் மொழி (மொழி மரபு.3) கையாளப்பட்டிருப்பதும் குறிப்பிடத் தகுந்தது (நாகராசன் ரூ விஷ்ணுகுமார், 2000: 187). அதுபோல் எழுத்ததிகாரப் புணரியலில் பெயர் + பெயர், பெயர் + வினை, வினை + பெயர்,

வினை +வினை ஆகியவற்றின் சேர்க்கையைப் புணர்ச்சி ('புணர்க்குங்காலும்' சூ. 6,2,3,4,5. புணர்நிலைச் சுட்டு சூ.9.2) என்றே குறிப்பிட்டுள்ளார். ஆனாலும் வேற்றுமையியலில் முதல் வேற்றுமையை விளக்கும்போது பொருண்மை சுட்டல், வியங்கொள வருதல், வினைநிலை உரைத்தல், பண்பு கொள வருதல் ஆகியவற்றைப் பெயர் + வினை வாக்கியங்களாகவும் வினாவிற்கு ஏற்றல், பெயர் கொள வருதல் ஆகியவற்றைப் பெயர் + பெயர் என்று கொண்டால் தமிழில் புற நிலையில் இரண்டு வித வாக்கியங்கள் (பெயர் + பெயர், பெயர் + வினை) இருப்பதை தொல்காப்பியர் புலப்படுத்தியுள்ளார் என்று கொள்ளலாம்.

இருவகைத் தொடர்கள்

தொடர்களைப் பொருள் உணர்த்தும் நிலையில் இலக்கண ஆசிரியர்கள் இரண்டாகப் பகுத்தனர். வேற்றுமை உருபுகள் ஏற்றுவரும் தொடர்களை வேற்றுமைத் தொடர்கள் என்றும் வேற்றுமை உருபுகள் அல்லாத பிறவற்றை ஏற்கும் தொடர்களை அல்வழித் தொடர்கள் எனவும் பாகுபாடு செய்தனர். அந்நிலையில் அல்வழித் தொடர்கள் பதினான்கு என எண்ணிக்கை பெற்றன.

வேற்றுமைத் தொடர்கள் தொகைநிலைத் தொடர்கள், தொகாநிலைத் தொடர்கள் என இரு பிரிவினை உடையன. வேற்றுமை உருபுகள் மறைந்து தொக்கு வருவது தொகைநிலை என்றும் அவை வெளிப்பட வருவது தொகா நிலை என்றும் கொள்ளப்படும்.

"வேற்றுமை ஐம் முதல் ஆறாம் அல்வழி
தொழில் பண்புவமையும்மை அன்மொழி
எழுவாய் விளியீரெச்சம் முற்று இடையுரி
தழுவு தொடரடுக்கென ஈரேழு"   *நன்னூல் 152*

என்னும் நூற்பா வேற்றுமைத் தொடர்களையும், அல்வழித் தொடர்களையும் இன்னென்ன என்று வகைப்படுத்துகின்றது.

தொகைநிலை தொடர்

ஒரு மொழிபோல் நடப்பன, முன்மொழி, பின்மொழி, பன்மொழி, புறமொழி என நான்கிடத்தும் பொருள் சிறக்கும் தன்மை உடையன; ஆறுவகை நிலையினை உடையன ஐந்தொகைக்கு மேல் பொருள் தொகல் அன்மொழி. இந்நிலையில் இலக்கண ஆசிரியர்கள் இவற்றைத் தனித்தனியாகப் பிரிப்பர். வேற்றுமை, வினை, பண்பு, உவமை, உம்மை, அன்மொழி என்பன அவை. இலக்கணத்தார் வேற்றுமைத் தொகையை ஒரு பிரிவாகவும். ஏனைய ஐந்து

தொகைகளையும் ஒரு பிரிவாகவும் கொள்வர். ஆனால் இந்த ஆறு தொகைகளையும் மூன்று பிரிவாகக் கொள்ளலாம்.

1. வேற்றுமைத் தொகை
2. உவமை, உம்மை, பண்பு, வினைத்தொகைகள்
3. அன்மொழித் தொகை

என்பன அவை. இந்த அடிப்படையில் இந்தப் பகுப்பைக் கொள்ளலாம்.

இலக்கண உரையாசிரியர்கள் காட்டிய சான்றுகளின் படி தொகைகளை உருபு தொகை வருவன என்றும், இருசொல் ஒட்டி ஒருசொல் நீர்மையுடையனவாய் வருவன என்றும் கூறலாம். இதில் ஒருசொல் நீர்மையுடைமையே எல்லாத் தொகைக்கும் ஏற்றது. தொல்காப்பியம் எச்ச இயலிலும், நேமிநாதம் எச்சமரபு இயலிலும், நன்னூல் பொதுவியலிலும் தொன்னூல் விளக்கம் பெயரியலில் தனிப்பிரிவாகவும், வீரசோழியம் தொகைப்படலம் எனத் தனிப் படலத்திலும், தொகைநிலைத் தொடர்கள் பற்றிக் கூறுகின்றன. இலக்கணிகள் இவற்றைத் தொடராகவே கொண்டார்கள் என்பதும், பொருட் புணர்ச்சி அடிப்படையில் அமைத்திருக்கிறார்கள் என்பதும் தெரிகிறது.

அமைப்பு

வேற்றுமைத் தொகை

ஆறாம் வேற்றுமை உருபும், எல்லைப் பொருளை உணர்த்தும் ஐந்தாம் வேற்றுமை உருபும் பெயர்கொண்டு முடிவன; ஏனை வினை கொண்டு முடிவன; நான்காம் வேற்றுமை சில இடங்களில் வினை கொண்டு முடிதலும,; பெயர் கொண்டு முடிதலும் உண்டு.

பெயர் +வே. உருபு (அல்) வே. பொருள் + வினை (அல்)பெயர் என்ற அமைப்பிலேயே வேற்றுமை தொகைகள் அமைந்துள்ளன.

படைக்கை - பெயர் + (2ஆம். வே. பொ) + பெயர்

படையை உடைய கை

வரைபாய்ந்தான் - பெயர் + (5ஆம் வே. பொ) + வினை

வரையிலிருந்து பாய்ந்தான்

(ஐந்தாம் வேற்றுமை வினை கொண்டு முடிந்தது)

வரையருவி - பெயர் + (5ஆம். வே. பொ.)+பெயர்

(ஐந்தாம் வேற்றுமை பெயர்கொண்டு முடிந்தது)

கடிசூத்திரப்பொன் - பெயர் + (4ஆம். வே. பொ,)+பெயர்

கடிசூத்திரம் செய்வதற்கு பொன்

(நான்காம் வேற்றுமை வினை கொண்டு முடிந்தது)

கொலையுடம் பட்டான் - பெயர் + (4ஆம் வே.பொ.) + வினை

கொலை செய்வதற்கு உடன் பட்டான்

(நான்காம் வேற்றுமை வினை கொண்டு முடிந்தது)

ஆறாம் வேற்றுமை. பெயர் + (வே. பொ.) + பெயர்

என்ற அமைப்பில் மட்டுமே வரும்.

யானைக்கோடு- பெயர் + (6ஆம் வே. பொ.) + பெயர்

யானையது கோடு

(ஆறாம் வேற்றுமை பெயர் கொண்டு முடிந்தது)

உவமைத்தொகை

பெயர் + (உவம உருபு) + பெயர் என்ற அமைப்பினை உடையன. பெயர் கொண்டு முடிவன.

மலர்க்கை, மதிமுகம்

மலர்போன்ற கை, மதிபோன்ற முகம்

மலர்க்கை - பெயர் + (உவம உருபு) + பெயர்

(மலர்போன்ற கை) தொடரமைப்பில் இதைச் சிறுதொடர் அமைப்பாகக் கொள்ளலாம்.

வினைதை;தொகை

இதன் அமைப்பு

வினை+ (காலங்காட்டும் கூறுபாடு) +பெயர்

ஊறுகாய், சுடுசோறு

ஊறும்காய், ஊறுகின்றகாய்

ஊறுகாய் - வினை + (காலங்காட்டும் கூறுபாடு) + பெயர்

இடையில் காலங்காட்டும் கூறுபாடு இதுவும் உவமைத் தொகையைப் போலவே பெயர்கொண்டு முடிவது. இவை இரண்டு சொற்களாயினும் ஒருசொல் நீர்மை உடையன. வினைத்தொகை தன் வினைத்தன்மை உடையதாகவும், பிறவினைத் தொகை உடையதாகவும் அமையும் நிலை உடையது.

1. வருகளிறு- தனி வினைத் தன்மை
2. கொல்யானை- தன்வினைத் தன்மையும் பிறவினைத் தன்மையும்
3. ஆடரங்கு - பிறவினைத் தன்மை

வரும் செயலைச் செய்தது களிறே : எனவே தன்வினையைக் குறித்தது. கொல்லும் செயலைச் செய்தது யானையாகவும் இருக்கலாம் : கொல்லப்பட்டது யானையாகவும் இருக்கலாம் எனவே, இது தன்வினையும் பிறவினையும் கொண்டது. பிறர் ஆடும் செயலைச் செய்ய களமாக அமைந்தது. ஆடரங்கு ஆதலின் பிறவினையைக் குறித்தது.

பண்புத்தொகை

பண்பு என்பது வண்ணம், வடிவம், குணம் என்னும் மூன்று நிலைகளை உடையது. இதன் அமைப்பு,

1. பெயர் + (பண்பு உருபு) + பெயர்
2. பெயரடை+ (பண்பு உருபு) + பெயர்

என்ற இரு நிலைகளில் அமையும்.

வட்டப்பாறை: வட்டமாகிய பாறை

வடிவப்பெயர்+ (ப. உருபு) + பெயர்

நல்லாசிரியர் - குணப்பண்புப் பெயரடை + (ப.உருபு) + பெயர்

நல்ல பண்புடைய ஆசிரியர்

கருங்குவளை- வண்ணப் பண்புப் பெயரடை + (ப. உருபு) + பெயர்.

செந்நிறக்குவளை- செம்மையாகிய நிறமாகிய குவளை

ப. பெயரடை + ப. பெயர் +ப. உருபு +பெயர்

பண்பை விளக்கும் மொழி தொக்கன பண்புத்தொகை, அஃதோடு ஒரு பொருளுக்குரிய பொதுப் பெயரும், சிறப்புப் பெயரும் ஆகிய இரு பெயர்கள் வந்தனவும் பண்புத்தொகையே.

சாரைப்பாம்பு - சாரையாகிய பாம்பு - பொதுப்பெயர் +(ப. உருபு) + சிறப்புப்பெயர்

சிறப்புப்பெயர் முன்னும், பொதுப்பெயர் பின்னும் நின்று இடையில் 'ஆகிய' என்னும் பண்பு உருபு தொக்கி வருவது இரு பெயரொட்டுப் பண்புத்தொகை ஆகும்.

பனைமரம் - பனையாகிய மரம் எனவிரிகிறது. மரம் என்பது அனைத்து மரங்களையும் சுட்டும் பொதுப்பெயராகும். 'பனை' என்பது பல மரங்களுள் ஒன்றாகிய மரத்தைக் குறிப்பதாகச் சுட்டுவதால் சிறப்புப் பெயராகும். இடையில் ஆகிய என்னும் பண்பு உருபு மறைந்துள்ளது.

உம்மைத்தொகை

தொடரமைப்பில் இதைச் சிறு சொற்றொடர் அமைப்பாகக் கொள்ளலாம். இதன் அமைப்பு பெயர் + (உம்) + பெயர் + உம்

வெற்றிலைபாக்கு, உற்றார்உறவினர் இத்தொடர்கள் வெற்றிலையும் பாக்கும், உற்றாரும் உறவினரும் எனவிரிந்து பொருளை உணர்த்துகின்றன இடையிலோ, இறுதியிலோ 'உம்' என்னும் இடைச் சொல் இல்லை மறைந்து நின்று பொருளை உணர்த்துகின்றன.

இரு சொற்களுக்கு இடையிலும் இறுதியிலும் 'உம்' என்னும் இடைச்சொல் தொக்கி வருவது உம்மைத்தொகை ஆகும்.

அன்மொழித்தொகை

தன் பொருளை விளக்காமல் அயல் மொழிப்பொருளை விள்ககுவது அன்மொழித்தொகை இது.

பெயர் + பெயர் +வினை என்னும் அமைப்பில் அமைகினறது.

பொற்றொடி வந்தாள் (தொடி - வளையல்)

இத்தொடரில் முதலில் உள்ள 'பொற்றொடி' என்னும் சொல் பொன்னால் ஆன வளையல் என்னும் பொருளைத் தரும். மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையாகும். இத்தொடர் 'வந்தாள்' என்னும் வினைச்சொல்லைத் தழுவி நிற்பதால் 'பொன்னால் ஆன வளையலை அணிந்த பெண்' வந்தாள் எனப் பொருள் தருகிறது. 'அணிந்த பெண்' என்பது தொடரில் இல்லாத மொழியாகும். வேற்றுமைத் தொகையை அடுத்து அல்லாத மொழி தொக்கி நிற்பதால், இத்தொடர் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை எனப்படும்.

வேற்றுமை, வினை, பண்பு, உவமை, உம்மை ஆகிய தொகை நிலைத் தொடர்களுக்குப் புறத்தே அல்லாத சில மொழிகள் தொக்கு நின்று பொருள் தருவது அன்மொழித் தொகை ஆகும்.

தொல்காப்பியர் (சொல். 48) பண்புத்தொகை, உம்மைத்தொகை, வேற்றுமைத்தொகை ஆகிய முன்றின் புறத்தே தான் அன்மொழித் தொகை பிறக்கும் என்பார். நன்னூலார்(369) பண்புத்தொகை, உம்மைத்தொகை, வேற்றுமைத்தொகை, வினைத்தொகை, உவமைத்தொகை ஆகிய ஐந்தின் புறத்தேயும் பிறக்கும் என்பார்.

முடிவுரை

இலக்கண ஆசிரியர்கள் தொகை நிலைத் தொடர்களைப் பொருள் நிலையிலும் புணர்ச்சி நிலையிலும் பிரித்துள்ளனர். எனவேதான் வேற்றுமை, அல்வழி எனப் பாகுபாடு செய்தனர். அமைப்பு நிவையில் இவற்றை மூன்றாகப் பிரிக்கலாம் அவை,

1. பெயரில் முடிவன
2. வினையில் முடிவன
3. பெயரில் அல்லது வினையில் முடிவன

என்னும் அமைப்பின் அடிப்படையில், வினைத்தொகையும், பண்புத் தொகையும் தொடர்நிலை உடையனவாக அமைந்துள்ளன. அன்மொழித் தொகையானது இரண்டு தொடர்களின் அமைப்பு உடையது. உம்மைத் தொகையும், உவமைத்தொகையும் ஒரு வாக்கியத்தின் கூறுகளாக அல்லது சிறு சொற்றொடர்களாக அமைந்துள்ள நிலையினைக் காண்கிறோம். 'ஒரு சொன்னடைய: ஒரு மொழிபோல் நடப்பன' என்று சொன்னதன் நுட்பம் இதில் பொருந்தி வருகிறது.

குறிப்புகள்:

1. எல்லாத் தொகையும் ஒரு சொன்னடைய (தொல், சொல். 414)
2. மு. வரதராசனார் மொழி நூல் ப.291-292

துணை நூல்கள்

1. *வரதராசன் மு., மொழிநூல் (1970). சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை.*

2. *அகத்தியலிங்கம், ச. (1985) தொல்காப்பிய சிந்தனைகள், அனைத்திந்தியத் தமிழ் மொழியியல் கழகம், அண்ணாமலை நகர்.*

3. *சண்முகம் செ.வை. 2013'தொல்காப்பியமும் தொடரனியலும்', தமிழ் மரபிலக்கணங்களில் தொடரியல் சிந்தனைகள், பக்கம் 7-18 பயிலரங்கு, அண்ணாமலை நகர்.*

தொல்காப்பியத்தில் இயைபு

முனைவர் ஆ. கார்த்திகேயன்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

பின்வரும் எடுத்துக்காட்டுகளுடன் கட்டுரையைத் தொடங்கலாம்.

1. அவன் வென்றான்.

2. அவள் வென்றாள்.

3. அது வென்றது.

மூன்று வாக்கியங்களும் ஒரே அமைப்பை உடையவை. அவன் என்னும் பெயர்ச்சொல் வரும்போது வினையில் னகர ஈறு, அவள் என்ற பெயர்ச்சொல் வருபோது வினையில் ளகர ஈறு, அது என்னும் பெயர்ச்சொல் வரும்போது உகர ஏறிய தகர ஈறு வந்துள்ளன.

1.a அவன் வென்றாள்.

2.a அவள் வென்றான்.

3.a அது வென்றாள்.

போன்ற வாக்கியங்கள் பிழையான வாக்கியங்கள் பொருத்தமில்லாத ஈறுகளைப் பெற்று வந்ததால் அவை பிழையாயின. வாக்கியங்கள் (1-3)இல் எழுவாய் பெயருக்கு வினைக்கு உறவு இருப்பதைக் காணலா. இந்த உறவுநிலையையே இயைபு என்பர். எழுவாய் இட, எண், பால் ஆயவற்றில் வினையோடு இயைந்து வருவதால் அந்நிகழ்வை இயைபு என்பர். இன்னுமோர் எடுத்துக்காட்டு ஆங்கிலத்திலிருந்து காண்போம்.

4. The boy reads the book.

5. The boys read the book.

'boy' என்ற ஒருமைப்பெயர் வருபோது வினைச்சொல்லில் 's' என்ற உருபு சேர்க்கப்படுன்றது. 'boys' என்ற பன்மைப்பெயர் வருபோது வினைச்சொல் 's' சேர்க்கப்படுவதில்லை.

4a. The boys reads the book.

5a. The boys reads the book.

என்பவை பிழையான வாக்கியங்கள். ஆங்கில மொழியில் படர்க்கை, ஒருமையில் நிகழ்காலத்தில் வினைச்சொல்லுடன் 's' சேர்க்க வேண்டும். இங்கே எழுவாய்க்கு வினைக்கு ஓர் இயைபு நிகழ்வதைக் காண்போம்.

மற்றுமோர் எடுத்துக்காட்டை பிரெஞ்சு மொழியிலிருந்து தருவோம்.

6. *un livre interessant*
'ஒரு விறுவிறுப்பான புத்தகம்'

7. *une piece interessante*
'ஒரு விறுவிறுப்பான நாடகம்'

8. *des livres interessants*
'சில விறுவிறுப்பான நூல்கள்'

9. *des pieces interessantes'*
'சில விறுவிறுப்பான நாடகங்கள்'

பெயரடைக்கு பெயர்ச் சொல்லுக்கு (ஒருமை, பன்மை, ஆண்பால், பெண்பால்) இயைபு இருப்பதைக் காணமுடின்றது.

10. *this book 'இந்தப் புத்தகம்'*
these books 'இந்தப் புத்தகங்கள்'
that book 'அந்தப் புத்தகம்'
those books 'அந்தப் புத்தகங்கள்'

ஆங்கிலத்திலும் சுட்டுப் பெயரடைக்கு பெயருக்கு ஒருமை, பன்மையில் இயைபு இருப்பதைப் பார்க்கலாம்.

உலக மொழிகள் பலவற்றில் இயைபு காணப்படுன்றது. ஆங்கிலம் போன்ற மொழிகளில் குறைந்த அளவிலும் பிரெஞ்சு போன்ற மொழிகளில் அதிகமாகவும் இயைபு உள்ளன. இந்தியாவில் பேசப்படும் மொழிகளில் திராவிட மொழிகளில் எழுவாய்க்கு முற்று வினைக்கு இயைபு காணப்படுகின்றது. இந்தோ-ஆரிய மொழிகளில் எழுவாய்க்கு வினைக்கு காணப்படுவதோடு மட்டுமல்லாமல் பெயரடை-பெயர், பெயரெச்ச வினை-பெயர் ஆகியவற்றோடு இயைபு காணப்படுன்றது.

ஹாக்கெட் போன்ற மொழியியல் அறிஞர்கள் இயைபு உள்வட்டத் தொடர்களிலும், வெளிவட்டத் தொடர்களிலும் அமையலாம் என்று கூறுவர். இயைபு அமைந்துள்ள தொடர்களில் ஓர் உறுப்பு முதல் உறுப்பாகவும், மற்றொரு உறுப்பு சார்பு உறுப்பாகவும் இருக்க வேண்டும்.

this book *these books*	*உள்வட்டத் தொடர்கள்*
The boy reads the book *The teacher holds the class*	*வெளிவட்டத் தொடர்கள்*

தொல்காப்பியத்தில் எண், பால், இடம்

தொல்காப்பிய கிளவியாக்கத்தில் சொற்களை உயர்திணை, அஃறிணை என்று வகைப்படுத்தி[1] ஐம்பால் வகைப்பாட்டையும் தருகிறார்.[2] உயர்திணையில் அடங்கும் பேடி, பேடர், தேவன், தேவி போன்ற பெயர்களைத் தருகிறார்.

திணை : உயர்திணை, அஃறிணை

பால் : ஆடூஉ அறிசொல்

மகடூஉ அறிசொல்

பல்லோர் அறியும் சொல்

ஒன்றறி சொல்

பலவறி சொல்

பின்னர் ஐபாலை உணர்த்து ஈறுகளை விவரிக்கின்றார்.[3]

னகர ஒற்று - ஆண்பால்

ளகர ஒற்று - பெண்பால்

ரகர ஒற்று,

பகரக் கிளவி - பலர்பால் ஈறுகள்

மாரைக் கிளவி

து, று, டு - ஒன்றன்பால் ஈறுகள்

அ, ஆ, வ - பலவின்பால் ஈறுகள்

ஐம்பாலை அறியுமாறு இறுதியில் நிற்கும் உருபன்கள் பதினொன்று வினைச்சொல்லின் ஈற்றில் வந்தால் மட்டுமே தெளிவாகத் திணை, பால்களை உணர்த்தும். இந்தச் சூத்திரம் மிகவும் முக்கியமான சூத்திரம்.[4]

தோற்றமாக என்பது பெரிதாக என்று குறித்து நின்றது. எனவே பெயரொடு வருகை சிறுவரவிற்று என்று கொள்ளப்படும். ஆடூஉ, மகடூஉ, மக்கள், மரம், அவை எனப் பெயர்க்கட் பிறவாற்றானும் வரும் ஆகலின் (தெய்வச் சிலையார்)

பால் உணர்த்துதற்குப் புலப்படுதற்கண் வினைச்சொற்கு ஈறாய்ப் புலப்படும். இப்பதினோரிறும் பெயர்க்கண் திரிபுடையவாய் வருதலானும் பெயர்க்கும் இவ்வீறுகள் கோடல் ஆகாமை உணர்க (நச்சினார்க்கினியர்)

ஐம்பால் உணர்த்து ஈறுகள் பெயர்ச்சொற்களில் (எழுவாயில்) இல்லாமல் போகலாம். ஆனால் வினைச்சொற்களில் மட்டுமே அவற்றைத் தெளிவாகக் காணலாம்.

இயைபு

வினைச்சொல்லில் பாலினை உணர்த்தும் ஈறுகள் உள்ளன. அவற்றைப் போல பெயர்ச் சொல்லில் பாலினை உணர்த்தும் ஈறுகளும் உள்ளன. அச்சொற்கள் ஒன்றோடொன்று தொடராகும் போது மாறுபடக்கூடாது என்று தொல்காப்பியர் இயைபு பற்றித் திட்டவட்டமாகக் கூறுகிறார்.[5] அவை மரிவந்தால் வாக்ய பிழையாகி விடும் என்பது அவரது கருத்து. பால் இயைபைச் சுட்டுன்ற இச்சூத்திரத்தின் வழியாகத் திணை இயைபையும், இட இயைபையும், எண் இயைபையும், ஏனைய இயைபுகளையும் கூறிவிட்டார் என்று உரையாசிரியர்கள் கூறுகின்றனர். தெய்வச்சிலையார் விளக்க இக்கருத்தைத் தெளிவாக உணர்த்துகின்றது.

'அவன் நெருநல் உண்டான்'. இதனுள் அவன் என்னு உயர்திணைப் பெயர் உயர்திணையினைக் கொண்டு முடிதலின், திணை வழுவாதாயிற்று. ஆடூஉப் பெயர் ஆடூஉ வினைகொண்டு முடிதலிற் பால் வழுவாதாயிற்று. படர்க்கைப் பெயரோடு படர்க்கை வினை கொண்டு முடிதலிற் இட வழுவாதாயிற்று.

பால்திரி கிளவியில் இயைபு

பெண்மகன் என்னும் சொல் அக்காலத்தில் வழக்கிலிருந்த சொல். மகன் என்னும் ஆடூஉவறிசொல் பெற்றுப் பால் திரிந்து நின்றது. இருப்பினும் பெண்பால் பொருண்மைக்கண் நின்றது. எனவே இச்சொல் வினை கொள்ளுமிடத்துப் பெண்பாலுக்குரிய வினையைக் கொண்டே முடியும். (எ-கா) பெண்மகன் வந்தாள்.

உயர்திணை உமைத் தொகையில் இயைபு

உயர்திணை மருங்கின் உமைத் தொகையே
பலர்சொல் நடைத்துஎன மொழிமனார் புலவர்
(எச்சவியல் 421)

(எ.கா.) கபில பரண நக்கீரர்

இத்தொகையில் அமைந்துள்ள மூவரின் பெயர்கள் கபிலன், பரணன், நக்கீரன் என்பதாகும். இவை தொகையாகும்போது கபில பரண நக்கீரன் என்று (சந்தி விதி) மாறும். இச்சொற்கள் மூவராய் நின்றமையின் வந்தார் என்னும் பன்மையோடு முடிதல் வேண்டும். எனவே நக்கீரன் என்ற பெயரிறு ரகரமாக மாறிற்று.

கபில பரண நக்கீரன் வந்தார்.

கபில பரண நக்கீரர் வந்தார்.

முடிவுரை

1. எண், பால், திணை, இட ஆய இலக்கணக் கூறுகள் தொடரியல் பண்புகளையும், உருபனியல் பண்புகளையும் பெற்றுள்ளன. தொல்காப்பிய மேற்கண்ட இலக்கணக் கூறுகளைப் பெயரியலிலும், வினையியலிலும், கிளவியாக்கத்திலும் விரிவாகப் பேசுன்றது. எண், பால், இட ஆகியவற்றை உணர்த்தும் ஒட்டுக்களைத் (இடைச்சொற்கள்) தனித்தனியே சூத்திரங்களில் அறிமுகப்படும் தொல்காப்பியத் தொடரில் அவை ஏற்படுத்தும் மாற்றங்களையும் பலவிடங்களில் குறிப்பிட்டுள்ளார். 'வினையில் தோன்று பாலறி கிளவியு' என்ற சூத்திர சொற்கள் சேர்ந்து தொடராகும் நிலையைக் காட்டுகின்றது.

2. வினைச்சொற்கள் (வினைமுற்றுக்கள்) எண், பால், இடம் காட்டு ஒட்டுக்களைப் பெற்று அவற்றைத் தெளிவாக வெளிப்படையாக உணர்த்துகின்றன. இருந்தாலும் அவற்றைத் தீர்மானிப்பவை பெயர்ச் சொறகளே. பெயர்ச்சொற்களே திணை, பால், எண், இடம் ஆகியவற்றைப் பண்பாகப் பெற்றுள்ளன.

3. பெயர்ச் சொற்களில் பால், எண், இட காட்டு வெளிப்படையாக வரலாம். வெளிப்படையாக வராமல் இருக்கலாம். திரிந்து வரலாம். எப்படியிருந்தாலும் வினையில் வரும் ஒட்டுக்களைத் தீர்மானிப்பது பெயர்ச் சொற்களே. இதனைத் தொல்காப்பியர் பல இடங்களில் சுட்டுகிறார்.

துணை நூல்கள்

1. Lyons, John (1968), Introduction to Theoretical Linguistics, Cambridge University Press.

2. Matthews, P.H., (1974) Morphology, Cambridge University Press.

3. *தொல்காப்பிய-சொல்லதிகார, நச்சினார்க்னிய, கழக வெளியீடு (1974).*

4. *தொல்காப்பிய-சொல்லதிகார, கதிர் பதிப்பக, திருவையாறு, (2011).*

அடிக்குறிப்புகள்

1. உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை என்மனார் அவரல பிறவே
ஆயிரு திணையின் இசைக்குமன சொல்லே.

2. ஆடூஉ அறிசொல் மகடூஉ அறிசொல்
பல்லோர் அறியு சொல்லொடு சிவணி
அமுப் பாற்சொல் உயர்திணை அவ்வே.
ஒன்றுஅறி சொல்லே பலவறி சொல் லென்று
ஆயிரு பாற்சொற் அஃறிணை அவ்வே.

3. ணஃகான் ஒற்றே ஆடூஉ அறிசொல்
ளஃகான் ஒற்றே மகடூஉ அறிசொல்
ரஃகான் ஒற்று பகர இறுதியு
மாரைக் கிளவி உளப்பட மூன்று
நேரத் தோன்று பலர்அறி சொல்லே.
ஒன்றறி கிளவி தறட ஊர்ந்த
குன்றிய லுகரத்து இறுதி ஆகு
அ, ஆ, வ என வரூஉ இறுதி
அப்பால் மூன்றே பலவறி சொல்லே.

4. இருதிணை மருங்கிற் ஐபா லறிய
ஈற்றுநின் றிசைக்கு பதினோ ரெழுத்து
தோற்றந் தாமே வினையொடு வருமே.

5. வினையில் தோன்று பாலறி கிளவியு
பெயரின் தோன்று பாலறி கிளவியு
மயங்கல் கூடா தமர பினவே (கிளவியாக்க 11)

6. மகடூஉ மருங்கின் பால்திரி கிளவி
மகடூஉ இயற்கை தொழில்வயி னான (பெயரியல் 194)

மொழி புணர் இயல்பு

முனைவர் செ.வை. சண்முகம்
மேனாள் இயக்குநர்
மொழியியல் உயராய்வு மையம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

1. முன்னுரை

தொடரியல் கோட்பாடு, இருபதாம் நூற்றாண்டில் வளர்ந்த மொழியியல் கோட்பாடு. அதில் இரண்டு அடிப்படையான கோட்பாடுகளாகக் கருதப்படுகின்றன. ஒன்று அண்மை உறுப்பு ஆய்வு (Immedate constituent analysis), மற்றொன்றுமாற்றிலக்கணக் கோட்பாடு (Transformational grammar) என்பது. பொதுவாக அறிவியல் கோட்பாடு வளர்ச்சியில் புதிதாக உருவாக்கப்படும் கோட்பாடுகளின் ஆணிவேராகப் பழைய நுல்களில் சில கருத்துகள் கண்டறியப்படும் என்பது அறியப்பட்டுள்ளது. அந்த உண்மை மொழியியலுக்கும் பொருந்தும். மாற்றிலக்கண மொழியியலின் தந்தையாகக் கருதப்படும் நோம் சாம்ஸ்கியும் தம்முடைய நூலில் பழங்கால, போர்ட் ராயல் (Port Royal) இலக்கணம் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். எனவே பழைய நூல்களை இருபதாம் நூற்றாண்டில் படிக்கும்போது செய்ய வேண்டியவை களாக ஜான் லயன்ஸ் (1968: 18) கூறியவை கவனத்தில் இருத்த வேண்டும். 'மொழி அமைப்பு பற்றி செவ்வியல் இலக்கண ஆசிரியர்கள் கூறிய நுண்மாண் நுழைபுலன்கள் சிறந்த மதிக்கத் தகுந்தவையாகவும் வியப்புக்குரியவை யாகவும் இருந்தாலும், பொதுமைப்படுத்தி மறு வருணனை செய்து சான்றனாதார ஆதாரங்களைத் தேடித் தர வேண்டும்.'[1] அந்த முறையில் அண்மை உறுப்பு ஆய்வு - மாற்றிலக்கணக் கோட்பாடு ஆகிய இரண்டின் ஆணிவேர்களும் தொல்காப்பியத்திலும் பிற தமிழ் இலக்கியங்களிலும் உள்ளன என்பது இப்போது கண்டறியப்பட்டுள்ளது.

அண்மை உறுப்பு ஆய்வு, ஒரு வாக்கியத்தில் அல்லது தொடரில் சொற்கள் நீள்வரிசையில் அமைந்திருந்தாலும் அவற்றுக்குள் அண்மை உறவு மாறுபடுவற்கு ஏற்ப, பொருள் மாறுபடுவதால் அண்மை உறவை ஆராய வேண்டியுள்ளது. 'பழைய மாணவர் விடுதி' என்னும் தொடர், மாணவர் என்பது பழைய என்பதோடு அண்மை உறுப்பு உறவு கொண்டிருந்தால் பழைய மாணவர் + விடுதி (அங்குப் படித்த பழைய

மாணவர்களுக்கான விடுதி) என்னும் பொருள்பட, விடுதி என்பதோடு அண்மை உறுப்பு உறவு கொண்டிருந்தால் பழைய+ மாணவர் விடுதி என்பதால் பழமையான மாணவர் விடுதி எனப் பொருள்படும். இங்கு மூன்று சொற்கள் இரண்டு விதமான பொருள் வேறுபடுவதற்கு அண்மை உறுப்பு உறவு மாறுபாடே காரணம் ஆகும். அதற்கு மேலாக இங்கு இலக்கண உறவும் மாறுபடுகிறது. முன்னது பண்புத் தொடர் + பெயர் (பழைய மாணவர் + விடுதி) எனவும், பின்னது அடை + ஆறாம் வேற்றுமைத்தொகை (பழைய + மாணவர் விடுதி= மாணவர்களுடைய விடுதி) எனவும் உறவு மாறுபடுகின்றன.

வண்ணச் சினைச் சொல் என்னும் ஒரு தொடரின் அமைப்பை விளக்கும்போது அங்குள்ள வண்ணம் + சினை + முதல் என்னும் மூன்று சொற்களும் அடை, சினை, முதல் என்னும் அமைப்பில் வரும் என்று தொல்காப்பியர் கூறுவது ('அடை, சினை முதல்என மூன்றும் மயங்காமை/ நடைபெற்றியலும் வண்ணச் சினைச்சொல்' (கிளவி. 26)) அடை என்பது தொடரியல் செயல்பாடு ஆகும். செங்கால் நாரை என்பதைத் தெய்வச்சிலையார் 'வண்ணம் சினைமேல் ஏறி முதலொடு முடிந்தது' என்று விளக்கியுள்ளார். அதாவது செங்கால் + நாரை என்று அமையும். அதாவது தொடரியல் நோக்கில் இங்கு இரண்டு தொகைகள் i. பண்புத் தொகை (செங்கால்), ii. ஆறாம் வேற்றுமைத் தொகை (செங்கால்+ நாரை) இருப்பதாக அமையும்.

தொல்காப்பியரின் 'மொழிபுணர் இயல்பு' என்னும் கருத்தும் அதைப் பிற இலக்கணங்கள் ' பொருள்கோள்' எனக் குறிப்பிட்டு விளக்கும் கருத்துகளும் மாற்றிலக்கணக் கோட்பாடுகளின் ஆணி வேர் தமிழில் இருப்பதற்கு நல்ல சான்று. அவையே இங்கு மொழி புணர் இயல்பு என்னும் தலைப்பில் ஆராயப்படுகிறது.

2. மரபு இலக்கணமும் மொழியியலும்

மொழியியல் ஒரு வாக்கியத்துக்குள் தொடர் அமைப்பில் ஏற்படும் மாற்றங்களையும், ஒரு வாக்கியம் மற்றொரு வாக்கியமாக (அதாவது செய்வினை வாக்கியம் செயப்பாட்டு வாக்கியமாக, (அரசன் கோயில் கட்டினான் ---> கோயில் அரசனால் கட்டப் பட்டது; கேள்வி வாக்கியமாக (யார் கோயில் கட்டினான், அரசனா கோயில் கட்டினான், அரசன் கோயிலாக் கட்டினான்) மாற்றுவதைப் பற்றியும், ஒரு வாக்கியம் தொடராக மாற்றுவது அதாவது வாக்கியத்தை எச்சத் தொடராக மாற்றுவது (முருகன் வந்தான் ---> வந்த முருகன்) பற்றியும் விளக்கும். அதன் அடிப்படையில் புற நிலை அமைப்பின் புதை நிலை அமைப்பை விளக்கும்.

தமிழில், ' முருகன் ஒரு மாணவன்' என்னும் பெயர் + பெயர் வாக்கியமாக இருந்தாலும் 'முருகன் ஒரு மாணவன் ஆவான்' என்பதே புதைநிலை வாக்கியம் எனக் கூறும். அதற்குக் காரணம் அதை எச்சத் தொடராக மாற்றும்போது, 'மாணவன் ஆன முருகன்' என்றுதான் சொல்கிறோம். அப்படியானால் புதைநிலையில், 'ஆவான்' என்பது வினைமுற்று புதைநிலையில் கெட்டுவிட்டது என்று கொள்ள வேண்டும் என்று மாற்றிலக்கணம் கூறும். மாற்றிலக்கணத்தில் (மொழி) மாற்று (Transformation) என்பது சிறப்பாகப் பேசப்படும்.

தமிழில் தொல்காப்பியத்தில் வேற்றுமை இயலில் வேற்றுமை மயங்கியலிலும் ஒரு வாக்கியத்தில் நடைபெறும் பல மொழி மாற்றங்கள் விளக்கப்பட்டுள்ளன (சண்முகம், 2004) .மூன்றாம் வேற்றுமைப் பொருளாக வினைமுதல் ('வினைமுதல் கருவி அனைமுதற் றதுவே' வேற்றுமை. 12. 3) என்று கூறியது அதன் புதைநிலை பண்பை மனத்தில் கொண்டதுதான். அரசனால் கோயில் கட்டப்பட்டது என்பது போன்றவையே மூன்றாம் வேற்றுமை வினைமுதலுக்கு உரிய எடுத்துக்காட்டு. அது வினைமுதல் என்று கொள்வதற்குக் காரணம் அரசன் கோயில் கட்டினான் என்ற வாக்கியத்தின் மொழி மாற்று என்றுகொண்டே அதில் அரசன், வினைமுதல் என்று கொள்ளப்படுகிறது.

அதுபோல, நாலாம் வேற்றுமையில் (15.2) 'அதுவாகு கிளவி' என்பதை ஒரு பொருளாகக் குறிப்பிட்டுள்ளார். அதற்கு எடுத்துக்காட்டு, 'தாலிக்குப் பொன் (வாங்கினான்)' என்பது . அதாவது 'தாலி செய்வதற்குப் பொன் (வாங்கினான்)' என்பதே சரியான பொருள். அங்கு, செய்வது என்னும் வினைகெட்டு அங்குள்ள நாலாம் வேற்றுமை சேர்ந்ததால்தான் தாலிக்குப் பொன் என்னும் தொடராக அமைகிறது.

வாக்கியக் கட்டமைப்பில் சில தனி வாக்கியங்களின் மயக்க நிலை இருப்பதை அதாவது கட்டமைப்பு மாறுபாட்டால் ஒன்றுக்கு மேற்பட்ட பொருள் கொள்ளுவதை 'இது செயல் வேண்டும்' என்னும் ஒரு வாக்கிய வகை மூலம் தொல்காப்பியர் (வினை. 46) விளக்குகிறார். 'இதுசெயல் வேண்டும் என்னும் கிளவி / இருவயின் நிலையும் பொருட்டா கும்மே / தன்பா லானும் பிறன்பா லானும்' (வினை. 46) என்பது அந்தச் சூத்திரம். அந்த வாக்கியம் ஒரு கருத்தா உடையதாகவும் அல்லது இரண்டு கருத்தா உடையதாகவும் கருதலாம் என்னும் நிலை உடையது. முருகன் படித்தல் வேண்டும் என்னும் வாக்கியம் முருகன் படிக்க விரும்புகிறான் என்றால் தன்பாலான் ஆனது, முருகன் படிக்கத் தந்தை விரும்புகிறார் என்றால் பிற பாலான் ஆனது. அதாவது ஒரு

புற நிலை வாக்கியம் இரண்டு புதைநிலை அமைப்புகளை உடையது என்று ஆகிறது. முன்னது ஒரு வாக்கியம், பின்னது இரண்டு வாக்கியம். இங்கு இரண்டு வாக்கியங்களின் புதைநிலை அமைப்பை மட்டுமே தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். உண்மையில் 'வேண்டும்' என்ற வினையின் இரட்டைத் தன்மையின் அடிப்படையில் அந்த மொழி மாற்று அமைகிறது. அவை என்னென்ன மொழி மாற்று பெற்று புற நிலை வாக்கியமாக மாறுகிறது என்று குறிப்பிடவில்லை என்பது அறியத் தகுந்தது. அதாவது தொடரியலில் ஒரு பகுதியை மட்டும் விளக்கியுள்ளார். இப்படிப்பட்ட வாக்கியங்கள் மயக்க வாக்கியங்கள் (Ambiguous sentences) என அழைக்கப்படும். அப்படிப்பட்ட வாக்கியங்களே மாற்றிலக்கணம் தோன்றுவதற்கு மூல காரணம் ஆகும். அந்தச் சூத்திரம் ஒரு புறநிலையின் புதைநிலை அமைப்பை விளக்குவதாகக் கொள்ளலாம். அது போலத் தொடர் நிலையில் ' தடுமாறு தொழிற் பெயர்' (வேற்றுமை மயங்கு. 12) அதாவது, 'புலி கொல் யானை' என்ற தொடர் 'புலி கொன்ற யானை', 'யானை கொன்ற புலி' என்ற இரண்டு பொருள் படுவது பற்றி விளக்குவது மயக்கத் தொடரைத் தொல்காப்பியர் உணர்ந்திருக்கிறார் என்பதைத் தெளிவுபடுத்துகிறது.

மாறாக இன்னொரு சூத்திர, ஒரு புதைநிலை வாக்கியம் என்னென்ன மாற்றம் அடைந்து புறநிலை வாக்கியமாக அமைகிறது என்பதை விளக்குகிறது.

'செயப்படு பொருளை செய்தது போலத்
தொழிற்பட கிளத்தல் வழக்கியல் மரபே' *(வினை. 49)*

என்னும் சூத்திரத்தின் மூலம் ஒருவன் மரத்தை முறித்தான் என்பதை மரம் முறிந்தது எனக் கூறலாம் என்று குறிப்பிட்டுள்ளார். இங்கு புதைநிலை வாக்கியத்தில் உள்ள செயப்படுபொருள் எழுவாயாக மாறுவதைச் 'செய்தது போல ' என்றும், செயப்படுபொருள் குன்றா வினை (முறித்தான்) செயப்படுபொருள் குன்றிய வினையாக (முறிந்தது) மாறுவதைத் 'தொழிற் பட கிளத்தல்' என்றும் கூறியுள்ளதாகக் கருதலாம். அதாவது இரண்டு இலக்கணக் கூறுகளுக்கு உள்ள மொழி மாற்று விதிகளைக் குறிப்பிட்டுள்ளார் என்பது தெளிவு. அப்படியானால் எழுவாய் கெடுதலைக் குறிப்பிடவில்லை என்று ஆகிறது. 'வழக்கியல் மரபே' என்பது இயல்பான பேச்சு மொழியிலும் மொழி மாற்றுகள் உண்டு என்று குறிப்பிட்டுள்ளார் என்று ஆகும்.

3.மொழி புணர் இயல்பு

தொல்காப்பியர் செய்யுள் மொழியின் தொடரியல் பண்புகளாகவே 'மொழி புணர் இயல்பு' என்ற கருத்தமைவைக்

குறிப்பிட்டுள்ளார். அதாவது எச்சவியல் முதல் சூத்திரத்தில் செய்யுள் ஈட்டச்சொற்கள் என்று இயற்சொல், திரிசொல், திசைச் சொல், வட சொல் என்று குறிப்பிட்டு அவற்றை அடுத்த 5 சூத்திரத்தில் விளக்குகிறார். அந்தச் சொற்கள் 'தொடுக்கும் காலை' அடையும் எழுத்து மாற்றங்களை (மெல்லெழுத்து வல்லெழுத்து ஆதல், முந்தை ---> முத்தை (முத்தை வரூஉம் காலம் தொகைமரபு, 22.5) குறிப்பிட்டுள்ளார். அது பிற்காலத்தில் செய்யுளின் வரும் எழுத்து விகாரம் என்று அழைக்கப்படுகிறது. அடுத்தே மொழிபுணர் இயல்பு என்று விளக்குகிறார்.

எல்லா உரையாசிரியர்களும் 'மொழி புணர் இயல்பு' என்பதற்கே 'நான்கு சொல்லும் (இயற்சொல், திரி சொல், திசைச்சொல்,வட சொல்) செய்யுளிடத்துத் தம்முட் புணரும் முறை ' என்றே பொருள் கொண்டுள்ளதும் சுட்டிக்காட்டத் தகுந்தது (சிவலிங்கனார், 1988: 50).

'மொழி புணர் இயல்பு' என்பதைச் சேனாவரையர் 'செய்யுளிடத்து விகார வகையான் மொழிகள் தம்முள் புணருமாறு கூறுகின்றார்' என்று சூத்திர முன்னுரையில் குறிப்பிடப்பட்டிருப்பது i. சொற்கள் (மொழி) இயல்பான முறையிலிருந்து சேருவது, ii. மாறுபட்டு சேருவது என்ற வகை இருப்பதும் iii. பின்னது செய்யுளுக்கே உரியது என்று கருத்துகள் பெறப்படுகின்றன. செய்யுள் என்ற பனுவலைச் சார்ந்தது என்பதற்குத் தொல்காப்பியரே செய்யுளுக்கு உரிய உறுப்புகளில் ஒன்றான அடியில் நடக்கும் மாற்றத்தை அடிமறி என்று ஒரு வகையைக் கொண்டிருப்பதும். சுண்ணம் என்ற வகையை விளக்கும்போது செய்யுளின் இன்னோர் உறுப்பான சீரையும் 'ஈரடி எண்சீர்' என்று கூறுவதும் (எச்சம், 10.2) உறுதிப்படுத்துகிறது. மேலும் பிற்கால இலக்கணங்களால் பொருள்கோள் என்ற தலைப்பில் கூறிய வகைகளிலும் அடிமொழி மாற்று, அளைமறிபாப்பு என்ற வகைகளின் பெயர்களும், அவற்றின் விளக்கமும் பொருள் கோள் செய்யுள் சார்ந்தவை என்று பெறப்படுவதால் ஒன்றுக்கு மேற்பட்ட வாக்கியங்களில் நடைபெறும் மொழி மாற்றங்களை விளக்குகின்றன என்பதைத் தெளிவுபடுத்தும்.

தமிழில் இந்த ஆய்வு தொடர்ந்து நடைபெற்று வந்துள்ளதற்குப் பிற்கால இலக்கணங்களும் பொருள் கோள் நடைபெற்றுள்ளது என்பது அவர்கள் சில புதிய வகைகளை இனம் கண்டுள்ளதால் அறியலாம்.

மொழி புணர் இயல்பு என்பது இலக்கியத் திறனாய்வு நோக்கில் இருபதாம் நூற்றாண்டின் துறைகளில் ஒன்றான நடையியல் ஆய்வின் முன்னோடி அல்லது முதல் கட்டம் என்று கருதத்

தகுந்தது. அடுத்து கருத்தாடல் ஆய்வுக்கும், இந்த நூற்றாண்டில் பேசப்படும் மொழியியல் இலக்கியத் திறனாய்வுக்குக் கூட முதல் நிலை. அடுத்த நிலை அந்த மாற்றத்துக்கான உளவியல், சமூகவியல், தத்துவ இயல் காரணங்களைக் கண்டறிந்து காதல் மாந்தரின் மன உணர்வுகளைப் புரிந்துகொள்ள உதவுவது. இந்த முறையில் இலக்கியத் திறனாய்வுக்கும் உதவும் கருத்தமைவாக 'மொழி புணர் இயல்பு' அமைந்துள்ளது உணரத் தகுந்தது.

தொல்காப்பியர் 'மொழி புணர் இயல்பு' பற்றிய எச்சவியலில் (8 முதல் 13) நிரனிறை, சுண்ணம், அடிமறி, மொழி மாற்று என்னும் நான்கு வகைகளையே குறிப்பிட்டுள்ளார்.

நிரனிறை சுண்ணம் அடிமறி மொழிமாற்று
அவைநான்கு என்ப மொழிபுணர் இயல்பே (மரபு. 8)

இங்கு மொழி என்பது சொல்லையே குறிக்கும். அதற்கு நல்ல எழுத்ததிகார மொழி மரபு என்ற இயல் தலைப்பு நல்ல சான்று.

இதை அடுத்து அந்த நாலு வகைகளையும் அடுத்து வரும் ஐந்து சூத்திரங்களில் விளக்கியுள்ளார். அதற்கு ஏற்பத் தொல்காப்பியரே மொழி மாற்று என்ற ஒரு வகையைச் சேர்த்துள்ளார். அப்படியானால் இயல்பான முறை என்று இருக்க வேண்டும் என்ற கருத்து பெறப்படுகிறது. பிற்கால இலக்கணங்கள் ஆற்றொழுக்கு என்பதைப் பல வகையான கலைச்சொற்களால் குறிப்பிட்டுள்ளார்கள் அதை மனத்தில் கொண்டு நச்சினார்க்கினியர் 'மொழி புணர் இயல்பு' என்பதே 'இயல்பு புணர்மொழி' என்று பாட விளக்கம் (அதாவது ஒரு பாடத்தையே மாற்றி விளக்கம் செய்வது) 'இயற்கையாகவே தம்முள் கூடிப் பொருள் உணர்த்தும் சொற்கள் அங்ஙனம் இயற்கையாகக் கூடிப் பொருள் உணர்த்தாது விகாரப்பட்டு பொருள் உணர்த்தும்' என்று பொழிப்புரை எழுதியுள்ளது அந்தக் கருத்தைத் தெளிவுபடுத்தும்.

அந்த நாலு வகைகளில் மொழிமாற்றும் நிரனிறையும் வழக்குக்கும் (பேச்சு மொழி) செய்யுளுக்கும், சுண்ணமும் , அடிமறியும் செய்யுளுக்கு மட்டும் உரியதாகவே தொல்காப்பியர் விளக்கியுள்ளதாகக் கொள்ளலாம் .

3.1 நிரனிறை

'...நிரனிறை தானே /வினையினும் பெயரினும் நினையத் தோன்றி/ சொல் வேறு நிலைஇப் பொருள் வேறு நிலையல்' (எச்சம். 9. 2- 3) என்பது தொல்காப்பியர் விளக்கம். நிரன் நிறை என்பது நிரன் நிறு (வரிசையாக நிறுத்துதல்) என்ற வினையின் பொருள் தொழிற் பெயர் வடிவம். அதனால் ஓர் இலக்கணக்

கூற்றைப் பெயர்ச் சொற்களை / வினைச்சொற்களைத் தொடர்ந்து நிறுத்துதல் என்று பொருள்படும். தொல்காப்பியர் இரண்டு வேறு இலக்கணக் கூறுகள் தொடர்ந்து இரண்டு இடத்தில் வரும் புறநிலை அமைப்பை மட்டுமே இந்தச் சூத்திரத்தில் விளக்கியுள்ளார் என ஆகிறது.

அ1 ஆ2 .... எ1 ஏ2 இருப்பது அ1 எ1 ,,, ஆ2 ஏ2 என்பதால் இது ஒரு வகை முன்னிறுத்த மொழி மாற்றே.

'அருளல்லது யாதெனின் கொல்லாமை கோறல்
பொருளல்லது அவ்வூன் தினல்'

என்னும் குறளின் (254) கொண்டுகூட்டு 'அருள் யாதெனின் கொல்லாமை, (அருள்)அல்லது யாதெனின் கோறல், பொருள் அல்லது அவ்வூன் தினல்' என்பதே . 1அ, 1ஆ, 2,3,, 4, 5,6,7 என்பவை 1அ 2,, 3, 1ஆ 4 5,6, 7 என்ற முறையில் கொண்டு கூட்டுப்பட்டுள்ளது. 1,2 ..... 5,6 என்றால் 1,5, 2, 6 என்ற முறையில் நிரனிறை அமைந்துள்ளது. எனவே அது பெயர் நிரனிறை. இருந்தாலும், ஒரு வகை முன்னிறுத்த மொழி மாற்றத்தில் ஒரு குறிப்பிட்ட வகை என்று கொள்ளலாம் அது உலகப் பொதுமையானது.

ஊர்ந்தின் புறார் ஆயினும் கையின்
ஈர்த்தின் புறூஉம் இளையோர் போல
உற்றின் புறேஎம் ஆயினும்
.... ஊரன் கேண்மை
செய்தின் புற்றனெம் (குறுந். 61)

என்னும் அடிகளில் ஊர்ந்தின்புறும் செயல், செய்தின்புறுதலுக்கும் ஈர்த்தின்புறும் செயல் கேண்மை, செய்தலுக்கும் நிரனிறையாக அமைந்துள்ளது வினை நிரைநிரைனிறைக்கு எடுத்துக்காட்டாக அமையும். இங்கும் 1,2, 3, 4 என்பவை --> 1,3,2, 4 என்பவை முன்னிறுத்தம் மாற்றம் செய்திருப்பினும் அவை நிரனிறையாக அமைந்துள்ளதும் கவனத்துக்கு உரியது. மொழி மாற்றில் ஒரு சிறப்பு வகை என்பதில் ஐயம் இல்லை. இங்கு ஒரு முன்னிறுத்த மாற்றம் மட்டுமே நடைபெற்றுள்ளது. பிற்கால இலக்கணங்கள் நிரனிறையில் சில புதிய வகைகளைக் கூறியிருப்பது மொழி ஆய்வின் வளர்ச்சி எனலாம்.

தொல்காப்பியர் செய்யுளியலில் தொடையை விளக்கும்போது, 'நிரனிறுத்து அமைத்தலும் இரட்டையாப்பும் / மொழிந்தவற் றியலான் முற்றும்' என்று கூறியுள்ளதால் நிரனிறை தொடை யாக்கத்துக்கு அதாவது தொடை அமைவதற்குப் பயன்படும் என்றும் (செய்யுள். 90) தெளிவாகிறது.

சாயலும் நாணும் அவர் கொண்டார் கைம்மாறா
நோயும் பசலையும் தந்து (குறள் 1183)

(என்னிடம் இருந்த மேனியழகையும் பசலையும் எடுத்துக்கொண்டு கைம்மாறாக காம நோயையும் நாணத்தையும் தந்துவிட்டார்). இங்கு 'சாயல் ... பசலை, நாண் ... நோய்' என்பதே நிரனிறை முறை (1,2,3, 4 --> 1, 4, 2,3) மயக்க நிரனிறை என்று இளம்பூரணர் விளக்கம் கொடுத்துள்ளார். உண்மையில் அதற்குக் காரணம் சாயல் என்பதற்கு அடி எதுகையாக அமைய நோய் என்பதை முன்னிறுத்தம் செய்துவிட்டார். எனவே இங்கும், ஒரு முன்னிறுத்த மாற்றம்தான் நடைபெற்றுள்ளது.

3.2 சுண்ணம்

சுண்ணம் என்னும் சொல் பொடி என்னும் பொருள் உடையது, அதனால், 'பட்டாங்கு அமைந்த ஈரடி எண்சீர்/ ஒட்டுவழி அறிந்து துணித்தனர் இயற்றல்' (எச்சம் 10. 2- 3) என்ற விளக்கத்தில் 'ஈரடி எண்சீர்' என்று வரையறுப்பதால் இது தெளிவாகச் செய்யுளுக்கு உரியது என்று ஆகிறது. மேலும் இது எங்கே ஒட்டப் போகிறோம் என்று வெட்டுதல் (துணித்தல்) என்பது மொழி மாற்றும்போது எங்கே மாற்றி வைக்கப்போகிறோம் என்று கூறுவதுபோல உள்ளது. அதாவது இரண்டு எட்டுச் சீருக்குள் அமைந்த ஒரு வகை மொழி மாற்றே.

உரையாசிரியர்கள் எல்லோரும் 'சுரைஆழ அம்மிமிதப்ப வரையனைய/ யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப (கானக நாடன் சுனை)' என்னும் பாடலைக் கொடுத்து ' சுரை மிதப்ப, அம்மி ஆழ யானைக்கு நிலை, முயற்கு நீத்து எனத் துணித்து இயற்றுக ' என்று இளம்பூரணர் விளக்கியுள்ளார். 1அ, 1ஆ, 2அ, 2ஆ,3,4,5, 6, 7, 8, என்பது 1அ, 3, 1ஆ,4, , 5, 8,7, 6 என்று அமைந்துள்ளது.

நள்ளென்றே யாமம் சொல்லவிந்து
இனிதுடங் கினரே மாக்கள் முனிவின்று
நனந்தலை உலகமும் துஞ்சும்
ஓர்யான் மன்ற துஞ்சா தேனே (குறுந். 6)

'யாமம் நள்ளென்று அன்றே. மாக்கள் சொல்லவிந்து இனிது அடங்கினேரே. நனந்தலை உலகமும் முனிவுஇன்று துஞ்சும்' என்பதே பொழிப்புரை. இங்கு முதல் இரண்டு அடிக்குள்ளும் இரண்டாம் மூன்றாம் அடிக்குள்ளும் மொழி மாற்று நடைபெற்றுள்ளது. அதுபோல,

பெறுகதில் அம்ம யானே பெற்றாங்கு
அறிகதில் அம்மவில் வூரே மறுகில் (குறுந். 14, 3, 4)

'யானே பெறுகதில் அம்ம, இவ்வூரே பெற்றாங்கு அறிகதில் அம்ம' என்பதே பொழிப்புரை என்பதால் இங்கு இரண்டு அடிக்குள் மொழி மாற்று நடைபெற்றுள்ளது.

அவர் சுண்ணத்தின் எல்லையை யாப்பு நோக்கில் அதாவது எட்டு சீரால் ஆன இரண்டு அடி ('ஈரடிஎண்சீர்') என்று விதித்ததன் சிறப்பு புரியவில்லை.

பொதுவாகச் சுண்ணம் என்பது முன்/ பின் மொழிமாற்றத்தையே குறிப்பிடுகிறது. ஆனாலும் ஏழு சீர் இரண்டு அடி கொண்ட திருக்குறளில் பல வித முன் / பின் மாற்றங்கள் காணப்படுகின்றன . தொல்காப்பியர் செய்யுளுக்கு உரியதாகக் கொண்டதன் ஒரு விளைவாக இருக்கலாமோ என்று எண்ணத் தோன்றுகிறது. எனவே மொழியியல் நோக்கில் சுண்ணம் தனி வகையாகக் கொள்ள முடியாது என்றே தோன்றுகிறது.

சுண்ணம் என்பது பொடி என்பதால் பல அடிகளைத் தாண்டி சொற்கள், குறிப்பாக விளி சொற்கள் போன்றவை வருவதைக் கொள்ளலாமா எனத் தோன்றுகிறது.

நற்றிணை 81வது பாடலில் 5வது அடியான' பூண்கதில் பாக நின்தேரே பூண் தாழ்' என்பது ' பாக நின்தேரே பூண்க தில்' என்று முதல் அடியாகக் கொண்டே பொழிப்புரைக்கப்படுகிறது.

அகநானூறு 16வது பாடலில் 'மகிழ்ந' என்னும் விளிச்சொல் 17வது அடியில் வந்துள்ளது. அதுவே பொழிப்புரையில் முதல் சொல்லாக அமைகிறது. பொடி காற்றின் பரந்து இடம் மாறுதல் போலப் பல அடி தாண்டி, ஒரு சொல்லின் முன்னிறுத்தம் செய்வதே சுண்ணம் என்று கருதத் தகுந்தது. அதுபோல நிறைய பாடல்கள் உள்ளன.

நாயுடை முதுநீர்க் கலித்த தாமரைத்
தாதின் அல்லி அயலிதழ் புரையும்
மாசில் அங்கை மணிமருள் அவ்வாய்
நாவொடு நவிலா நகைபடு தீஞ்சொல்
யாவரும் விழையும் பொலந்தொடிப் புதல்வனை
தேர்வழங்கு தெருவில் தமியோற் கண்டே
கூர்எயிற்று அரிவை குறுகினள் யாவரும்
காணுநர் இன்மையின் செத்தனள் கருதி
பொலங்கலஞ் சுமந்த பூண்தாங்கு இளமுலை

வருக மாளஎன் உயிர்எனப் பெரிதுவந்து
கொண்டனள் நின்றோட் கண்டுநிலை செல்லேன்
மாசில் குறுமகள் எவன்பே துற்றனை
நீயும் தாயை இவற்குஎன யான்தன்
கரைய வந்து விரைவனென் கவைஇ
களவுடம் படுநரில் கவிழ்ந்துநிலம் கிளையா
நாணி நன்றோள் நிலைகண்டு யானும்
பேணினென் அல்லெனோ மகிழ்ந வானத்து
அணங்கரும் கடவுள் அன்னோள்நின்
மகள்தா யாதல் புரைவதாங்கு எனவே (அகம்.16)
மகிழ்ந, யானும் (16).... வானத்து (17ஈ), 18,19, 17அ,ஆ.

3.3 அடிமறி

"..அடிநிலை திரிந்து / சீர்நிலை திரியாது தடுமா றும்மே' (எச்சம். 11.) என்று விளக்குவது செய்யுள் அடிப்படையைத் தெளிவாக அறியமுடிகிறது. இளம்பூரணர் 'சீர் கிடந்துழியே கிடப்ப அடிகள் முதலும் இடையும் கடையும் படச் சொல்'(வது) என்று பொழிப்புரைத்துள்ளார். அப்படியானால் ஒவ்வோர் அடியும் பொருள் முற்றப் பெற்றிருக்க வேண்டும் என்று ஆகிறது. அதற்குக் காட்டப்பட்ட சான்றுகள் செயற்கையாக, அதற்காக ஆக்கப்பட்டவை போல உள்ளன. சேனாவரையர், நச்சர் தந்த சான்று -

மாறாக் காதலர் மலைமறந் தனரே
யாறாக் கட்பனி வரலா னாவே
வேறா மென்றோள் வளைநெகி ழும்மே
கூறாய் தோழி யான்வாழு மாறே

சேனாவரையர் 'எல்லா அடியும் தடுமரியவாறு கண்டுகொள்க. பெரும்பான்மையும் நாலடிச் செய்யுட் கண் அல்லது இப்பொருள்கோள் வாராது என்க' என்ற கட்டுப்பாடு பொருந்தாது என்பது இலக்கியம் காட்டும் உண்மையாகும்.

தெய்வச்சிலையார் 'சூரல் பம்பிய சிறுகான் யாறே (சூரல் = பிரம்பு)/ சூரர மகளிர் ஆரணங் கினரே/ வாரல் எனினே யான்அஞ் சுவலே. (4,1, 2, 3,) இதனை யாப்பு இலக்கணத்தினுள் ஆராய்தல் வேண்டும். சொல் நிலைதிரியாமையால் எனின் இது தொடர் மொழித் திரிபு ஆகலான் ஈண்டுக் கூறப்பட்டது. என்பது அவர் விளக்கம்.

சங்க இலக்கியத்தில் ஓர் அடி மட்டும் முழுவதும் இடம் மாறி வந்துள்ளதைக் காணமுடிகிறது. முதல் அடி, கடைசியாக அடி மறி மாற்று

'அதுகொல் தோழி காம நோயே
வதிகுருகு உறங்கும் இன்னிழற் புன்னை
உடைதிரைத் திவலை அரும்புந் தீ நீர்
மெல்லெம் புலம்பன் பிரிந்தெனப்
பல்லிதழ் உண்கள் பாடொல் லாவே' (குறுந். 5)

இங்குக் கடைசி அடி முதல் அடியாக அடிமறி மாற்று நடைபெற்றுள்ளது.

தொல்காப்பியரே சுட்டுச்சொல் இயற்பெயரை அடுத்தே வரும் முதலில் கூறி (கிளவி. 38) அடுத்த சூத்திரத்தில் 'முற்படக் கிளத்தல் செய்யுளுள் உரித்தே' என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால் வேறு பல தொடருக்கும் இது பொருந்தக் கூடியதே.

'கன்றும் உண்ணாது கலத்தினும் படாது
நல்லான் தீம்பால் நிலத்து உக்காங்கு
எனக்கும் ஆகாது என்னைக்கும் உதவாது
பசலை உணீஇயர் வேண்டும்
திதலை அல்குல்என் மாமைக் கவினே' (குறுந். 27)

எனக் கடைசி இரண்டு அடி அமைந்துள்ளதால் கடைசி அடியை முதல் அடியாகக் கொண்டால் பொருள் தெளிவுபடும். எனவே அடி மொழி மாற்று எல்லா நிலையிலும் அமையலாம்.

பல பாடல்களில் இறுதி அடி முதல் அடியாகக் கொண்டு பொருள் கொள்ளும்படி அமைந்துள்ளது.

முட்டு வேன்கொல் தாக்கு வேன்கொல்
ஓரேன் யானுமோர் பெற்றி மேலிட்டு
ஆஅ ஒல்லெனக் கூவு வேன்கொல்
அலமரல் அசைவளி அலைப்ப என்
உணவுநோய் அறியாது துஞ்சும் ஊர்க்கே (குறுந். 28)

சில பாடல்களில் முதல் அடி இறுதி அடியாகவும் அமைந்துள்ளது.

'நாணில மன்றவெங் கண்ணே நாண்ஏர்பு
....
தண்வரல் வாடையும் பிரிந்திசினோர்க் கழலே' (குறுந். 35).

என்னும் பாடலில் 'தண்வரல் வாடையும் பிரிந்திசினோர்க் கழலே கண்ணே நாணில மன்றே' என்று பொருள் கொள்ளப்படுகிறது. (பிறபாடல்கள். குறுந். 138, புறம் 139)). சில பாடல்களில் நடுவில் உள்ள அடி இறுதி அடியாகவும் அமைந்துள்ளது.

'சுனைபூக் குற்றுத் தொடலை தைஇப்
புனக்கிளி கடியும் பூங்கட் பேதை
தானறிந் தனளோ இலளோ பானாட்
பள்ளி யானையின் உயிர்த்து என்
உள்ளம் பின்னுந் தன்னுழை யதுவே' (குறுந். 142)

'உள்ளம் தன்னுழையதுவே தான் அறிந்தனளோ இலளோ' என்று (தலைவன்) பொழிப்புரைப்பதால் நடு அடி இறுதி அடியாக மொழி மாற்று பெறுகிறது.

3ஈ,4, 5, 1, 2, 3 அ,ஆ,இ. 5 அடி உடைய பாடலில், பெருநிலையில் 4, 1,2. 5, 3 என்ற முறையில் அடிமறி மொழி மாற்று செய்தே பொருளைப் புரிந்து கொள்கிறோம்.

'பாணர் தாமரை மலையவும் புலவர்
பூநுதல் யானையொடு புனைதேர் புனையவும்
அறனோ மற்றிது விறன்மாண் குடுமி
இன்னா வாகப் பிறர்மண் கொண்டு
இனிய செய்திநின் ஆர்வலர் முகத்தே' (புறம். 12)

இங்கு 'விறன் மாண் குடுமி! இன்னா வாகப் பிறர்மண் கொண்டு, பாணர் தாமரை மலையவும் புலவர் பூநுதல் யானையொடு புனைதேர் புனையவும், இனிய செய்திநின் ஆர்வலர் முகத்தே' அறனோ மற்றிது விறன்மாண் குடுமி' என்பதே கொண்டு கூட்டு. அதாவது 3இ , ஈ, 4, 1,2,5 3அ,ஆ (அரபிக் எண் அடி எண்ணையும், தமிழ் எழுத்து சீர் எண்ணையும் குறிக்கும்). அதாவது இடை, முதல், கடை, இடை என்பது போல் அடிமறி மாற்று அமைந்துள்ளது

சாறுதலைக் கொண்டென பெண்ணீற்று உற்றென
பட்ட மாரி ஞான்று ஞாயிற்று
கட்டில் நிணக்கும் இழிசினன் கையது
போழ்தூரண்டு ஊசியின் விரைந்தன்று மாதோ
ஊர்கொள வந்த பொருநனொடு
ஆர்புனை தெரியல் நெடுந்தகைப் போரே (புறம். 82)

பாட்டின் திரள் பொருள் ஒரு வீரன் போராற்றலைக் குறிப்பாக விரைவாகப் போரிடுவதை ஓர் உவமை மூலம் விளக்குவதே. பாட்டில் உவமை முதல் 4 அடிகள், கடைசி 2 அடிகளே வீரன் போராற்றல். எனவே 5,6,1,2,3,4 என்ற முறையில் அடி மாற்றம் நடைபெறுகிறது. கடை,முதல் என்ற முறையில் பொருள்கோள் அமைந்துள்ளது

உண்மையில் அப்படி அமைவதற்கு எதிர்பார்ப்பு, திடுக்கிட வைத்தல் போன்ற கருத்தாடல் உத்திகள் காரணம் ஆகலாம். ஆனாலும் அந்த உத்திகளை அறிந்துகொள்ளத் தொடரியல் ஆய்வு உதவுகிறது.

'மழைக்கணம் சேக்கும் மாமலைக்கிழவன்
வழைப்பூங் கண்ணி வாள்வாய் அண்டிரன்
குன்றம் பாடின கொல்லோ
களிறு மிக உடையஇக் களிறுபெறு நாடே' (புறம். 131)

4, 1,2,3 முதல் அடியாகக் கொண்டு கூட்டிப் பொருள் கொள்ளப்படுகிறது.

நீகண் டனையோ கண்டார்கேட் டனையோ
ஒன்று தெளிய நசையினம் மொழிமோ
வெண்கோட்டு யானை சோணை படியும்
பொன்மலி பாடலி பெறீஅயர்
யார்வாய் கேட்டனை காதலர் வரவே (குறுந். 75)

1,2,5,3,4 (கடைசி அடி 3வது அடியாக மாற்றிப் பொருள் கொள்ளப்படுகிறது).

மருந்தெனின் மருந்தே வைப்புஎனின் வைப்பே
அரும்பிய சுணங்கின் அம்பகட்டு இளமுலை
பெருந்தோள் நுணுகிய நுசுப்பிற்
கல்கெழு கானவர் நல்குறு மகளே (குறுந். 71)

முதல் அடி கடைசி அடியாகப் பொருள் கொள்ளப்படுகிறது. (2,3,4,1)

உரையாசிரியர்கள் காட்டிய எடுத்துக்காட்டு போல ஒரு பாட்டுக்குள் எல்லா அடிகளும் முறை மாற்றிக் கொள்வது இலக்கியத்தில் காணப்படாத ஒன்று. எனவே பாட்டின் ஒரு அடி முழுவதும் மொழி மாற்றிக் கொள்வதே இலக்கியத்தில் காணப்படுவதால் அடி முழுவதும் அதுவும் ஓர் அடியோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட அடிகளோ முழுமையும் மொழி மாற்றிப் பொருள் கொள்வதே என்று கொள்ளலாம்.

தொல்காப்பியர் அடுத்த சூத்திரத்தில் அடிமறியில் 'ஈற்றடி இறுசீர் எருத்துவயின் திரியும்' என்று கூடுதலான ஒரு கருத்தைக் கூறியுள்ளார். அதற்கு இளம்பூரணர் 'இறுதிசீர் ஈற்றயல் சீராகவும் அமையலாம்' என்று பொருள் கொண்டு ஒரு பாடலின் கடைசி அடியான 'வாரல் எனினே யான்அஞ் சுவலே' என்பதில் 'அஞ்சுவல் யான்' என்று திரிந்தது என்று விளக்கியுள்ளார். அது ஓர் அடிக்குள்

நடைபெறும் மாற்றம் என்பதால் சேனாவரையர் அவரது கருத்தையும் சான்றையும் ஏற்றுக் கொள்ளவில்லை. 'யான் அஞ்சுவல் என்று நின்றாங்கு நிற்பவும் பொருள் செட்ல்லும் ஆகலின் அவ்வாறு திரிதல் பொருந்தாமையின் அவர்க்கு அது கருத்து அன்று என்க' என்று மறுத்துள்ளார். மேலும் உரையில் 'ஈற்றடியின் இறுதிச் சீர் ஈற்றயலடியில் திரிதல்' என்று பொருள் கொண்டுள்ளதோடு 'எல்லா அடியும் யாண்டும் செல்லுமாயினும் உரைப்போர் குறிப்பான் எருத்து என்றும் ஈற்றடி என்றும் கூறினார்' என்று கூடுதல் விளக்கமும் சேனாவரையர் அளித்துள்ளார். சேனாவரையர் கருத்தை ஏற்றுக்கொண்ட தெய்வச்சிலையார் எடுத்துக்காட்டு வந்த வழிக் கொண்டு கொள்க என்று கூறிவிட்டார்.

விரிதிரைப் பெருங்கடல் வளைஇய உலகமும்
அரிதுபெறு சிறப்பிற் புத்தேள் நாடும்
இரண்டும் தூக்கிற் சீர் சாலாவே எமக்கே
பூப்போல் உண்கட் பொன்போல் மேனி
மாண்வரி அல்குல் குறுமகள்
'தோண்மாறுபடூஉம் வைகலோடு எமக்கே (குறுந். 101)

1,2 , 3அ, 4,5, 6அ, ஆ,இ, 3ஆ, 6ஈ,, 3இ,ஈ 3வது அடியும் என்ற ஈற்று அடியும், 'தோண்மாறுபடூஉம் வைகலோடு தூக்கின் எமக்கு சீர்சாலாவே' என்று பொழிப்புரை. அதாவது எமக்கே என்ற ஈற்றுச் சீர்3வது அடிக்குக் கொண்டு போகப்பட்டுள்ளது. அதாவது ஈற்றுச் சீர் ஈற்றயலடிக்கு மாறாக மூன்றாவது அடிக்கு மாற்றப்பட்டுள்ளது.

இலக்கியங்களில் இன்னொரு நிலையும் காணமுடிகிறது. ஈற்றயல் அடியில் உள்ள சீரும் அதன் பின்னுள்ள அடியும் சேர்ந்து அடிமறியில் பங்கு கொள்கிறது. 6 அடி உடைய குறுந்தொகை 57 வது பாடலில் 4வது அடியின் கடைசி சீரும் 5, 6 வது அ்டிகளும் முன் பகுதியில் கொண்டு போகப்படுகிறது. 1,2,3, 4 அ, 4ஆ, 4இ, 4ஈ, 5, 6 --> 4ஈ, 5, 6, 1,2,3, 4அ,4ஆ, 4இ. அதுபோல 8 அடி உடைய குறுந்தொகை 79 வது 6வது ஈற்றுச் சீரும் 7,8 வது அடிகளும் முன் பகுதியாக முன்னிறுத்தம் செய்யப்பட்டுள்ளது. குறள் (34) 'பிற ஆகுல நீர' என்று ஈற்றுச் சீர், ஈற்றயல் சீராகவே பொருள் கொள்ளப்படுகிறது . அது போன்ற பிற குறள்கள் 65, 72 முதலியன.

ஓர் அடிக்குள் ஈற்று அடியில் சீர் மாற்று (4 அடி பாடல்). 'வம்ப மள்ளர் பலரோ/ எஞ்சுவர் கொல்லோ பகல்தவச் சிறிதே' (புறம். 79. 3,4) 'பகல் தவச் சிறிதே எஞ்சுவர் கொல்லோ' என்றும், 'மன்னிய பெரும நீநிலமிசை யானே' என்பது 'நீநிலமிசை யானே மன்னிய

பெரும' என்று கொள்வது ஒரு முறை. அதைவிட 'பெரும நீநிலமிசை யானே மன்னிய' என்று இரண்டு மொழி மாற்று அமைவதாகக் கொள்வது சிறப்புடையது. ஈற்றடி 2சீர் அதே அடியில் முன்னிறுத்த மாற்று உடைய பாடலகள் 29 அடி கொண்ட புறநானூறு 6, குறுந்தொகை 61, 64 முதலியன.

ஈற்றயல் அடி இறுதி சீர் அதே அடியில் முதல் சீராக முன்னிறுத்த மாற்று. மேலும் கடைசியடி கடைசி 2 சீர் அதே அடியில் முதல் இரண்டு சீராக மொழி மாற்று (4அ டி பாடல்). 'வான்றோய் வற்றே காமம்/ சான்றோர் அல்லர்யாம் மரீஇயோரே' (குறுந் 102) என்பது 'காமம் வான்தோய் அற்றே, யாம் மரீஅயோரே சான்றோர் அல்லர்' என்று அமையும். குறுந்தொகை 65 இல் மூன்றாவது அடியில் கடைசி இரண்டு சீர் அதே அடியில் முதல் இரண்டு சீராகவே பொருள் கொள்ளப்படும். எனவே தொல்காப்பியர் ஈற்றடி என்னும் கட்டுப்பாடு குன்றக் கூறலாய் அமைந்து விடுகிறது.

3.4. மொழி மாற்று

'சொல் நிலை மாற்றிப் பொருள் எதிர் இயைய
முன்னும் பின்னும் கொள்வழிக் கொளாஅல்'
(எச்ச. 12. 2–3)

என்பது தொல்காப்பியரின் மொழி மாற்றுக்கான விளக்கம். தொல்காப்பியர் 'மொழி' என்பதை சொல் என்றதன் பொருள் மேலே விளக்கப்பட்டது.

இங்குச் சேனாவரையர் மொழி மாற்று என்பதன் பொதுத் தன்மையை மனத்தில் கொண்டு 'நிரனிறையும் சுண்ணமும் மொழி மாற்றாதல் ஒக்குமாயினும் நிரனிற்றலும், அளவடி எண்சீரைச் சுண்ணமாகத் துணித்தலும் ஆகிய வேறுபாடு உடைமையான் அவற்றைப் பிரித்து அவ்வேறுபாட்டால் பெயர்கொடுத்து வேறு இலக்கணம் இல்லாத மொழி மாற்றை மொழி மாற்று என்றார்' என்று மொழி புணர் இயல்பு என்ற பொது சூத்திரத்தில் விளக்குவது - அது பொதுக் கருத்தாக அவர் மனத்திலும் தோன்றியதைக் குறிப்பிட்டுவிட்டு மூல ஆசிரியரைக் காப்பாற்றுவதற்காக, அது கலைச்சொல்லாய்க் குறுகிய பொருளில் கையாளப்பட்டுள்ளது என்பதைத் தெளிவுபடுத்துகிறது. ஆனாலும் முன்னும் பின்னும் மாற்றுதல் என்று வரையறுத்துக் கூறுவதால் மொழி மாற்றில் முன்னிறுத்தம், பின்னிறுத்தம் என்ற குறிப்பிட்ட இரண்டு வகை இருப்பது தெளிவுபடுத்தப்பட்டதாகக் கொள்ளலாம். இன்று மொழி என்பதைப் ஒரு வித மொழியியல் ஆய்வையும் அதன்

அடிப்படைக் கோட்பாட்டையும் குறிப்பதாகக் கொள்ளப்படுவது நல்லது. இருந்தாலும் மொழி மாற்று என்ற சொல்லாக்கம் இருபதாம் நூற்றாண்டின் மாற்றிலக்கணத்தின் ஆணி வேர் தொல்காப்பியத்திலேயே இருப்பது தொல்காப்பியரின் நுணமாண் நுழைபுலத்தைப் புலப்படுத்தும். அதே சமயத்தில் இன்னும் பரந்த பொருளில் கலைச்சொல்லாய்ப் பயன்படுத்த வாய்ப்பு இருந்தும், ஒரு வகை மொழி மாற்றை மட்டுமே குறுகிய பொருளில் கலைச்சொல்லாய் தொல்காப்பியர் கையாண்டுள்ளார் என்பது அறியத் தகுந்தது.

பொதுவாக, மொழிபுணர் இயல்பு என்பது முழுப் பனுவலையும் தரவாகக் கொண்டுள்ளது. ஆனால் அண்மைக் கால மொழியியல் இலக்கியத் திறனாய்வால் (அகத்தியலிங்கம், 1998. 1999), சண்முகம் 1998. 2000) ஒரு பாடலையே கருத்தன் அடிப்படையில் பிரித்து அதன் தொடர்க் கட்டமைப்புகளை ஆராயும் போது ஒரு பாட்டுக்குள்ளேயே முரண் பட்ட தொடரமைப்பு காணப்படுவது உணரப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக ‘அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவில் ’ என்ற பாட்டில் (புறம். 112) இரண்டு கருத்தனும் , ஒவ்வொரு கருத்தனிலிலும் இரண்டு வாக்கியங்களும் இருக்கின்றன. ; அவற்றில் முதல் கருத்தன் ஏவே + செபொ1+ எழு1 + செபொ2 + எழு2 + ப2 என்றும் இரண்டாம் கருத்தன் ஏவே + எழு1 + செபொ1 + ப1 + எழு2 + செபொ2 + ப2 என்றும் இருப்பதால், பின்னது மாறுபட்ட தொடரமைப்பு இருப்பதை அறியலாம். அதாவது இரண்டு கருத்தனிலும் ஒற்றுமையும் வேற்றுமையும் இருப்பது அதாவது இரண்டிலும் ஏழாம் வேற்றுமைத் தொடர் முன்னிறுத்தம் பொதுமை, முதல் கருத்தனில் செயப்படுபொருள் முன்னிறுத்தமும் முதல் வாக்கியத்தின் எழுவாய் கெடலும் இருப்பது வேறுபாடு. எனவே அந்த வேறுபாட்டுக்குக் காரணம் என்ன என்னும் சிந்தனையை எழுப்பி அது ஓர் உளவியல் உணர்த்துவதாகவும் உணரப்படுள்ளது (சண்முகம் 2012: 89 தொ,). அந்த முறையில் பல பாடல்கள் ஆராயப்பட்டுள்ளன. எனவே முழுப் பாடலையும் ஆராய்வதை விட கருத்தன்களாகப் பிரித்துப் பின் ஆய்வு செய்வது நடையியல் ஆய்வுக்கும் உறுதுணையாக இருக்கும் என்பது குறிப்பிடத்தகுந்தது.

அடிக் குறிப்புகள்

1. ‘Many of the insights into the structure of language obtained by the classical grammarians were valuable and revealing but demand reformulation in more general and more empirical terms’ John Lyons, 1968 : 18)

பிரயோகவிவேகத் தொடரியல் கோட்பாடும் தொல்காப்பியமும்

முனைவர் த. அஜி
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி
திருநெல்வேலி

தமிழிலக்கண மரபில் தொடரானது இத்தகைய உறுப்புகளைக் கொண்டு இவ்வித ஒழுங்குகளில் அமையும் என்று எந்த ஓர் அதிகாரத்தினுள்ளமும் தொகுத்துக் கூறப்படவில்லை. பல்வேறு அதிகாரங்களில் கூறப்பட்டுள்ள செய்திகளை அடிப்படையாகக் கொண்டே தொடரமைப்பை உணரமுடிகிறது. தொல்காப்பியர் கிளவியாக்கத்தில் கூறியுள்ள ஐம்பதிற்கும் மேற்பட்ட நூற்பாக்கள் தொடரியல் கருத்துக்களை உள்ளடக்கியவை. வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு, எச்சவியல் போன்றவற்றில் மிகுதியாகவும் ஏனைய இயல்களில் சிறுபான்மையும் தொடர் பற்றிய கருத்துகள் இடம்பெற்றுள்ளன.

17ஆம் நூற்றாண்டில் வடமொழிக்கும் தமிழுக்கும் இலக்கணம் ஒன்று என்ற அடிப்படையில் சுப்பிரமணிய தீட்சிதரால் இயற்றப்பட்ட பிரயோகவிவேகம் காரகபடலம், சமாசபடலம், தத்திதபடலம், திங்குப்படலம் என்ற நான்கு இயல்களில் கூறியுள்ள கருத்துக்களில் தொடரியல் பற்றிய செய்திகள் உள்ளன.

தொடர் அமைப்பு

தமிழில் வாக்கியம் ஒன்றிற்கு அடிப்படையாக அமைவன எழுவாயும் பயனிலையுமே ஆகும். எழுவாயாக அமையும் பெயர்ச்சொல்லுக்கும் பயனிலையாக அமையும் சொல்லுக்குமிடையே ஓர் இயைபைக் காணமுடியும். எழுவாய் கருத்தாகவும் (Topic) பயனிலை என்பது கருத்து விளக்கமாகவும் (Comment) அமைவதாக மொழியியலார் குறிப்பிடுகின்றனர். தமிழில் சில வேளைகளில் எழுவாய் இன்றி தொடர் அமைவதும் உண்டு (வந்தான் - அவன் வந்தான்). சொற்கள் தொடர்ந்து வரும் அமைப்பைத் தொடரியல் என்பர். "சொற்கள் ஒன்றோடொன்று தொடர்ந்து பொருள் மேலாகு

நிலைமையைக் கிளவியாக்கம்" (தொல்.தெய்.12) என்றார் தெய்வச் சிலையார். "வழுக் களைந்து சொற்களை ஆக்கிக்கொண்டமையான் இவ்வோத்து கிளவியாக்கமாயிற்று" எனவும் சொற்கள் பொருள்கள் மேல் ஆமாறு உணர்த்தினமையால் கிளவியாக்கமாயிற்று எனினும் அமையும் (தொல்.சேனா.1) எனவும் சேனாவரையர் கூறியுள்ளார். மேலும், தொடரை இருமொழித்தொடர், பன்மொழித் தொடர் என இருவகைப்படுத்தி, தொடர்மொழியாவது அவாய்நிலையானும் தகுதியானும் அண்மை நிலையானும் இயைந்து பொருள் விளக்கும் தனிமொழி ஈட்டம் என்றும் கூறியுள்ளார். இதனையே தீட்சிதர்,

"தகுதி அவாய்நிலை அண்மைநிலை முறையே
யோக்கியதை ஆகாங்கிசை ஆசத்தி
சந்நிதி மற்றும் ஆசத்தி ஆகும்" (பி.உ.சூ.43)

என்று வாக்கியங்கள் தகுதி முதலிய மூன்றும் தோன்ற வரும் எனக் கூறியுள்ளார். மேலும் வாக்கியம் ஆவது தேவதத்தன் அறத்தைச் செய்தான் என வரும் காத்திருகாரகம் முதலாகிய தொகாநிலைத் தொடர்மொழிகள் (பி.வி.உ.19) என்று விளக்கம் கூறியுள்ளதைப் பார்க்கும்போது இவர் தொகைநிலையைத் தொடராகக் கொள்ளவில்லை என்பது புலனாகிறது.

பிரயோகவிவேகம் அண்மைநிலையுடன் தூரான்வயச்சொல் (சேய்மையில் பொருள் கொள்வது), மரூஉத்தொகை, கட்டியசொல், சார்ந்த சொல் என்னும் நான்கும் வரும் எனக்கூறி விளக்கியுள்ளது. தூரான்வயம் என்பது பொருள்கோள் ஒன்பதினுள் ஆற்றொழுக்கும் அடிமறிமாற்றம் அல்லாத எழுவகைப் பொருள்கோள் இலக்கணம் பெற்ற செய்யுள் ஆகும் என்று கூறியுள்ளதால் ஆற்றொழுக்கு, சுண்ண மொழிமாற்று, அடிமொழிமாற்று, நிரல்நிறை, விற்பூட்டு, தாப்பிசை, அளைமறிபாப்பு, கொண்டுகூட்டு, அடிமறிமாற்று என்னும் ஒன்பதுவகைப் பொருள்கோள் என்னும் கருத்துடையவர் தீட்சிதர் எனக் கொள்ளலாம். தொல்காப்பியர் எச்சவியலுள்,

"நிரல்நிறை அண்ணம் அடிமறி மொழிமாற்று
அவைநான் கென்ப மொழிபுணர் இயல்பே"
(தொல். சொல். 404)

என்று நான்கு வகைகளைக் கூறியுள்ளார். நன்னூலார் (411) எட்டு வகைகளைக் கூறியுள்ளார். பொருள்கோள் அனைத்தும் வாக்கியங்களின் பொருள் உறவைக் காட்டுபவை ஆகும்.

மரூஉத்தொகையில் பின்மாலை, அரைக்காசு என்னும் சான்றுகளைக் கூறியுள்ளார். நன்னூலார் இவற்றை இலக்கணப்போலி என்றார். கட்டியசொல் என்பது பொய்யுரை

(எ.கா.) முயற்கோடு, கூர்மரோமகம்பலம் (ஆமைமயிர்க் கம்பளி). சார்ந்த சொல் என்பது இடைப்பிறவரல் சூத்திரத்து உதாரணங்களாம்.

(எ.கா.) அறத்தை அழகுபெறச் செய்தான்

இத்தொடரில் வரும் அழகுபெற என்பது தீட்சிதர் கூறும் இடைப்பிறவரலாம். இடைப்பிறவரலுள் வினையடை, பெயரடை களையே கூறியுள்ளார். சேனாவரையர் போன்ற உரையாசிரியர் கூறியுள்ள கருத்துக்களை உள்வாங்கி வாக்கியம் நான்கு வகைகளில் அமையும் என விளக்கியுள்ளது தொல்காப்பியர் கூறாததாகும்.

காரகம் (வேற்றுமை)

தொல்காப்பியம் வேற்றுமையை வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு என்னும் மூன்று இயல்களில் விளக்கியுள்ளது. பிரயோகவிவேகம் காரகபடலம் என்ற ஒன்றனுள் அடக்கிக் கூறியுள்ளது. தமிழிலக்கண மரபில் வேற்றுமை உருபுகளைக் கூறுமிடத்து வினை கொண்டு முடியும் தொடர்களாலேயே சான்றுகள் விளக்கப்பட்டுள்ளன. பிரயோகவிவேகம் வடமொழி அடிப்படையில் கூறியிருப்பினும் உருபு ஏற்கும் வினையை மையமாக வைத்து காரகபடலம் என்று பெயரிட்டுக் கூறியுள்ளளது. காரகம் என்பதனை,

'கடன் நிகழ் வேற்றுமைதாம் வினையாள் முற்றல் காரமே"
(பி.வி.16)

என்று வேற்றுமை உருபேற்ற சொற்கள் பெயரால் முடியாது வினைமுற்றால் முடிவது காரகம் என வரைறை கூறியுள்ளது. தொல்காப்பியர் கூறிய தொழில் முதனிலையைக் கூறியவிடத்துக் காரணம் எனினும் காரகம் எனினும் ஒக்கும் (தொல்.சேனா.112) என்று சேனாவரையர் கூறியது போல் தெய்வச்சிலையாரும் காரகம் பற்றிக் கூறியுள்ளார். வேற்றுமையை விளக்க வினை காரணமாய் இருத்தலால் தொழில் முதனிலையை வேற்றுமை மயங்கியலில் தொல்காப்பியர் கூறியுள்ளார். ஆறாம் வேற்றுமை வினை பெற்று முடியாதது. ஆகையால் அதனைப் பிரயோகவிவேகம் காரகம் எனக் குறிப்பிடவில்லை. ஏனையவற்றைக் கருத்தா, கருமம், கரணம், கொள்வோன், அவதி, இடம் என்று ஆறாக வகைப்படுத்திக் கூறியுள்ளது. இவையனைத்தும் எழுவாய் + பயனிலை என்னும் அமைப்பிலேயே வருகின்றன.

எழுவாய் வேற்றுமை ஏற்கும் பயனிலைகளாக பொருண்மை சுட்டல், வியங்கொள வருதல், வினைநிலை உரைத்தல், வினாவிற்கேற்றல், பண்புகொள வருதல், பெயர்கொள வருதல் என்று தொல்காப்பியம் கூறியது போலவே பிரயோகவிவேகம்

திங்குப் படலத்தினுள் (கா.36) வினைமுற்று பற்றிக் கூறியுள்ள விடத்து எழுவாய் என்ற கர்த்தரிப்பிரயோகம் வினையாலணையும் பெயரையும் விகுதி பெற்ற பெயரையும் வினாப்பெயரையும் சுட்டுப்பெயரையும் பொருண்மை சுட்டும் வினையையும் கொண்டு முடியும் என்று ஐந்து நிலைகளைக் கூறியுள்ளது.

கருத்தாக் காரகத்தை வடமொழியடிப்படையில்,

1. *கரும கருத்தா - திண்ணை மெழுகிற்று*
2. *சுதந்திர கருத்தா - தேவதத்தன் சோற்றை அட்டான்*
3. *ஏது கருத்தா - ஆசாரியன் மணாக்கனை அறிவித்தான்*
4. *அநபிகிதகருத்தா- தச்சனால் எடுக்கப்பட்டது மாடம்*

என்று வகைப்படுத்தி சான்று கூறியுள்ளது. இச்சான்றுகள் அனைத்தும் தொல்காப்பியம் கூறியுள்ளவற்றிலிருந்து மாறுபட்டு பிற வேற்றுமை உருபுகளோடு வந்துள்ளன. எனவேதான் பிரயோகவிவேகம், ***"தேற்றுந் தமிழுக்கு எழுவாய் விபத்தி திரிபுஇல் பெயர்"*** (பி.வி.8) என்று தெளிவுபடுத்தியுள்ளார்.

திண்ணை மெழுகிற்று என்பது தொல்காப்பியர் கூறிய ***'செயப்படு பொருளைச் செய்ததுபோல'*** (சொல். 246) என்ற நூற்பாவிற்குச் சேனாவரையர் கொடுத்துள்ள சான்று ஆகும். திண்ணை மெழுகிற்று - திண்ணை மெழுகப்பட்டது என்று செயப்பாட்டு வினை வாக்கியமாய் பொருள் தருகிறது. தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும் என்பதில் தெளிவு, ஐயறவு என்பன தொழிற்பெயர்கள். இவை தொடரில் எழுவாயாக வருவதால் இவற்றைப் பாவ கருத்தா என்கிறது.

'ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப' என்னும் தொடர் கிழவன் கிழத்தியையும் கிழத்தி கிழவனையும் காண்பர் என்னும் பொருள்படவருவதால் இது தடுமாறுதல் கருத்தா என்று கூறியுள்ளது.

கருமக்காரகத்தினுள் எழுவாய் + செயப்படுபொருள் + பயனிலை என்ற அமைப்பில் தொடர் கூறப்பட்டுள்ளது. (எ.கா) பாற்சோறு உண்கின்ற சிறுவன் அதன்கண் வீழ்ந்த தூளியைத் தின்றான்.

பிரயோகவிவேகம் அகநிலைச் செயப்படுபொருள் (அந்தர்ப்பாவித கருமம்) பற்றிக் கூறியுள்ளவிடத்து, வந்தான் - வருதலைச் செய்தான் என்று தொடர் அமைத்துப் பொருள் கொள்கிறார்.

ஆறாம் வேற்றுமையில் காரகம் அமையாது என்று கூறியவர் வடமொழியடிப்படையில் கிரியாசட்டி என்னும் காரகம் குகரம்

பெற்று வரும் என்று கூறி, அவர்க்குச் செய்யத்தரும் அக்காரியம் - (பி.வி.17) என்பதனைச் சான்று காட்டியுள்ளார். இது அவரால் செய்யத்தகும் அக்காரியம் என்ற மூன்றாம் வேற்றுமை நான்காம் வேற்றுமைப் பொருளில் வந்துள்ளது என்று தொல்காப்பியத்தில் சேனாவரையரால் (சேனா.110) சுட்டப்பட்டுள்ளதோடு முரணாக அமைந்துள்ளது.

வேற்றுமை மயக்கம்

வேற்றுமைத் தொடரில் ஓருருபு நின்று மயங்கலும் ஈருருபு வந்து மயங்கலும் பலஉருபு மறைந்து வருதலும் என உருபுமயக்கம் நான்கு நிலைகளில் அமைவதைத் தொல்காப்பியர் வேற்றுமை மயங்கியலில் விளக்கியுள்ளார். பிரயோகவிவேகம் காரக படலத்தினுள் 14, 15-ஆம் காரிகைகளில் கூறியுள்ளது.

திண்ணை மெழுகிற்று என்பதைக் கருத்தாக் காரகத்திற்கும், கருத்தாக்காரக மயக்கத்திற்கும் கூறியுள்ளது. கோளிக்காரக மயக்கத்திற்குக் கூறியுள்ள அவளைக்காட்டு , அவளுக்குக் காட்டு என்ற தொடரில் ஐ - உருபு வரும்போது அவளையே காட்டு, அவளுக்கு ஏதோ ஒன்றைக் காட்டு என்னும் இருபொருள் தோன்றும் விதத்தில் பொருள்கொள்ள முடிகிறது.

கிளை அரி நாணல் கிழங்கு மணற்கு ஈன்ற > மணற்கண் ஈன்ற

இத்தொடரில் அமைந்துள்ள 4-ஆம் வேற்றுமை உருபு ஏழாம் வேற்றுமைப் பொருளில் வருவது. இதனைச் சேனாவரையரும் கூறியுள்ளார். தடுமாறு தொழிற்பெயருக்குக் கூறியுள்ள சான்று இரண்டிலும் ஒத்துக் காணப்படுகிறது.

(எ.கா) புலிகொல் யானை

புலியைக் கொன்ற யானை - யானை → எழுவாய்

புலி → செயப்படுபொருள்

புலியால் கொல்லப்பட்ட யானை - புலி → எழுவாய்

யானை → செயப்படுபொருள்

இத்தகைய பொருள்மாற்றத்தைத் தருவது தொடரில் அமையும் வேற்றுமை உருபுகளாம்.

சமாசம் (தொகை)

தொல்காப்பியம் தொகை இலக்கணத்தை எச்சவியலுள் கூற, பிரயோகவிவேகம் தனியாக ஒரு படலம் அமைத்துக் கூறியுள்ளது. தமிழில் உள்ள வினைத்தொகையும் உவமைத்தொகையும் வடமொழியில் இல்லை. 'வடமொழியில் உள்ள' அவ்வியயீபாவ

ச்மாசம் (இடைச்சொல் தொகை) தமிழில் இல்லை. தமிழ் நூலார் இதனை இடைச்சொல் தொகாநிலைத்தொடருள் கொள்வர். தமிழில் உள்ள உவமைத்தொகையைப் பண்புத் தொகையினுள் வடநூலார் அடக்கியுள்ளனர்.

முதல், நான்கு, ஐந்து, ஆறு, ஏழு ஆகிய வேற்றுமைத் தொகையில் பெ + பெ என்ற அமைப்பும் (நுனிநா, மனைப்பலி, மருவூர் மேற்றிசை, கொற்றந்தை, எண்ணெய்) இரண்டாம், மூன்றாம் வேற்றுமைத் தொகையில் பெ + வி (நிலங்கடந்தான், நாய்க்கோட்பட்டான்) என்ற அமைப்பும் காணப்படுகின்றன. தொல்காப்பியம் இடையியலுள் கூறியுள்ள உம்மை இடைச்சொல்லை வடமொழியடிப்படையில் சமுச்சயம் (எச்சம்), அன்வாசயம் (எதிர்மறை) எனப் பெயரிட்டு நம்பியும் வந்தான். நம்பி உழுதும் வருவான் எனச் சான்று கூறியுள்ளது. நம்பியும் வந்தான் என்னும் தொடர் பிறரும் வந்தனர் என்னும் எச்சப் பொருளையும் நம்பி உழுதும் வருவான் என்பது வராமலும் இருப்பான் என்னும் எதிர்மறைப் பொருளையும் காட்டுகின்றது.

பண்புத்தொகை பெ + பெ என்னும் அமைப்பில் (பெரு வெள்ளை, சுகதுக்கம்) காணப்படுகின்றது. பண்புத்தொகையைப் பிரயோகவிவேகம் வடமொழி அடிப்படையில் முன்மொழிப்பண்பு, இருமொழிப் பண்பு, பின்மொழி ஒப்பு, முன்மொழி ஒப்பு, முன்மொழி எண்ணம், முன்மொழித்தேற்றம், முன்மொழி விசேடியம் என்று ஏழுவகைகளாக வகைப்படுத்தி அத்தொடர்களில் பொருள் சிறக்கும் தன்மையை விளக்கியுள்ளது.

(எ.கா)

கருங்குவளை	பண்பு முன்மொழியில்
பெருவெள்ளை	இரு மொழியிலும்
அடிமலர்	பின்மொழியில் ஒப்புப்பொருள்
முத்து வெள்ளை	முன்மொழியில் ஒப்பு
கல்விப் பொருள்	முன்மொழியில் கருத்து, முன்மொழியில் துணிவு.

கருதினால் கருத்து என்றும் தெளிந்தால் தேற்றம் என்றும் பொருள் கொள்ளலாம் என விளக்கியுள்ளது.

தெய்வப்புலவன் திருவள்ளுவன் - முன்மொழி சிறப்பு

இது தொல்காப்பியம் கூறும்,

"சிறப்பின் ஆகிய பெயர்நிலைக் கிளவிக்கும்
இயற்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்" (தொல்.சொல்.410)

என்பதை ஒத்துள்ளது.

பிரயோகவிவேகம் தமிழிலக்கியங்களில் வரும் தொடர்களில் ஒரு பொருளுக்கு இருசொல் வரும் நிலையைக் கூறியுள்ளது (பி.வி.22).

(எ.கா) உவகை மகிழ்ச்சியில் சோர்வு (கு.531)

ஆடகச் செம்பொற் கிண்ணம் (சீவக. 512)

இவற்றைத் தொல்காப்பியரும் 'ஒரு பொருள் இருசொல் பிரிவில வரையார்" (சொல். 460) எனக் கூறியுள்ளார்.

தத்திதன்

தத்திதன் என்பது பெயர் ஆக்க விகுதி. தத்திதன் சேர்ந்து வரும் சொல் தத்திதாந்தம். அதாவது முன்சொல் தன்னைச் சேரும் தொடர்மொழி எல்லாம் ஒழித்துப் போய்ச்சேரும் விகுதிகளையுடைய சொல்லே தத்திநாந்தச் சொல் (பி.வி.29) எனப் பிரயோகவிவேகம் விளக்கியுள்ளது. வடமொழியில் தொடரியல் கோட்பாட்டிற்கு முக்கியமாகக் கருதப்படும் இதனைத் தமிழுக்கும் பொருத்திக்காட்டியுள்ளது.

(எ.கா) வலையான் முயன்று உண்பவன் - வலையன். இதில் "ஆன் முயன்று உண்ணும்" என்னும் தொடர்மொழி கெட்டு வலை + அன் எனச் சேர்ந்து வலையன் ஆகிறது. இதுபோலவே சாமானிய தத்திதன் (பொதுப்பெயரை அடுத்துவரும் பெயர்விகுதி - கள்ளன்), அவ்வியய தத்திதன் (விகுதி பெற்று வரும் இடைச்சொற்கள் (ஆற்கொண்டான்), பாவதத்திதன் (பண்பு, தொழிலை அடுத்து வரும் பெயர் விகுதி நெடுமை, வெளுப்பு) என மூன்றாக வகைப்படுத்தி அவற்றிற்கான சான்றுகளைத் தொடரியல் அடிப்படையில் விளக்கியுள்ளது. சேனாவரையரும் எச்.463-ஆம் சூத்திரத்தில் அருவாள நிலத்தான் அருவாளன், சோழ நிலத்தான் சோழியன் என விளக்கியுள்ளார்.

தமிழிலக்கண மரபில் இவை வாக்கியத்தின் பயனிலையாக வரும்போது குறிப்பு வினைமுற்றாகவும் தனிப்பெயர்களாக வரும்போது குறிப்பு வினையாலணையும் பெயர்களாகவும் கொள்ளப்படும்.

திங்கு (வினை)

தொல்காப்பியம் வினையியலில் வினை பற்றிய கருத்துக்களைக் கூற பிரயோகவிவேகம் திங்குப்படலம் என வடமொழிப்பெயரால் இயலமைத்துக் கூறுகிறது. வினையெச்சமானது தெரிநிலை முற்று,

குறிப்புமுற்று, தொழிற்பெயர், வினையாலணையும் பெயர் ஆகியவற்றைக் கொண்டு முடியும் என்று வினையெச்சத்தொடர் பற்றிக் கூறியுள்ளது. (பி.வி.37).

பிறவினை பற்றிக் கூறும்போது, தேற்றா ஒழுக்கம் என்னும் தொடர் தேறா ஒழுக்கம் எனவும் நட்பாடல் தேற்றாதவர் என்ற தொடர் நட்பாடல் தேறாதவர் எனவும் தன்வினைப் பொருளில் வந்த பிறவினை என்று கூறியுள்ளது.

சில வினையெச்சங்கள் தொடரடிப்படையில் வரும்போது ஒரு பொருளில் வந்தவை மற்றோர் வினையெச்சப்பொருளில் (செய > செய்து, செய்து > செய) வருவது பற்றியும் சினைவினை நின்று சினையோடு முடியாது முதலோடு முடிவதைப் பற்றியும் வினைமுதல் கொண்டும் பிறவினை கொண்டும் வருதலைப் பற்றியும் வினையெச்சங்கள் அடுக்கி வருவதைப் பற்றியும் தொல்காப்பியம் (சொல். 230, 231, 232, 233) கூறியுள்ள கருத்துக்களைத் தொகுத்து பிரயோகவிவேகம் 39-ஆம் காரிகையில் ஏழுவகை இலக்கணங்களைக் கூறுகிறது.

1. துணைவினை ஓர்காலத்து எய்தல் - கண்மூடிச் சிரித்தான் - மூடுதலும் சிரித்தலும் ஒரே நேரத்தில்
2. நேர்ந்த நிலை மறுத்தல் - உண்ணாது வந்தான், உண்டு வாரான். இதில் எச்சமும் முற்றும் எதிர்மறுத்து வந்தன.
3. அடுக்கி வருதல் (எச்சம், முற்று) 1. ஒன்று பல அடுக்கல்
   2. வேறு பல அடுக்கல்

   அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் - (நாலடி. 213)

   கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஐம்புலனும் (கு.1101)

   சென்றது சென்றது வாழ்நாள் - (நாலடி. 4)
4. முக்காலமும் காட்டி வருதல் - நேற்று உண்டு வந்தான்

   இஃதோ உண்டு வருகிறான்

   நாளை உண்டு வருவான்

   இது தொல்காப்பியர் கூறிய,

   "செய்தென் எச்சத்து இறந்த காலம்
   எய்திடன் உடைத்தே வாராக் காலம்" (தொல்.சொல்.234)

என்பதை ஒத்துள்ளது.

5. முன் பின்னாக வருதல் - கொழுநற் றொழுதெழுவாள் - எழுந்து தொழுவாள்

6. வினைமுதல் கொண்டு முடிதல் - உண்டு வந்தான் சாத்தன் (ஒரு வினை முதல்)

7. கோழி கூவிப் போது புலர்ந்தது - கோழி கூவ பொழுதும் புலர்ந்தது (பிறவினை முதல்)

8. முற்றாய் சிறத்தல் - மோயினள் உயிர்த்த காலை - மோந்து உயிர்த்த காலை

இவற்றுடன் செய என்னும் எச்சம் முற்றாய் வருதலையும் கூறியுள்ளார்.

- அவிழ்ந்தன தோன்றி அலர்ந்தன காயர் - தோன்றி அவிழ காயா அலர

மேலும் முற்று பெயரெச்சமாய் வருதலையும் பெயரெச்சம் வினை யெச்சமாய் வருதலையும் கூறியுள்ளார்.

- தேரான் பிறன்இல் புகழ் - தேராத - (பெ.எ)
- 'ஒருமகள் நோக்கினாரை உயிரொடும் போகொடாத திருமகள்' - போகொடாள் ஆகி (வி.எ) (சீவக.2186)
- 'கனவினும் காண்கொடா கண்ணும் கலந்த நனவினும் முன்நீங்கும் நாணும்' - (புறத்திரட்டு. 1524) - கண்ணும் காண்கொடாள் (முற்று)

நிகழ்காலப் பெயரெச்சம் எதிர்மறையில் அடுக்கி வருதல் - இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன் - (கு. 448)

தொழிற் பெயர்கள் செய்யும் என்னும் பெயரெச்சப் பொருளில் வருதல்

பொருள் செயல்வகை - செய்யும் வகை

தோன்றலாறே - தோன்றும் நெறி

செய்யும் என்னும் பெயரெச்சம் வினையாலணையும் பெயரில் வருதல்

பெண்ஏவல் செய்தொழுகும் ஆண்மை - ஒழுகுவான் ஆண்மை

இவற்றுடன் வினையாலணையும் பெயர் ஒன்பது வகையான இலக்கணம் பெற்று வரும் என்றும் கூறியுள்ளார்.

1. கருத்தா ஆதல் - தார்தாங்கிச் செல்வது தானை

2. கருமம் ஆதல் - உடுப்பதூஉம் உண்பதூஉம் (செ.பொ)

3. பாவம் ஆதல் - உறங்குவது போலும் - உறங்குதல் என்னும் தொழிற்பெயரில்

4. கரணம் - வேல் அன்று வென்றி தருவது - தருவது கருவிப்பொருளில்

5. அதிகரணம் - ஆற்ற விளைவது நாடு - விளைவது இடப்பொருளில்

6. இகரம் பெற்று முடிதல் - மண்ணுணி - மண்ணை உண்பது ஊருணி - ஊராரால் உண்ணப்படுவது

7. சுப் - ஏறி நீங்கல் - நெறிநின்றார் நீடு வாழ்வார் (வடமொழி மரபு) புணர்ந்து கெட்டது.

8. உருபுபெறல் - ஒறுத்தாரை - ஐ உருபு

9. ஈற்றயல் திரிதல் - பெண்மை நயவாதவன் - நயவாதான் என வராமல் திரிந்தது.

ஆகுபெயர் வருவது பற்றி வேற்றுமை மயங்கியலில் தொல்காப்பியர் சினை, முதல், இடம், பண்பு, ஆக்கிய பொருள், ஆக்கிய வினைமுதல் என்பனவற்றுடன் இருபெயரொட்டையும் சேர்த்துக் கூறியுள்ளார் (தொல். சொல். 115). பிரயோகவிவேகம் இதனை இலக்கணை என்று கூறி விட்டஇலக்கணை, விடாத இலக்கணை, விட்டும் விடாத இலக்கணை என மூவகையாக விளக்கியுள்ளது.

(எ.கா) i.*'வைகல் பூங்கழிவாய் வந்து மேயும் குருகினங்காள்*
.......கைகள் கூப்பிச் சொல்லீர்' (திவ். பிர. 322)

கைகள் கூப்பிச் சொல்லீர் என்பது தன் பொருளை உணர்த்தாது குருகோடு அந்வயமாய் வந்தததால் இது விட்ட இலக்கணை.

ii. *புளித்தின்றான் – புளியினது பழத்தைத் தின்றான்*

இத்தொடரில் வரும் புளி என்னும் சொல் முதற் பொருளை விடுத்து பழம் என்பதை உணர்த்தியதால் இது விடாத இலக்கணை. இது தொல்காப்பியர் கூறியுள்ள முதலிற் கூறும் சினையறி கிளவியை ஒத்துள்ளது.

iii. *வீதி உளங்கிழித்து உருவச் சென்றான் (சீவக. 2138)*
தீத்தும்மு வேலான் (சீவக. 2557)

உளங்கிழித்து என்பது வீதியின் நடுப்பகுதியை விரைவாகக் கடந்து என்ற பொருளையும், தீத்தும்மு என்பது தீயைச் சிதறவிட்ட வேல் என்று வேறு பொருள் தந்ததால் இது விட்டும் விடாத இலக்கணையாம். இவை தொல்காப்பியர் கூறியுள்ள "தத்தம் பொருளோடு தம்முள் சிவணலும் ஒப்பில் வழியாற் ரிது பொருள் சிவணலும்" (தொல். சொல். 115) என்ற கருத்தை ஒத்துள்ளன. மேலும் தீட்சிதர் உரையினுள் பிற்காலக் கவிஞர்களின் தொடர்களில் இவை போன்று இலக்கணை காணப்படுகின்றன என்பதையும் சுட்டியுள்ளார்.

(எ.கா)

'முல்லை எனும்
மென்மாலை தோள் அசைய மெல்ல நடந்ததே
புன்மாலை அந்திப் பொழுது' (நளவெண்பா. 84)

அந்திப்பொழுது தோள் அசைய மெல்ல நடந்தது

'வால்வளை வாய்விட்டு ஆர்ப்ப" - வளைகள் வாய்விட்டு ஒலித்தன.

'கண்களே சொல்லும் வாய்திறந்தே"

- கண்கள் வாய்திறந்து சொல்லின.

முடிவுரை

தொல்காப்பியமும் பிரயோகவிவேகமும் இன்றைய மொழியியலாளர்கள் கூறுவதுபோல் தொடரின் அகநிலை வடிவம், புதைநிலைவடிவம் என்றெல்லாம் பாகுபடுத்தித் தொடரியல் கோட்பாடுகளைக் கூறவில்லை. ஆனால் சொல்லிலக்கணத்தில் கூறப்பட்டுள்ளவற்றில் பெரும்பாலானவை தொடர் அமைப்பில் வரும் சொற்களைப் பற்றியதே. எனவே, இவ்விரண்டும் ஒவ்வோரியலிலும் கூறியுள்ள கருத்துக்களைத் திரட்டி அதனடிப்படையில் தொடரியல் கோட்பாடுகள் கூறப்பட்டுள்ளன.

வாக்கியம் அமையும் விதம் பற்றி உரையாசிரியர்கள் கூறியிருக்க பிரயோகவிவேகம் தொகைப்படலத்தினுள் வடமொழி அடிப்படையில் விளக்கியிருப்பது பிற்கால மொழியியல் அறிஞர்களுக்கு ஒரு முன்னோடியாக அமைந்துள்ளது எனலாம். பிரயோகவிவேகம் செய்து என்னும் வினையெச்சத்திற்கும் பெயரெச்சத்திற்கும் வினையாலணையும் பெயருக்கும் கூறியுள்ள விரிவான விளக்கங்கள் தொல்காப்பியத்தை மறு ஆய்வு செய்து விரிவுபடுத்தியாக உள்ளன. வேற்றுமை முதல் வினை ஈறாகக்

பிரயோகவிவேகம் செய்து என்னும் வினையெச்சத்திற்கும் பெயரெச்சத்திற்கும் வினையாலணையும் பெயருக்கும் கூறியுள்ள விரிவான விளக்கங்கள் தொல்காப்பியத்தை மறு ஆய்வு செய்து விரிவுபடுத்தியாக உள்ளன. வேற்றுமை முதல் வினை ஈறாகக் காணப்படும் செய்திகள் பெரும்பாலும் தொடரில் அமையும் பொருள் நிலையைக் காட்டுவனவாக உள்ளன.

துணை நூல்கள்

1. தொல்காப்பியத்தமிழ் - கா.கோ. வேங்கடராமன், கனிமொழி பதிப்பகம், நாமக்கல், 1999.
2. தொல்காப்பியத் தொடரியல் - செ.வை. சண்முகம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2008.
3. தமிழ்மொழி இலக்கண இயல்புகள் - அ.சண்முகதாஸ், நியூசெஞ்சரி புக் ஹவுஸ், சென்னை, 2008.
4. தமிழ் வடமொழி இலக்கணஉறவு - த.அஜி, திருக்குறள் பதிப்பகம், சென்னை, 2008.
5. மொழியியல் - ரா.சீனிவாசன், அணியகம், சென்னை, 1972.
6. தமிழ்மொழி வரலாறு - சு.சக்திவேல், மணிவாசகர் பதிப்பகம், 2000.
7. இக்காலத் தமிழ் மரபு - கு.பரமசிவம், அன்னம், சிவகங்கை, 1983.
8. பிரயோகவிவேகம் - தி.வே.கோபாலையர், சரஸ்வதி மஹால், தஞ்சை, 1973.
9. தொல்காப்பியம் - கழக வெளியீடு, சென்னை, 1997.
10. தொடரியல் மாற்றிலக்கண அணுகுமுறைகள் - கி.அரங்கன், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1985.

வீரசோழிய வேற்றுமைத் தொடரும் தொல்காப்பியமும்

முனைவர் அ.ஹெப்ஸி ரோஸ் மேரி
உதவிப் பேராசிரியர்
கேரளப்பல்கலைக்கழகம்
காரியவட்டம், திருவனந்தபுரம்

ஒரு வாக்கியத்தில் எழுத்துகள் தனித்தும் தொடர்ந்தும் நின்று பொருள் விளக்கம் தருவது தொடரியல் ஆகும். இது வெவ்வேறு சொற்கள் எவ்வாறு இணைந்து துணைத்தொடர்களாகவும் (clauses) அவை இணைந்து எவ்வாறு சொற்றொடர்கள் (Sentences) ஆகவும் உருவாகின்றன என்பதனை விளக்குகின்றது. இக்கட்டுரை வீரசோழியம் கூறும் வேற்றுமைப் படலத்திலும் பயின்று வரும் தொடரியல் கருத்துகளைத் தொல்காப்பியத் தொடரியலோடு ஒப்பிட்டு ஆய்வு செய்கிறது.

தொடர் விளக்கம்

எழுத்தினது இலக்கணத்தைச் சொல்லின் துணைகொண்டு அறியமுடிவது போல சொல்லினது இலக்கணத்தைத் தொடர் அல்லது வாக்கியத்தின் துணைகொண்டே அறிய முடியும். எடுத்துக் காட்டாக 'படி' என்ற சொல் ஏணிப்படி, அளக்கின்றபடி, என்ற பல பொருள்களில் வருகின்றது. அது என்ன பொருளில் வருகின்றது என்பதைத் தெளிவாக அறிவதற்கு, அதனை அடுத்து வரும் வினைச்சொற்களின் உதவி தேவைப்படுகிறது.

படி ஏறினான்
படி அளந்தான்

இவை ஒவ்வொன்றும் தொடராகும். இவ்வாறு படி என்ற ஒரு பெயர்ச்சொல்லின் இருவேறு பொருள்களைத் தொடர் நிலையில்தான் அறிந்துகொள்ள முடிகிறது. சேனாவரையர் கிளவியாக்கம் முதல் நூற்பா உரையில் சொல் இரண்டு வகைப்படும் தனிமொழி, தொடர்மொழி என. அவற்றுள் தொடர்மொழியாவது அவாய் நிலையானும், தகுதியானும், அன்மை நிலையானும் இயைந்து வருவது என்று குறிப்பிடுகிறார். அதாவது ஒருசெல் தன் பொருளை விளக்குவதற்கு மற்றொரு

பொருளை அவாவி நிற்றல் (ஆ கிடந்தது), ஒரு சொல் மற்றொரு சொல்லோடு தழுவத் தகுதியுடையத்தல் (நீரால் நனை) என்று சொற்றொடரின் அமைப்பை விளக்குகிறார்.

மரபிலக்கணங்கள் காட்டும் தொடரியல்

தொல்காப்பியம், மொழியமைப்பு இலக்கணத்தை எழுத்து, சொல் என்ற இரண்டு அதிகாரங்களில் ஒன்பது ஒன்பது இயல்களில் விளக்குகிறது. சொல்லதிகாரமே தொடரியலோடு தொடர்பு உடையது. ஆனாலும் எழுத்ததிகாரத்திலும் தொடரியல் செய்திவருகின்றது என்பதை செ.வை.சண்முகம் தொல்காப்பியத் தொடரியல் என்னும் புத்தகத்தில் விரிவாக விளக்கியுள்ளார். தொல்காப்பியர் சொல்லதிகாரத்தில் பெயர், வினை, இடை, உரி என்னும் நால்வகை சொற்களில் இலக்கணத்தைச் சொல்வதற்கு முன்னரே தொடரியல் பற்றிய இலக்கணங்களைக் கூறுகிறார். அவர் அமைத்த வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், எச்சவியல் ஆகிய நான்கு இயல்களும் தொடரியல் நோக்கு உடையவை. கிளவியாக்கம் சொல்லதிகாரத்தின் முதலாவது இயலாக அமைந்துள்ளது. கிளவி - சொல், ஆக்கம் - சொற்களால் ஆகிய தொடர், தொல்காப்பிய உரையாசிரியர்களுள் ஒருவராகிய தெய்வச்சிலையார்" கிளவியாக்கம் = சொல்லினது தொடர்ச்சி சொற்கள் ஒன்றோடொன்று பொருள் மேலாகும் நிலைமை" என விளக்கம் தருகிறார். (தொல்.தெய். உரை). இக்கால மொழியியல் அறிஞர்களும் கிளவியாக்கம் என்னும் இயலைத் தொடரியல் பற்றிப் பேசும் இயலாகவேக் கருதுகின்றனர். பி. எஸ். சுப்பிரமணிய சாத்திரியார் கிளவியாக்கம் என்னும் இயல் வாக்கியத்தில் அமையும் எழுவாய் பயனிலை ஆகியவற்றின் இயைபைப் பற்றிப் பேசுகிறது என்று கூறுகிறார். ச. அகத்தியலிங்கம் "கிளவியாக்கம் என்னும் இவ்வியலின் கண் எழுவாய் - பயனிலை - பெயரடை - பெயர் போன்றவற்றில் காணப்படும் இயைபு வாக்கியங்களில் காணப்படும் பல்வேறு சொற்களின் முறைவைப்பு இரு வாக்கியங்கள் இணையும் போது ஏற்படும் மாற்றங்கள் போன்ற பல செய்திகள் காணப்படுகின்றன என எடுத்துக்காட்டுகிறார் (திராவிடமொழி. ப 163). எனவே தொல்காப்பியத் தொடரியலில் கிளவியாக்கத்தின் இடம் குறிப்பிடத்தக்கது.

தொல்காப்பியத்திற்குப்பின் ஆயிரம் ஆண்டுகட்குப் பின் வந்த வீரசோழியம் வடநூல் வழி வந்த தமிழாசிரியர் மரபைச் சார்ந்தது இது தொல்காப்பிய நெறியிலிருந்து விலகி வடமொழி மரபுகளைப் பின்பற்றுகிறது. இவ்வாறு அமைத்துக் கொண்ட இடங்கள் பலவும் தொல்காப்பியர் பின்பற்றிய 'தொடரியல் மரபுகளைப்

பின்பற்றாத இடங்களாகவும் விளக்கங்களாகவும் உள்ளன. ஆனால் பெயரியல் போன்றவற்றில் அவர் காட்டும் நுட்பங்கள் குறிப்பிடத்தக்கவை. இதில் வேற்றுமைப் படலம், காரகப்படலம், உபகாரப் படலம் தத்திதப் படலம் ஆகிய இயல்களில் தொடர் பற்றிய செய்திகள் இடம்பெறுவதைக் காணலாம்.

1.0 வேற்றுமைத்தொடர்

வேற்றுமைப் பொருள் பற்றித் தொடரும் தொடர்களை வேற்றுமைத்தொடர் என்றும், ஏனையவற்றை அல்வழித்தொடர் என்றும் கூறுவர். தமிழ்மொழியின் தொடரியலில் இவ்விரு பிரிவுகள் அடிப்படையானவை. ஒரு தொடரில் உள்ள வினைக்கும் பெயருக்கும் உள்ள உறவைக் காட்டுவதாக அமைவது வேற்றுமை ஆகும். ஒரு பெயர்ச்சொல்லோடு வெவ்வேறு வேற்றுமை உருபுகள் சேர்வதால் தொடரின் பொருள் வேறுபடுகின்றது.

எ.டு: *கண்ணாடியைப் பார்த்தான்.*

கண்ணாடியால் பார்த்தான்.

கண்ணாடியில் பார்த்தான்.

இவ்வாக்கியங்களில் ஐ, ஆல், இல், முதலிய வேற்றுமை உருபுகள் தொடர்பொருளை வேறுபடுத்திக் காட்டுவதைக் காணலாம். ஆனால் மருந்தொடு தேன் கலந்தான், மருந்தில் தேன் கலந்தான் என்ற தொடர்களில் ஒடு என்ற மூன்றாம் வேற்றுமையும் இல் என்ற ஏழாம் வேற்றுமையும் ஒரே பொருளைத்தான் தருகின்றன. இவ்வாறு வெவ்வேறு வேற்றுமை உருபுகள் தொடர் பொருளை வெவ்வேறாக மாற்றுகின்ற காரணத்தாலும், தொடரில் வேற்றுமை தன் பொருளை இழந்து ஒரே பொருளில் வரும் காரணத்தாலும் தொடரியலில் வேற்றுமை முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை உணரலாம்.

சேனாவரையர் வேற்றுமைக்கு விளக்கம் கூறும்போது "பொருள்களை வேற்றுமைபடுத்தினமையாற் பெற்ற பெயர் என்னை? வேறுபடுத்தியவாறு எனின்: ஒரு பொருளை ஒருகால் வினைமுதல் ஆக்கியும், ஒருகால் செயப்படுபொருள் ஆக்கியும், ஒருகால் கருவி ஆக்கியும், ஒருகால் ஏற்பது ஆக்கியும் இவ்வாறு வேறுபடுத்துவது என்க." என்றார் தெய்வச்சிலையார் வாசகம் தொடரியல் நோக்கு உடையது. மேலும் 'வினையே வினைக்குறிப்பு அவ்விரு முதலில் தோன்றும்' (சொல்.69) என்று குறிப்பிடுகிறார். 'வினை' என்பது செயல். வினைக்குறிப்பு என்பது அவ்வினையால் குறிக்கப்பட்ட பொருள். அஃதாவது செயப்படுபொருள். முதல் என்பதனை வட நூலாசிரியர் காரகம்

என்பர். அஃதாவது தொழிலை உண்டாக்குவது. அது பல வகைத்து - செய்பவனும், செயலும், செயப்படுபொருளும், கருவியும், கொள்வானும், பயனும், காலமும் இடனும் என' என்று கூறி காரகப் பொருண்மேல் வரும் வேற்றுமை எல்லாம் வினையான் முடியும் என்று கொள்க என வேற்றுமையை வடமொழிக் காரகம் என்ற கருத்தமைவோடு இணைப்பதைக் காணலாம்.

1.1 காரகம் விளக்கம்

தொல்காப்பியர் தொழில் முதனிலையை,

வினையே செய்வது செயப்படு பொருளே
நிலனே காலம் கருவி யென்றா
வின்னதற்கிது பயனாக வென்னும்
அன்ன மரபின் இரண்டொடுந் தொகைஇ
ஆயெட் டென்ப தொழின் முதல் நிலையே (சொ.112)

எனக் கூறியுள்ளார். இதனைச் சேனாவரையர் காரணம் எனினும் காரகம் எனினும் ஒக்கும் என்று கூறியுள்ளார். பிரயோக விவேகம் காரகம் என்பதை,

'கடன் நிகழ் வேற்றுமைதாம் வினாயான் முற்றல் காரகமே
(பி.வி.16)

என வேற்றுமை உருபு ஏற்ற சொற்கள் பெயரால் முடியாது வினைமுற்றால் முடிவது காரகமாம் எனக் காரகத்தினை வரையறை செய்கிறது.

நாமமும் க்ரியயும் தம்மில்
உள்ள யோஜன காரகம் (கேர.பா .75)

என, கேரளபணினீயம் காரகத்தை விளக்குகிறது அதாவது பெயருக்கு வினையோடுள்ள தொடர்பே காரகமாகும். எவை யெல்லாம் சேர்ந்து ஒரு வினையைத் தோன்றச் செய்கின்றனவோ அவையெல்லாம் அவ்வினையின் காரகமாகும். "தந்தையின் ஆணையால் பதினான்கு ஆண்டுகள் ராமன் காட்டில் வதிந்தான்" என்ற எடுத்துக்காட்டில் 'இராமன், ஆணை, ஆண்டு, காடு இவையெல்லாம் இணைந்தே வதிந்தான் என்ற வினை முழுமை அடைகின்றது. இவ்வாறு ஒரு சொல்லின் பொருள் நிறைவுக்குப் பிறசொற்களின் தேவை வருவதனை வடமொழியில் 'ஆகாம்க்ஷ" என்று அழைப்பர். அதனால் ஒரு வினையின் ஆகாம்க்ஷையை நிறைவு செய்வதே காரகம் ஆகும். இதிலிருந்து வேற்றுமை வேறு,

காரகம் வேறு என்பதை உணர முடிகிறது. வேற்றுமை ஏற்றசொல் தனியே நிற்காது. தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ள சான்றுகள் கூட வினை கொண்டு முடிவனவாகவே அமைந்துள்ளன. எனவே காரகம் வேற்றுமையோடு இணைந்த ஒன்று என்பதால்தான் வீரசோழியம் வேற்றுமையையும் காரகத்தையும் இணைத்து கூறுகின்றது.

காரகத்தின் வகைகள்

வீரசோழியம் காரகம் ஆறு வகைப்படும் என்று கூறுகிறது. அவைதாம்.,

> *'கட்டார் கருத்தா முதற்கா ரகம்; அவை கட்டுரைப்பின்
> ஒட்டார் கருத்தா கருமங் கரணமொண் கோளியொடும்
> சிட்டா ரவதியோ டாதாரம் என்றறி தேமொழியே'*
> *(வீ.சோ. 29)*

எனக் குறிப்பிடுகிறது. அடுத்த காரிகையில் இக்காரகம் எவ்வாறு அமையும் என்பதை விளக்குகிறது. அதனைப் பின் வருமாறு அமைக்கலாம்.

கருத்தாக் காரகம்	-	தொழில் செய்பவன்
கருமக்காரகம்	-	செய்யப்பட்ட பொருள்
கரணக்காரகம்	-	தொழில் செய்வதற்குக் கருவி
கோளிக்காரகம்	-	பொருளைக் கொள்பவன்
அவதிக்காரகம்	-	பொருள் நீங்குவது
ஆதாரக் காரகம்	-	தொழில் செய்வதற்குரிய இடம்

1.2 எழுவாய்வேற்றுமை

எழுவாய்வேற்றுமை பெயர் தனித்தோ அல்லது பெயர்த்தொகையாகவோ அமையலாம் எனத் தொல்காப்பியர் கூறுகிறார். (தொல்.சொ.64,65). எழுவாய் வேற்றுமை பெயர் தோன்று நிலையே (தொல்.63) என்ற சூத்திரத்திற்கு உரைஎழுதிய சேனாவரையர் எழுவாய்வேற்றுமை ஏனைய வேற்றுமைகளைப் போல உருபு ஏற்காது என்பதைத் தெளிவாகச் சுட்டுகிறார். உருபு ஏற்காத எழுவாய் ஏனைய வேற்றுமைகளைப் போல எப்படி வேற்றுமையாகும் என்பதற்கு அவர் "செயப்படுபொருள் முதலாயினவற்றின் வேறுபடுத்தும் பொருள் மாத்திரம் உணர்த்தலின் எழுவாய் வேற்றுமையாயிற்று(தொல். சொல்.62 சேனா.) என்கிறார். பெயர் நின்று பயனிலை கொள்ளும்போதே அது வேற்றுமை எனப்படும் என்பது தெய்வச்சிலையார் விளக்கம். இவ்வாறு தொல்காப்பிய உரையாசிரியர்கள் கொள்வது தொடரியல்

சார்ந்தது ஆகும். தொல்காப்பியத்தை அடுத்து வந்த வீரசோழியம் வடமொழியடிப்படையில் எழுவாய் வேற்றுமைக்கு உருபுகள் கூறுகிறது. வீரசோழியம் பெயர்களை எட்டாகப் பகுத்து அவை வேற்றுமை உருபை ஏற்கும் நிலை பற்றி விளக்குகிறது (வீ.சோ. 31). அவ்வெட்டு பெயர் களாவன,

1. ஒருவனைக் கருதின சொல்
2. ஒருத்தியைக் கருதின சொல்
3. பலரைக் கருதின சொல்
4. ஒன்றைக் கருதின சொல்
5. பலவற்றைக் கருதின சொல்
6. ஒருவனைச் சிறப்பித்த சொல்
7. ஒருத்தியைச் சிறப்பித்த சொல்
8. ஒன்றைச் சிறப்பித்த சொல்

என்பனவாம் இப்பெயர்கள் பிரகிருதிகள் (பெயர்) என அழைக்கப்படுவதாகப் பெருந்தேவனார் தம் உரையில் கூறுகிறார். இவை முதல் வேற்றுமை உருபை ஏற்ற பிறகே பொருளை உணர்த்தும். முதல் வேற்றுமை உருபுகளாக வீரசோழியம், சு.அர், ஆர், அர்கள், மார்கள், கள், மார் என்ற ஏழையும் குறிப்பிடுகிறார். (வீ. 30). இவ்வுருபுகள் விளிவேற்றுமை ஒழிந்த ஏனைய ஆறு வேற்றுமைகளின் பின்னும் வரும். மேற்கூறிய எழுவாய் வேற்றுமை உருபுகளுள் 'சு' என்னும் உருபு ஒருவனைக் கருதின சொல்லின் பின்பும் ஒருத்தியைக் கருதின சொல்லின் பின்பும் ஒன்றைக் கருதின சொல்லின் பின்பும் வரும். 'சு, கள்' என்ற இரண்டு உருபுகளும் பலவற்றைக் கருதின சொல்லின் பின்வரும் (வீ. 33). ஆனால் எல்லா இடத்தும் 'சு' என்னும் உருபு அழிந்தே வரும்.

இவ்வாறு பிரகிருதிகளின் பின் 'சு' என்னும் பிரத்தியம் புணர்ந்து கெட்டால் ஒழிய வேற்றுமைப் பொருளைப் பயவாது. அதாவது சாத்தன் ஒருவனைக் கருதின சொல். இது பிரகிருதி நிலையில் (பெயர்) சாத்தன் என்னும் ஆண்பாலைக் குறித்து நிற்கிறதே ஒழிய அப்பெயரைக் கொண்ட ஓர் ஆடவனைக் உணர்த்தவில்லை. இப்பெயர் 'சு' உடன் புணர்ந்து கெட சாத்தன் எனும் ஓர் ஆடவனைக் குறிக்கும்.

இது வடமொழியில் காணப்படும் இலக்கணம் ஆகும். வடமொழியில் பாணினியத்தின் படி ஒவ்வொரு சொல்லும் 'திங்' அல்லது 'சுப்' என்னும் ஈறுடனே முடிய வேண்டும் 'திங்' வினையீராகவும் 'சுப்' எழுவாயீராகவும் அமைகின்றன. முதல்

வேற்றுமையில் பெயர்ச்சொல்லுடனே 'சுப்' என்னும் ஈறு புணர்ந்து அது கெட்டு விடும் எனின் அதைச் சேர்க்க காரணம் எழுவாய்ச் சொல்லுக்கும் வேற்றுமை உருபை ஏற்க இருக்கும் சொல்லிற்கும் இடையே ஒரு வேறுபாட்டினைக் காட்டவே ஆகும் என்று தெ.பொ.மீ கூறுகிறார். *(1974)*. இம்மரபினைப் பின்பற்றியே எல்லா இடத்தும் 'சு' என்னும் பிரத்தியம் அழிந்தே வரும் என்று வீரசோழியம் கூறுகிறது எனலாம். மொழியியலார் இதனை Zeromorph அல்லது Zeromorpheme (Ø) என்று அழைப்பர்.

1.2.1. கருத்தாக் காரகம்

தொல்காப்பியம் எழுவாய் ஏற்கும் பயனிலைகளாகப் பொருண்மை சுட்டல், வியங்கொள வருதல், வினை நிலை உரைத்தல், வினாவிற்கேற்றல், பண்புகொள வருதல், பெயர்கொள வருதல் (தொ. சொல் 66) என்ற ஆறனைக் குறிப்பிடுகிறது. வீரசோழியம் வடமொழியிலக்கண மரபையொட்டி எழுவாய் வேற்றுமையின் பொருளைக் காரகக்கருத்தில் கருத்தாக்காரகம் எனக் குறிப்பிட்டு அதன் வகைகளை விளக்குகிறது. இந்தக்காரகம் காரணக் கருத்தா, தான்தெரி கருத்தா, தான்தெரியாக் கருத்தா, கருமக் கருத்தா, தலைமை கருத்தா என ஐவகைப்படும்.

1.2.2 காரணக் கருத்தா

ஒரு செயல் நிகழ்வதற்கு எழுவாய் காரணமாக இருப்பது காரணகருத்தா.

எ.டு: சாத்தன் கொற்றனை அஞ்சுவித்தான்.

கொற்றன் அரங்கனைப் போக்கினான்.

புத்தன் கண்ணனை உய்வித்தான்.

1.2.3 தான் தெரிகருத்தா

கருத்தாவின் இடம் தெரிந்து நிற்றல் தான்தெரி கருத்தாவாகும். மூன்றாம் வேற்றுமை உருபு விரிந்து எழுவாய் ஆதலை வெளிப்படத் தெரிவித்தல் தான்தெரி கருத்தா என தி. வே. கோபாலையர் உரைவிளக்கம் தருகிறார்.

எ.டு: சாத்தனால் எறியப்பட்டது கல்.

கொற்றனால் கொள்ளப்பட்டது வீடு.

இத்தொடரில் கல்லெறிந்தான், கல்லெறியப்பட்டது என்ற புதை நிலை வாக்கியத்திலிருந்து எழுவாயை வருவித்துக்காட்டுவதையே தான் தெரிகருத்தா என்று கொண்டாரோ என்று எண்ணத் தோன்றுகிறது.

1.2.4. தான் தெரியாக் கருத்தா

எழுவாய் மறைந்திருப்பது தான்தெரியாக் கருத்தாவாகும். எழுவாய் என்பதனைத் தெரிவித்தற்குரிய உருபு இல்லாமையால் செயப்படுபொருளாலும் முடிக்கும் வினையாலும் உணரப்படுவது தான் தெரியாக் கருத்தா.

எ.டு: தேவதத்தன் சோற்றை அடுகின்றான்

1.2.5. கருமக்கருத்தா

செயப்படுபொருளே எழுவாய் நிலையில் அமைவது கருமக் கருத்தாவாகும்.எழுவாயே செயப்படுபொருளாகவும் வருவதைத் தற்சுட்டுச் செயல் (Reflexive action) என்பர்.சாத்தன் தன்னைக் குத்தினான் என்று நச்சினார்க்கினியர் இரண்டாம் வேற்றுமையில் இதனை விளக்குகிறார்.

எ.டு: நன்மை தானே வெளிப்படும் விழுமியோர் பக்கல்

இத்தொடரில் புதைநிலையில் இரண்டுதொடர்கள் இடம் பெறுகிறது.(1) நன்மை விழுமியோரிடத்தில் தானே வெளிப்படும் (2) நன்மையைச் சாத்தன் தாமே வெளிப்படுத்தினான். மேற்கூறிய தொடரில் நன்மை என்ற சொல்லே கருத்தாவாகவும் (எழுவாய்) கருமமாகவும் (செயப்படுபொருள்) செயல்படுவதால் கருமகருத்தா எனக்கொண்டார் போலும்.

1.2.6. தலைமைக் கருத்தா

ஒரு செயல் பிறரால் செய்யப்படாமல் தம்மால் (கருத்தா - பெயரால்) செய்யப்படும் என்று குறிப்பிடும் கருத்தா தலைமைக் கருத்தாவாகும்.

எ.டு: விழுமியோர் நன்மை செய்வர்
முயற்சியில்லாதோர் இகழ்ச்சி அடைவர்

இவர் தன்வினை அடிப்படையிலேயே இதனை விளக்குகிறார். விழுமியோர் நன்மை செய்விப்பர் என அமைந்தால் அது தலைமை கருத்தா ஆகாது.

தொல்காப்பியர் எழுவாய் வேற்றுமைக்குக் கூறும் தொடர் அமைப்பில் ஒரு எழுவாயும், பயனிலையும் பயின்று வருகிறது. ஆனால் வீரசோழியம் கூறியுள்ள தொடர்களில் பெரும்பாலும் எழுவாயுடன் பிற உருபுகளும் செயப்படுபொருள் வேற்றுமையும் பயின்று வருகின்றன. வீரசோழியம் வடமொழியமைப்பில் காரகத்தை விளக்குவதால் இத்தகைய வேறுபாடு தோன்றின.

1.3 செயப்படுபொருள் வேற்றுமை/கருமக்காரகம்

இதனை இரண்டாம் வேற்றுமை என்பர். வாக்கியத்தில் ஒரு பெயர்ச்சொல் செயப்படுபொருளாகத் தொழிற்படுவதை இவ்வேற்றுமை குறிக்கின்றது. தொல்காப்பியர்,

இரண்டா குவதே
ஐ எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
எவ்வழி வரினும் வினையே வினைக்குறிப்பு
அவ்விரு முதலின் தோன்று மதுவே (தொல்.சொ.71)

இரண்டாவது வேற்றுமைக்கு உரிய உருபு ஐ என்றும் அது (தெரிநிலை) வினை, குறிப்புவினை ஆகியவைகளின் முதலாகத் தோன்றும் என்று கூறி அப்படிப்பட்ட வினைகளை அடுத்த சூத்திரத்தில் பட்டியலிட்டுள்ளார். இங்கு குறிப்பிடப்படும் வினை என்பது செயல். வினைக் குறிப்பு என்பது அவ்வினையினாற் குறிக்கப்பட்ட பொருள். அதாவது செயப்படுபொருள் என்பது தெய்வச்சிலையார் கருத்து.

வினை கொண்டு முடியும் இரண்டாம் வேற்றுமையை வீரசோழியம் கருமக்காரகம் என்று குறிப்பிடுகிறது. தொல்காப்பியம் இரண்டாம் வேற்றுமைக்கு 28 பொருள் நிலைகளைக் கூறும்போது சேனாவரையர் இதனை மூன்றனுள் அடக்குவர். அவை (1) இயற்றப்படுதல் (2) வேறுபடுக்கப்படுதல் (3) எய்தப்படுதல் என்பனவாம். வீரசோழியம் கருமக் காரகத்தை ஏழாக வகைப்படுத்தியுள்ளது. அவையாவன பற்றுக் கருமம், வீட்டுக் கருமம், இருபுறக் கருமம், தான்தெரி கருமம், தான்தெரியாக் கருமம், கருத்தாக் கருமம், தீபக் கருமம்.

1.3.1 பற்றுக் கருமம்

செயப்படு பொருளிடத்து பற்றுக் கொள்ளுதல் பற்றுக்கருமம்.

எ.டு: பொன்னை ஆசைப்பட்டார்

1.3.2 வீட்டுக்கருமம்

செயப்படுபொருளை இகழ்ந்து விலக்குவது வீட்டுக்கரும்ம்

எ.டு: ஒழுக்கத்தை இகழ்வர் தீயோர்

1.3.3 இருபுறக் கருமம்

செயப்படுபொருளைப் பற்றுதலோ, நீக்குதலோ இன்றி செய்வது இருபுறக் கருமம்

எ.டு: மாச்சோறு உண்கின்ற சிறுக்கன் அதன் கண் வீழ்ந்த தூளியினைத் தின்றான்.

இங்கு கருமமாய் (2.வே) நின்ற தூளி தின்ற சிறுவனால் வேண்டப்படாமையால் பற்றுக்கருமமன்று. இதனை 'அறியாமையின் தின்னலாகாது என்னும் கருத்து அவனிடம உண்டு. ஆகையால் வீட்டுக்கருமமுமன்று ஆதலால் பற்றுக் கருமமும் வீட்டுக் கருமமுமன்றி இருபுறக் கருமம் என்று குறிப்பிடுகிறார்.

1.3.4 தான்தெரி கருமம்

இரண்டாம் வேற்றுமையைக் குறிக்கும் உருபு வெளிப்படையாக வருவது தான் தெரிகருமம்.

எ.டு: வீட்டை எடுத்தான் தச்சன்

கருமமாய் நின்ற வீடு தானே கருமம் என்னும் இடம்தெரிந்து நிற்றலால் இது தான் தெரிகருமமாயிற்று.

1.3.5 தான் தெரியாக் கருமம்

இரண்டாம் வேற்றுமையுருபு மறைந்திருக்க எழுவாயாலும் அவ்வாக்கியம் கொண்டுமுடியும் வினையாலும் இது இரண்டாம் வேற்றுமை என்று உய்த்துணரும் நிலையில் இருப்பது தான் தெரியாக் கருமமாகும்.

எ.டு: வீடு தச்சன் கட்டினான்

இங்கு கருமமாய் நின்ற வீடு கருமம் என்னும் இடம்தானே தெரியாமையாலும் (2 வே.தொ) தச்சன் என்னும் காரக பதத்தானும், கட்டினான் என்னும் கிரியாபதத்தாலும் கருமமென்று அறியப்படுதலால் இது தான் தெரியாக் கருமமாகும்.

1.3.6 கருத்தாக் கருமம்

செயப்படுபொருளே தான் கொண்டு முடியும் வினையைச் செய்யும் நிலையில் இருப்பது கருத்தாக் கருமம்.

எ.டு: வீடு தச்சன் கட்டினான் கொற்றன் தானே கருமமாய் போதற்கிரியையைச் செய்வானுமாய் நிற்பதால் இது கருத்தாக் கருமமாயிற்று.

1.3.7 தீபகக் கருமம்

இரண்டாம் வேற்றுமை உருபினை ஏற்ற இரண்டு சொற்கள் அடுத்தடுத்து நின்று ஒரே வினையைக் கொண்டு முடிவது தீபகக் கருமம் ஆகும்..

எ.டு: பசுவினைப் பாலைக் கறந்தான்

கருமமாய் நின்ற பசுவே பாலினைக் கறந்தான் என்று மற்றுமொரு கருமமாதலின் தீபகக் கருமமாம்.

மேற்கூறிய தொடரில் புதை நிலையில் இரண்டு தொடர்கள் மறைந்துள்ளன. (1) பசுவினைக் கறந்தான் (2) பாலைக் கறந்தான். இவ்விரண்டு தொடரின் பொருளையும் ஒரே தொடரில் வெளிப்படுத்தவே இவ்வாறு அமைத்துள்ளார் எனலாம்.

இவ்வாறு மரபிலக்கணங்கள் கூறும் பொருள் நிலைகள் வினையின் பொருள்களே அன்றி வேற்றுமையின் பொருள் அல்ல எனத் தற்கால அறிஞர்கள் கூறுவர். இப்படிப்பார்த்தால், தலையைச் சொறிந்தான், கன்னத்தைக் கிள்ளினான் போன்ற வாக்கியங்களில் இரண்டாம் வேற்றுமயின் பொருளைச் சொறிதல் பொருள், கிள்ளல் பொருள் என்றெல்லாம் விவரிக்க வேண்டியிருக்கும் என கு.பரமசிவம் 'இக்காலத் தமிழ் மரபு' என்னும் நூலில் கிண்டலாகக் கூறுகின்றார். 'இரண்டாம் வேற்றுமையின் பொருளை இவ்வாறு நீட்டிச் செல்வதைவிடச் ஒரு பெயர்ச்சொல் வாக்கியத்தில் செயப்படுபொருளாகத் தொழிற்படுவதே இரண்டாம் வேற்றுமை எனச் சுருக்கமாகக் கூறலாம்' (2013:92)என்ற எம்.ஏ நுஃமானின் கருத்து இங்கு ஒத்து நோக்கத்தக்கது.

1.4. கருவிவேற்றுமை /கரணக்காரகம்

இதனை மூன்றாம் வேற்றுமை என இலக்கண நூல்கள் சுட்டுகின்றன. இவ்வேற்றுமை'ஒடு' என்னும் உருபினாலும் 'ஆல்' என்னும் உருபினாலும் உணர்த்தப்படுகின்றது. ஒரு வாக்கியத்தில் அல்லது தொடரில் ஒரு பெயர்ச்சொல் வினை நிகழ்வதற்குரிய கருவியாகச் செயல்படுவதை இவ்வேற்றுமை உணர்த்தும்.

மூன்றாம் வேற்றுமை பத்து பொருள்களில் வருவதாகத் தொல்காப்பியம் சுட்டுகின்றது. வீரசோழியம் 'ஒடு, ஓடு, ஆல்' என்பனவற்றை மூன்றாம் வேற்றுமை உருபாகக் கூறி அது கருத்தா, கரணம் என்னும் இரண்டு பொருளில் வரும் எனக் கூறுகிறது. தற்கால இலக்கணிகள் இதனை இரண்டாகப் பிரித்து 'ஆல்' உருபை கருவிப்பொருள் வேற்றுமை என்றும் 'ஒடு' உருபை உடன் நிகழ்ச்சி வேற்றுமை என்றும் இரண்டாகப் பிரித்துக் கூறுவர்,

எ.டு: தச்சனால் எடுக்கப்பட்டது வீடு.
அகத்தியனால் தமிழ் உரைக்கப்பட்டது.

மூன்றாம் வேற்றுமை உருபு வினை கொண்டு முடிவது கரணக் காரகமாகும்.

1.4.1 புறக்கரணம்

தன்னின் வேறாக எளிமையில் பிரித்துக் கொள்ளப்படும் கருவி புறக்கரணமாகும்

எ.டு: கோடாலியால் மரத்தை வெட்டினான்.

இங்கு மரத்தை வெட்டுவதற்குக் காரணமாய் நின்ற கோடாலி கருத்தாவாய் நின்ற கொற்றனுக்கு அவையவம் அன்று ஆதலால் புறக்கரணமாகும்

1.4.2 அகக்கரணம்

தன் உறுப்புக்களால் அமைந்த கருவி அகக்கரணம் ஆகும்

எ.டு: கண்ணினாற் கண்டான்.

காண்பதற்குக் காரணமாய் நின்ற கண் கருத்தாவிற்கு உறுப்பாதலால் அகக் கரணமாகும்

1.4.3 கொடைப்பொருள் வேற்றுமை/கோளிக்காரகம்

நான்காம் வேற்றுமை உருபு 'கு' ஆகும்.தொல்காப்பியர் இவ்வேற்றுமை 'எப்பொருளாயினும் கொள்ளும்' (தொ.சொ.75) என்று கூறுகின்றார். கொடைப் பொருள் இவ்வேற்றுமையின் பிரதான பொருளாதலால் இது கொடைவேற்றுமை எனப்படுகிறது.

எ-டு: கரும்பிற்கு வேலி -அதற்கு வினையுடைமை
கடி சூத்திரத்திற்குப் பொன் - அதுவாகு கிளவி

நான்காம் வேற்றுமை உருபு கொள்பவன் என்ற பொருளில் வருவதால் கோளிக்காரகம் என்பர். இது ஆர்வக்கோளி, கிடப்புக்கோளி, இரப்புக்கோளி என மூவகைப்படும்.

1.4.4 ஆர்வக்கோளி

கொடுப்பவனும் கொள்பவனும் விருப்பத்தோடு செயல்படுவது ஆர்வக் கோளி

எ.டு: *அருந்தவர்க்கு ஊண் கொடுத்தான்*

இதில் அருந்தவர் ஆர்வத்தோடு கொண்டமையானும், கருத்தா ஆர்வத்தோடு கொடுத்தமையானும் ஆர்வக்கோளியாம்

1.4.5 கிடப்புக் கோளி

கொள்பவன் விருப்பத்தைத் தெரிவியாவிடினும் கொடுப்பவன் தன் இயல்பான தன்மையால் கொடுப்பது கிடப்புக் கோளி.

எ.டு: *தேவர்க்குப் பூ இட்டான்.*

இங்கு தேவர் தமக்குப் பூ வேண்டும் என்று இரந்திலமையானும் இல்வாழ்வானுக்கு இயல்பு ஆதலானும் கிடப்புக் கோளியாயிற்று.

1.4.6 இரப்புக்கோளி

பிறர் தன்னை வேண்டி இரந்தபின் தான் கொடுப்பது இரப்புக் கோளி.

எ.டு: *இரவலர்க்குப் பிச்சையிட்டான்.*

வீரசோழியர் கொடைப் பொருளைச் செலுத்தும் முறையை அடிப்படையாகக் கொண்டு நான்காம் வேற்றுமையின் பொருள்களைப் பிரித்துள்ளார்.

1.5. நீங்கல் வேற்றுமை/அவதிக்காரகம்

இதனை ஐந்தாம் வேற்றுமை என்றும் அழைப்பர்.தொல்காப்பியர் ஐந்தாம் வேற்றுமை உருபு 'இன்' எனவும் அது இதனின் இற்று இது (தொ.சொ.77) என்ற பொருளில் அமையும் எனவும் கூறுகின்றார். ஐந்தாம் வேற்றுமை உருபு தொல்காப்பியர் காலத்தில் மிகுதியும் பொருவுப் பொருளிலேயே வந்தது. ஆனால் பிற்காலத்தில் இது நீங்கல் பொருளுக்கே சிறப்புடையதாக அமைந்துள்ளது. வீரசோழியம் 'நின்று' என்னும் உருபை நீங்கல்' பொருளில் வரும் ஐந்தாம் வேற்றுமை உருபாகக் கொள்கிறது. இது ஏழாம் வேற்றுமையின் பின்னரே வரும் என்பதையும் குறிப்பிடுகிறது. வீரசோழிய உரையாசிரியர் 'இன்' என்னும் உருபையும் இணைத்தே கூறுகிறார். தொல்காப்பியர் ஐந்தாம் வேற்றுமை 28 பொருள் நிலைகளில் வரும் என்று குறிப்பிடுகிறார்.

எ.டு: *காக்கையிற் கரிது களம்பழம் - வண்ணம்*

இதனின் வட்டமிது - வடிவு

வினைகொண்டு முடியும் ஐந்தாம் வேற்றுமை அவதிக்காரகம் எனப்படும். இது அசலம், சலம் என இருவகைப்படும்.

1.5.1 அசலம்

அசலம் என்பது இயக்கம் இல்லாதது.

எ.டு: *ஊரினின்று போனான் தேவதத்தன்*

மலையினின்று இழிந்தார் முனிவர்

இங்கு ஊரும், மலையும் இயக்கம் இல்லாததால் அசலம் என்னும் அவதிக்காரகமாயிற்று.

1.5.2 சலம்

சலம் என்பது இயக்கமுடையது

எ.டு: *குதிரையினின்று விழுந்தான் சாத்தன்.*
யானையினின்று இறங்கினான் கொற்றன்.

1.6 ஆறாம் வேற்றுமை/ உடைமைப் பொருள் வேற்றுமை

ஆறாம் வேற்றுமை உருபு 'அது' ஆகும். அது தற்கிழமை, பிறிதின் கிழமை என்னும் இரண்டிலும் தோன்றும் எனத் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். வீரசோழியர் 'உடை' என்பதை ஆறாம் வேற்றுமை உருபாகக் கூறுகிறார். இது இரண்டு நிலைகளில் மொழியில் வரும் என்பதுஅவரது கருத்தாகும். *(வீ.சோ.35)*

1. *ஆன், ஆள், ஆர், ஆர்கள், அது, இன என்னும் சொற்கலின் முன் 'உடை' என்னும் ஆறாம் வேற்றுமை உருபு பெற்று உடையாள், உடையார், என எண்வகைப் பெயர்களிலும் வரும்.*

2. *'உடை' என்னும் வேற்றுமையின் பின்பு அகர, ஆகாரமாய் உடைய என்றும் வரும்.எ.டு இவனுடைய மகள், கொற்றனுடைய வீடு.*

ஆறாம் வேற்றுமை வினைகொண்டு முடியாது. ஆகையால் அது காரகம் ஆகாது. இது காரகபதமாகும் போது 'கு' என்னும் உருபை ஏற்று வரும் என்று வீரசோழிய உரையாசிரியர்(35) குறிப்பிடுகிறார். எ.டு. சாத்தருக்கு மகனானான்

1.7. இடப்பொருள் வேற்றுமை/ஆதாரக் காரகம்

தொல்காப்பியர் 'கண்' என்னும் உருபை ஏழாம் வேற்றுமையின் உருபாகக் கொள்கிறார். இது வினை நிகழ்வதற்குரிய இடத்தை ஆதாரமாகக் கொண்டு அமைகிறது. அடுத்த நூற்பாவில் கண் முதலாகிய பத்தொன்பது சொற்களைத்தொகுத்து அவையும் அதன்பால என்று கூறியுள்ளார். உரையாசிரியர்கள் இவற்றை உருபுகளாகக் கொள்ளும்போது சேனாவரையர் இவற்றைச் சொல்லுருபு என்று குறிப்பிடுகிறார்.

வீரசோழியம் கே, உழை, வயின், பக்கல், உழி, இல், கண் என்னும் ஏழையும் உருபுகளாகவே கூறுகிறது.'சார்பிறவும், என்றதனால் இடம், கடை, முன், பின், கீழ், மேல், உள், புறம், வாய் முதலியனவும் வேற்றுமை உருபுகளே என்பது உரையாசிரியர் கருத்து.

எ-டு: மாடத்தின் கண் இருந்தான் - கண்
எயிலகத்து புக்கான் - அகம்

ஏழாம் வேற்றுமை உருபு வினைகொண்டு முடிவது ஆதாரக் காரகம் ஆகும். வீரசோழியம் இதனைச் சேர்வாதாரம், கலப்பாதாரம், புலனாதாரம், அயலாதாரம் என நான்காக வகைப்படுத்தியுள்ளது.

1.7.1 சேர்வாதாரம்

ஒரு பொருள் தற்காலிகமாக இருப்பதற்கு ஆதாரமாக உள்ள இடம் சேர்வாதாரம் ஆகும்.

எ.டு: தடுக்கின் கண் இருந்தான்.

1.7.2 கலப்பாதாரம்

ஒரு ஆதாரத்தின் ஆதேயமாகித் தாங்கப்படும் பொருள் எங்கும் கலந்து இருப்பது கலப்பாதாரமாகும்.

எ.டு: எள்ளில் எண்ணெய் நின்றது.

ஆதாரமான எள்ளின்கண் ஆதேயமான எண்ணெய் எங்கும் கலந்து இருத்தலால் கலப்பாதாரமாகும்.

1.7.3 புலனாதாரம்

இயல்பாக ஓரிடத்தில் எப்பொழுதும் ஒரு பொருள் இருத்தல் புலனாதாரமாகும். வடமொழியில் இதனை 'விடயாதாரம்' என்று அழைப்பர்.

எ.டு: காட்டின் கண் புலி நின்றது.
கடலின் கண் மீன் திரிகின்றது.

2.0 வேற்றுமை மயங்கியல் கூறும் தொடரியல் செய்திகள்

வேற்றுமைகள் தம்முள் மயங்கி வருதல் பற்றித் தொல்காப்பியர் வேற்றுமை மயங்கியல் என்னும் தனி இயல் வகுத்து விளக்கியுள்ளார். சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் (தொல்84,85) வேற்றுமை மயக்கத்தைப் பொருள் மயக்கம், உருபு மயக்கம் என இருவகைப்படுத்துகின்றனர். சேனாவரையர் பொருள் மயக்கத்தைத் 'தன் பொருளில் தீராது பிரிதொன்றன் பொருட்கண் சேறல். உருபு மயக்கமாவது தன் பொருளில் தீர்ந்து சேறல், யாதானுருபிற் கூறிற்றாயினும் பொருள்செல் மருங்கின் வேற்றுமை சாரும் (தொல்.106) என்று கூறியுள்ளார். வீரசோழியம் பொருள் மயக்கத்தை 42, 43 ஆம் காரிகையில் கூறியுள்ளது.

2.1 ஒரு பொருளில் பல உருபுகள் நிற்றல்

அச்சப்பொருளை உணர்த்த ஐந்தாம் வேற்றுமை உருபும் இரண்டாம் வேற்றுமை உருபும் வரும். இலக்கணக்கொத்து மூன்றாம் வேற்றுமை உருபையும் இணைத்துள்ளது. இன்றைய வழக்கில் நான்காம் வேற்றுமை உருபும் பயின்று வருகிறது.

எ.டு:

பழியை அஞ்சுவான்-அச்சத்திற்குப் பழி செயப்படு பொருளாயிற்று.

பழியின் அஞ்சுவான்-அச்சத்திற்குப் பழி ஐந்தன் ஏதுவாயிற்று.

பழியால் அஞ்சும்-அச்சத்திற்குப் பழிகருவியாயிற்று.

சார்புப் பொருள் இரண்டாம் வேற்றுமைப் பொருளாக வேற்றுமையியலில் கூறப்பட்டது அச்சார்புப் பொருள் இரண்டு வகைப்படும் (1) கருமச்சார்பு, 2) கருமமில் சார்பு. கருமச் சார்பாவது ஒன்றை மெய்யுறச் சார்தலாம். தூணைச் சார்ந்தான், சுவரைச் சார்ந்தான். கருமமில்லாச் சார்பு மெய்யுறலின்றிச் சார்தலாம். அரசரைச் சார்ந்தான், கட்சியைச் சார்ந்தான்.கருமமில்லாச் சார்புக்கு விதிக்கப்பட்ட 'ஐ' உருபேயன்றி உரிமையில்லாத ஏழன் உருபாகிய 'கண்' என்னும் உருபும் வரும் என்று தொல்காப்பியர் கூறுகிறார்.

எ.டு: *அரசரைச் சார்ந்தான்.*

அரசர்கண் சார்ந்தான்.

வீரசோழியமும் இத்தகைய மயக்கத்தைக் காரகத்தின் அடிப்படையிலேயே கூறுகிறது.எழுவாய் வேற்றுமைக்குக் காரகமாகக் கூறப்பட்ட தான் தெரிகருத்தா, காரணக்கருத்தா, கருமக்கருத்தா, தலைமைக் கருத்தா ஆகியவை மூன்றாம் வேற்றுமை, ஆறாம் வேற்றுமை இவற்றுடன் மயங்கும்

எ.டு: *சாத்தன் கொற்றனை அஞ்சுவித்தான்.*

சாத்தனால் கொற்றன் அஞ்சுவிக்கப்பட்டான்.

கொற்றனது அச்சம்,

ஒரு தொடரின் புதைநிலை அமைப்பைக் கொண்டே இத்தகைய மயக்கத்தை உணறமுடியும்.

2.2 ஒரு தொடரில் பலவுருபுகள் நிற்றல்

தொகைநிலைத்தொடரிலும் தொகாநிலைத்தொடரிலும் பல உருபுகள் நிற்பதைக் காணலாம்.

2.2.1 தொகாநிலைத்தொடரில் பல வேற்றுமை உருபுகள்

முதல்சினைக் கிளவிக்கு 'அது' என் வேற்றுமை
முதற்கண் வரினே சினைக்கு 'ஐ' வருமெ - தொல் 571
முதன்முன் 'ஐ' வரின் 'கண் என் வேற்றுமை
சினைமுன் வருதல் தெள்ளிதென்ப - தொல் 572

முதல் பொருளில் அது என்ற வேற்றுமை வரும்போது சினையில் ஐ வேற்றுமை வரும். முதல் பொருளில்'ஐ' என்ற வேற்றுமை வரும்போது சினையில் அது என்ற வேற்றுமை வரும்.

எ.டு: யானையது கோட்டைக் குறைத்தான்.
யானையைக் கோட்டின் கண் குறைத்தான்.

இத்தகைய தொடர் அமைப்பு முறை வீரசோழியத்தில் காணப்படவில்லை.

2.2.2 தொகைநிலைத்தொடரில் பல வேற்றுமை உருபுகள்

தொகைநிலைத் தொடர் ஒன்றுக்கு மேற்பட்ட பொருள் தருவதாகவும் வேற்றுமை உருபு கொடுத்து விரிக்கும்போது வெவ்வேறு பொருள் படுவதாகவும் அமைவதைக் காணலாம். தொல்காப்பியர் 'தடுமாறு தொழிற்பெயர்க்கு இரண்டும் மூன்றும், கடி நிலை இலவே பொருள் வயினான,- தொல்(579) என்று குறிப்பிடுகிறார்.

எ.டு: புலி கொன்ற யானை.

இத்தொடர்,

புலியைக் கொன்ற யானை.
புலியால் கொல்லப்பட்ட யானை.

என்னும் இரு பொருள்களைத் தரக் காணலாம். 'புலி கொன்ற யானை' என்ற புற நிலைத் தொடர் ,

யானை புலியைக் கொன்றது.
புலியானையைக் கொன்றது.

என்னும் இருவேரு புதைநிலை வாக்கியத்திலிருந்து உருவானதால் இரு பொருள்களைத் தருகிறது. என்வே தொகையாக நிற்கும் 'புலி கொன்ற யானை' என்னும் தொடர் பொருளில் மயக்கத்தைத் தருகிறது. இவ்வாறு வரும் தொகைநிலைத்தொடர்களை மயங்குபொருள் தொடர்கள் என்று குறிப்பர்.

முடிவுரை

தமிழ்மொழியின் தொடரமைப்பில் 'எழுவாய், செயப்படு பொருள், பயனிலை' என்ற அமைப்பைக் காணலாம். வீரசோழியத்தில் இவ்வமைப்பு மாறுபட்டு வருவதைக் காணலாம். வடமொழியில் உரைநடையிலும் செய்யுளிலும் சொற்களை அனுவயப்படுத்திப் பொருள் கொள்ளுதலே அதாவது கொண்டு கூட்டிப் பொருள் கொள்ளுதலே பெரும்பான்மையான மரபு. வீரசோழியம் கூறும் வேற்றுமை மரபு வடமொழிமரபைப் பின்பற்றியதாகும்.ஒரு தொடரமைப்பிற்கு அதன் சூழல் இன்றியமையாதது என்ற இன்றைய மொழியியல் கொள்கையை அன்றே தொல்காப்பியர் வெளிப்படுத்துகிறார். வீரசோழிந்ததில் இம்முறை காணப்படவில்லை. வேற்றுமைத் தொடர் பயனிலையோடு தொடர்பு கொண்டது. வேற்றுமைக்கும் பயனிலைக்கு இடையேயான பொருண்மை உறவை இரு நூலாசிரியரும் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது. தொல்காப்பியர் தொடரியலுக்கு எனத் தனி இயல் அமைக்காவிடினும் தொடரியல் செய்திகளைத் தமது நூலில் பல இடங்களிலும் கையாண்டு பலத் தொடரியல் சிந்தனைக்கு வழிவகுத்தவர் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

துணை நூல்கள்

1. அறவேந்தன், இரா., - தமிழ் சிங்கள இலக்கண உறவு, திருவரசு வெளியீடு, விழுப்புரம், 1999.

2. அஜி.த - தமிழ் வடமொழி இலக்கண உறவு, திருக்குறள் பதிப்பகம், சென்னை, 2008.

3. இளம்பூரணர் - தொல்காப்பியம் சொல்லதிகாரம், சைவ சித்தாந்த நூலகம் , சென்னை, 1982.

4. இளயபெருமாள், மா - கேரளபணினீயம் (மொ.பெ), தமிழ்ப் புத்தக நிலையம், சென்னை 1971.

5. கேரள பாணினீயம் (மொ.பெ), த மிழ்த்துறை, கேரளப் பல்கலைகழகம், 1977.

6. கால்டுவெல் - திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணம், முல்லை நிலையம், சென்னை, 2004.

7. கோபாலையர்.தி.வ - வீரசோழியம், நாச்சியார் அச்சகம், திருச்சி, 2005.

8. சண்முகம்.செ.வை - தொல்காப்பியத் தொடரியல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2004.

9. சேனாவரையர் - தொல்காப்பியம் சொல்லதிகாரம், சைவசித்தாந்த நூலகம் , சென்னை, 1982.

10. தெய்வச்சிலையார் - தொல்காப்பியம் சொல்லதிகாரம், சைவசித்தாந்த நூலகம் , சென்னை, 1982.

11. நாச்சுமுத்து, கி - இலக்கண ஆராய்ச்சி கட்டுரைகள், கி.நாமொழிப் பண்பாட்டு மையம், கோவை, 2007.

12. நுஃமான்.எம்,ஏ-அடிப்படைத் தமிழ் இலக்கணம், அடையாளம், திருச்சி, 2013.

13. மருதூர் அரங்கராசன் - தமிழில் வேற்றுமை, மருதூர் அரங்கராசன் பதிப்பகம், நெய்வேலி, 2000.

14. மருதூர் அரங்கராசன் - தமிழில் வேற்றுமை மயக்கம், மருதூர் அரங்கராசன் பதிப்பகம் , நெய்வேலி, 2000.

தொல்காப்பியம், தொன்னூல் விளக்கம் காட்டும் குறைச்சொல்தொடர்

முனைவர் சி. ஏழுமலை
உதவிப் பேராசிரியர்
தமிழ்த்துறை
பெரியார் அரசு கலைக்கல்லூரி,
கடலூர்

தமிழில் காணப்படும் ஒட்டுமொத்தத் தொடர்களை நிறைச்சொல் தொடர் என்றும் குறைச்சொல் தொடர் என்றும் பிரித்தறியலாம். நிறைச்சொல் தொடர் என்பது அறிவிக்கும் பொருளைத் தகுந்த அல்லது நேர்ச்சியான சொற்களால் கூறக் கூடியதாகும். குறைச்சொல் தொடர் என்பது அறிவிக்கும் பொருளுக்குரிய சொல் குறைந்தாலும் அருகருகே இருக்கக்கூடிய உருபன்களை வைத்துப் பொருள் தெளிவுபடுத்தக் கூடியதாகும். உலகில் உள்ள எல்லா மொழிகளிலும் இத்தகைய தொடர் அமைப்பு முறை இருப்பதை இன்றைய மொழியியலார் கண்டு அறிந்துள்ளனர். இதனை இவர்கள் ஏற்புடை வாக்கியம் (Acceptable Sentence) எனக்கூறினர். இத்தகைய குறைச்சொல் தொடரை விளக்க, அண்மை உறுப்பு பகுப்பாய்வு முறையில் உறுப்பு மற்றும் உறுப்பி கொண்டு விளக்க முற்பட்டனர். ஆனால் இம்முறையால் இதுபோன்ற தொடர்களைத் தெளிவாக விளக்க முற்பட முடியவில்லை. அதற்கடுத்து மாற்றிலக்கணம் கொண்டு ஓரளவு விளக்கி வெற்றி கண்டனர். எனினும் முழுமையான அளவில் விளக்கம் காணப்படவில்லை.

இத்தகைய குறைச் சொல் தொடர், தமிழ் மொழியில் எந்த அளவுக்குக் காணப்படுகின்றது என்பதைக் காணும்போது இச் சிந்தனையில் தொல்காப்பியர் நுட்பமாக இயங்கியுள்ளதை அவருடைய பல்வேறு தலைப்புகளால் ஆன குறைச்சொல் தொடர்பான கருத்துகளும் இத் தொடர்களை விளக்குவதற்கான திறப்பான்களும் காட்டுகின்றன. எனவே அவற்றைக் காண்பதும் காலத்தால் பிந்திய நூலான குட்டித் தொல்காப்பியம் என்று அழைக்கக்கூடியதான "தொன்னூல் விளக்கம்" குறைச்சொல் தொடர் பற்றிக் கூறியதைக் காண்பதும் இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

குறைச்சொல் தொடர்

முழுமையான சொற்களால் பொருளை உணர்த்தாமல் குறைவான சொற்களாலும் மயங்கிய பொருள் தரும் சொற்களாலும் கருதிய பொருளை உணர்த்தும் தொடரைக் குறைச்சொல் தொடர் எனக் கூறலாம். இத்தகைய சொல்லைத் தொல்காப்பியரே எச்சவியலில்,

குறைச்சொல் கிளவி குறைக்கும்வழி அறிதல்
குறைந்தன வாயினும் நிறைப்பெயர் இயல (சொல். 447)

எனப் பதிவு செய்கிறார். இந்நூற்பாவிற்கு உரையெழுதுவோர் 'மரை இதழ்' என்னும் எடுத்துக்காட்டைக் காட்டுவர். மரை என்னும் உருபன் இதழ் என்னும் உருபனால் தாமரை என்ற பொருளைப் பெறுகின்றது. எனவே மரை என்பதைக் குறைச் சொல் எனக் காட்டி,இதனை முதல் குறை (மறை), இடைக்குறை (ஓதி - ஓந்தி), கடைக்குறை (நீலமுண்டு - நீலுண்டு)எனப் பிரித்துக் கூறுவர். இவ்வெடுத்துக்காட்டுக்களில் இடைக்குறை மற்றும் கடைக் குறைக்குக் காட்டிவை அசை அமைதிக்காக ஆக்கப்பட்டவையே தவிர இயல்பில் நிகழ்ந்தவை இல்லை எனக் கூறலாம். ஏனெனில் இச்சொற்களை விளக்குவதற்கு அருகருகே இருக்கக்கூடிய உருபன்களின் உதவி தேவையில்லை. உரையாசிரியர் பலரும் கிளவி என்பதைச் சொல் என்னும் தளத்திலே பொருள் கொண்டு இதனைக் குறைச்சொல் சொல் எனக் கூறுகின்றனர். அவ்வாறு கூறுவதை விட இதனைக் குறைச்சொல் தொடர் எனக் கூறுவதே பொருத்தப்பாடு உடையாக இருக்கும்.

பொருள்தரும் பொருண்மையில் உருபன் பல சேர்ந்து பொருள் தரக்கூடிய தொடரில், சில உருபன்கள் மறைந்து நின்றோ அல்லது விரைவு மற்றும் சூழலியல் காரணமாக விடுபட்டோ அல்லது செய்யுள் கட்டமைப்பில் அசை அமைப்பைக் கருதி திட்டமிட்டுக் குறைக்கப்பட்டோ கருதிய பொருளைக் குறைவின்றிக் கொடுக்கக்கூடியனவாகப்பல தொடர்கள் அமைந்து விடுகின்றன - அமைக்கப்பட்டுள்ளன. இத்தகைய தொடர்களைக் குறைச்சொல் தொடர் எனக் கூறலாம். இந்தப் பொருண்மையில் தொல்காப்பியரின் சிந்தனை மிக விரிவாகக் காணப்படுகின்றது. இக்கட்டுரை சொல் குறைந்த குறைச்சொல் தொடர் என்றும் வழுவாக வந்த குறைச்சொல் தொடர் என்றும் குறைச்சொல் தொடரை இருவகையாகப் பகுத்து, சொல் குறைந்து சரியான பொருளைத் தரக்கூடிய குறைச்சொல் தொடரை மட்டும் காணமுற்படுகின்றது.

இயல்பு வழக்குத் தொடர்

எப்பொருட்கு எச்சொல் அமைந்ததோ அப்பொருட்கு அதனை அச்சொல்லால் கூறுவது இயல்பு வழக்காகும். இத்தகைய இயல்பு வழக்கில் ஒன்றாகக் காணப்படுகின்ற மரூஉ என்பது குறைச்சொல் தொடராகும். இதற்குப் பலவகையான எடுத்துக் காட்டுகளை உரையாசிரியர்கள் காட்டுவார்கள். அவற்றில் சோழ நாட்டை சோணாடு என்பதும் அருமருந்து அன்ன பிள்ளை என்பதை அருமந்தப் பிள்ளை என்பதும் குறைச் சொல்லால் ஆனவை எனலாம். இதனைத் தொல்காப்பியர்,

"தகுதியும் வழக்கும் தழீஇயின ஒழுகும்
பகுதிக் கிளவி வரைநிலை இலவே" (சொல்.17)

எனக் கூறுவார். இந்நூற்பாவில் இயல்பு வழக்கு, தகுதி வழக்கு என்பவை குறைந்த சொற்களாலும் இனமான சொற்களாலும் பொருள் காட்டக்கூடியவை என்பதையே பகுதிக் கிளவி என்னும் சொல் குறிக்கின்றது. வீரமாமுனிவர் தாம் எழுதிய "தொன்னூல் விளக்கம்" பொருளதிகாரத்தில்(194) இதே செய்தியையே குறிக்கின்றார்.

இனமுள்ள இனமில்லாப் பொருட்பெயர்த் தொடர்கள்

ஒரு தன்மை கொண்ட ஒரு பொருள் - இனமில்லாப் பொருளாகும். மற்றவை இனமுள்ள பொருளாகும். இனமில்லாத பொருள்களின் முன்னர்ப் பண்பை விளக்குகின்ற அடையாகிய சொல்லை இணைத்துக்கூறின் பொருள் முழுத் தன்மை எய்தும். ஆனால் உலக வழக்கில் பண்பை விளக்குகின்ற சொல்லைப் பயன்படுத்தாமலே குறைச்சொற்களை இயல்பில் பயன்படுத்திப் முழுப்பொருளைப் பெறுகின்றனர். ஞாயிறு கிளம்பிற்று, திங்கள் குளிர்ச்சி தந்தது என்பவை பெயர்களைச் சொன்ன மாத்திரத்தில் பண்பைப் புலப்படுத்தி முழுப்பொருளை அளித்துவிடுகின்றன. எனவேதான் தொல்காப்பியர் உலக வழக்கில் இத்தகைய குறைச்சொல்லைப் பயன்படுத்தலாம் என்கிறார். செய்யுள் வழக்கில் இத்தகைய விதிவிலக்கு இல்லை.

ஆக்கப் பெயர்த் தொடர்கள்

ஆக்கப்பட்ட பொருளுக்குக் காரணமாக இருப்பதைக் குறிக்கும் சொல்லை 'ஆக்கக் கிளவி' என்பர். ஆக்கப் பட்ட பொருளை ஆக்கக் கிளவியோடு சொல்லுதல் மரபாகும். 'கடுக்கலந்த கைபிழி எண்ணெய் பெற்றமையால் மயிர்நல்லவாயின' என்பது போன்ற பல தொடர்கள் காரணம் முத்ற்ற ஆக்கக் கிளவி 'தொடர்களாகும். மயிர்நல்லவாயின

என்றாலே கடுக்கலந்த கைபிழி எண்ணெய் காரணம் என்பது பெறப்படுவதால் அதனைவிடுத்து உலக வழக்கில் பொருள் சிறப்பை மட்டும் கூறும் சொற்களைக் கூறுகின்றனர். இது குறைச்சொல் போலக் காணப்பட்டாலும் குறித்தப் பொருளைத் தெளிவாகக் காட்டிவிடுவதைப் பார்க்க முடிகின்றது. ஆனால் செய்யுள் வழக்கில் இத்தகைய சொல்லைத் தெளிவாகக் கூறவேண்டும் என்கிறார்.

ஒரு பெயர் பொதுச்சொல் தொடர்

ஓர் இடத்தில் தொகுதியாய் அமைந்த பல பொருட்களைத் தனித்தனியே சுட்டிக் கூறத் தேவையில்லை. வினையின் தன்மையால் அப்பொதுச் சொல் ஒரு பெயருக்குரியதாகத் தலைமை பற்றியும், பன்மை பற்றியும் எளிதில் அமைந்துப் பொருள் புலப்பாட்டைச் சரியாகத் தருகின்றது. 'சேரி புக்கார்' என்ற வழி அங்கு வாழ்வோர் பலர் இருப்பினும் தலைமைப் பற்றிப் பார்ப்பனச் சேரி புக்கார் எனவும் ஈச்சங்காடு சென்றார் என்ற வழி பல மரங்கள் இருப்பினும் மிகுதியான ஈச்ச மரங்கள் இருப்பதால் ஈச்சங்காடு சென்றார் எனவும் வழங்கப்படுகின்றன. இவை குறைச்சொல் தொடராக இருப்பினும் பொருள் தருதலில் குழப்பம் ஏற்படுத்தவில்லை என்பதால் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது தொல்காப்பியர் தம் கருத்து. இதனை,

"ஒருபெயர்ப் பொதுச்சொல் உள்பொருள் ஒழியத்
தெரிபுவேறு கிளத்தல் தலைமையும் பன்மையும்
உயர்திணை மருங்கினும் அஃறிணை மருங்கினும்"(சொல். 49)

என்னும் நூற்பாவால் அறியலாம்.

ஒன்றொழிப் பொதுச்சொல் தொடர்

உயர்திணையிலும்; அஃறிணையிலும் பொதுவாக வரும் வினைச் சொற்களும் பெயர்ச்சொற்களும் உள்ளன. அவை ஒரு பெயரினை ஒழித்து ஒரு பெயரினுக்கு உரியவாய் வரக்கூடிய குறைச்சொற்களாக உள்ளன. இதனைத் தொல்காப்பியர்,

"பெயரினும் வினையினும் பிரிபவை யெல்லாம்
மயங்கல் கூடா வழக்குவழிப் பட்டன" (சொல். 50)

எனக் கூறுகின்றார். 'வடுகரசர் ஆயிரவர் மக்களை உடையவர், நம் அரசர் ஆயிரம் ஆனை உடையவர்' ஆகிய தொடர்கள் ஆண் என்னும் சொல்லைக் குறைச்சொல்லாகக் கொண்டு வருகின்றன. இதனை இலக்கணிகள் 'பெண்ணொழிச் சொல் என்பர்.

பெருந்தேவி பொறையுயர்ந்த கட்டிற்கண் நால்வர் மக்கள் உளர், நம்பி நூறு எருமை உடையான் ஆகிய தொடர்கள் பெண் என்னும் சொல்லைக் குறைச்சொல்லாகக் கொண்டு வருகின்றன. இதனை இலக்கணிகள் ஆண்ணொழிச் சொல் என்று கூறுவர். இதே போன்று தொழிற்களை அடிப்படையாகக் கொண்டும் வாக்கியங்கள் வருகின்றன. மேற்கண்ட வாக்கியங்களைப் படிப்போரில் எல்லாமே சரியான புரிதலைப் பெறுவர் எனக் கூறமுடியாது. ஏனெனில் இத்தொடரில் அருகே இருக்கக்கூடிய உருபன் சரியான பொருளைத் தரவில்லை. எனவே, இவ்விடத்தில் பண்பாட்டு மொழியியல் அறிவு அல்லது உரையியல் அறிவு (Hermeneutic Knowledge) தேவைப்படுகின்றது. இத்தகைய அறிவின் துணைக்கொண்டே மேற்கண்ட தொடர்க்கான சரியான பொருளைப் பெறமுடிகின்றது. அதனைத் தொல்காப்பியர் அன்றே வழக்கு வழிப்பட்டன என்ற திறப்பானைக்கொண்டு தொடர் பொருளை விளக்குகின்றார்.

வினை வேறுபடும் பலபொருள் ஒரு சொல் தொடர்

ஒரு வினையைத் தரக்கூடிய குறைப் பெயர்ச்சொற்களால் பொருள் குழப்பம் மொழியில் ஏற்படுவது உண்டு. சான்றாக மா வீழ்ந்தது என்னும் தொடரைக் காண்போம். இது மரம் வீழ்ந்தது என்றும் விலங்கு வீழ்ந்தது என்றும் பொருள் தருகின்றது. எனவே இருபொருளில் எதைக் கொள்வது என்ற குழப்பம் ஏற்படுகின்றது. இவ்வாறு ஒன்றுக்கு மேற்பட்ட பொருளைத் தரக்கூடிய பலசொற்கள் மொழியில் காணப்படுகின்றன. அவை தொடராக அமையும்போது குறைச்சொல் தொடராக அமைகின்றன. மா பூத்தது, மா ஓடியது என்பன முறையே மரம், விலங்கு என்னும் பொருள்களைப் புலப்படுத்தினாலும் சொற்குறை உள்ளனவாக வடிவ அமைப்பில் காணப்படுகின்றன. பல பொருளைத் தரக்கூடிய சொற்களுடன் வினைகள் பல சேரும்போது வினைக்கு ஏற்பத் தொடர்கள் பொருளைப் பெறுகின்றன. இவற்றைக் கண்ட தொல்காப்பியர் மிக நுட்பமாக ஆராய்ந்து வினையைக் கொண்டு வேறுபடும் சொற்கள் வேறுபடா சொற்கள் எனப் பிரிக்கின்றார். இதனை,

> "வினைவேறு படூஉம் பலபொருள் ஒருசொல்
> வேறுபடும் வினையினும் இனத்தினும் சார்பினும்
> தேறத் தோன்றும் பொருள் தெரி நிலையே" (சொல். 51)

என்னும் நூற்பாவால் அறியலாம். மா தளிர்த்தது பூத்தது காய்த்தது என்ற தொடரில் பெயருடன் பலவினைச் சொற்கள்

சேர்ந்து மா என்ற குறைச்சொல்லை மாமரம் என்ற சொல்லாகக் காட்டுகின்றன. 'மாவும் மருதும் ஓங்கின' என்ற தொடரில் மா என்ற பெயருடன் ஒங்குதல் தொழிலுக்கு மருத மரம் இனமாகச் சேர்ந்து மா என்ற குறைச்சொல்லை மாமரம் என்ற சொல்லாகக் காட்டுகின்றது. இவ்வாறே, 'மாவும் மரையும் புலம்படர்ந்தன' என்ற தொடரில் மா என்ற பெயருடன் மரை என்ற விரைவு ஓடுதல் தொழில் சார்த்தி(மான்) மா என்பது குதிரைமா என்ற பொருளைத் தருகின்றது. இவ்வாறு வினைவேறுபடும் பலபொருள் குறைச் சொற்களை வினை, இனம், சார்பு ஆகிய சொல்திறப்பான்களைக் கொண்டு பொருளை அறியக்கூடிய முறையைத் தொல்காப்பியர் காட்டி உள்ளதைப் பார்க்க முடிகின்றது. இதனை வீரமாமுனிவரின் தொன்னூல் விளக்கம்,

> "பல வினைக்கு உரிய பலபொருட்சொல் ஒரு
> நிலைவரின் உரிமை நீத்தசொல் உரித்தே" *(பொருள். 196)*

எனத் தொல்காப்பியக் கருத்தையே காட்டுகின்றது.

ஆகுபெயர் குறைச்சொல் தொடர்

ஒன்றன் இயற்பெயர் அதனொடு தொடர்புடைய மற்றொரு பொருளுக்குத் தொன்று தொட்டுப் பெயராகி வருமானால் அதனை 'ஆகுபெயர்' என்பர். இவ்வாகுபெயரைத் தொல்காப்பியர் ஏழு வகையாகக் கூறுவார். அவை,

1. ஒரு முதற்பொருளின் பெயர் சினைப்பெயருக்கு ஆகி வருதல் - இது முதலாகுபெயர். தெங்கு தின்றான் என்ற தொடரின் நேரடிப்பொருள் தென்னை மரத்தைத் தின்றான் என்பதாகும். எனவே தெங்கு என்பதன் அருகே காய் என்ற சொல் குறைந்துள்ளதைப் பார்க்கமுடிகின்றது. அச்சொல்லைப் போட்டால் 'தேங்காய் தின்றான்' என்னும் சரியான பொருள் கிடைக்கின்றது.

2. ஒரு சினைப்பொருளின் பெயர் முதல்பொருளுக்கு ஆகி வருதல் - இது சினையாகுபெயர். வெற்றிலை நட்டான் என்ற தொடரின் நேரடிப்பொருள் இலையை மட்டும் நட்டான் என்பதாகும். எனவே வெற்றிலை என்பதன் அருகே கொடி என்ற சொல் குறைந்துள்ளதைப் பார்க்க முடிகின்றது. 'வெற்றிலைக் கொடியை நட்டான்' என்பதே சரியான தொடராகும்.

3. ஓர் இடப்பொருளின் பெயர் அங்குப் பிறந்த பொருளுக்கு ஆகி வருதல் - இது இடவாகுபெயர். காஞ்சிபுரம் சிறந்தது என்ற தொடர், காஞ்சிபுரம் எதில் சிறந்தது என்ற வினாவை எழுப்புகின்றது. காஞ்சிபுரம் என்ற சொல்லின் அருகே

பட்டுப்புடவை என்ற சொல்லைப்போட்டால் தொடர் முழுமை யடைகின்றது.

4. ஒரு பண்பின் பெயர் அப்பண்புடைய இன்னொரு பொருளுக்கு ஆகி வருதல் - இது பண்பாகுபெயர். வெள்ளை அடித்தான் என்ற தொடர் வெள்ளை நிறமுடைய சுண்ணாம்பை அடித்தான் என்ற தொடரின் குறைத்தொடராக அமைந்து பொருளைச் சரியாகத் தருகின்றது.

5. ஒன்றற்கு முதற்காரணமாய் அமைந்த பெயர், அதனால் இயன்ற காரியத்திற்கு ஆகி வருதல் - இது காரண ஆகுபெயர். இக்குடம் மண் என்னும் தொடர், மண்ணால் ஆகிய குடம் என்னும் தொடரின் குறைச்சொல் தொடர் ஆகும்.

6. அன்மொழிப் பொருள் மேல் இருபெயரொட்டாய் வருதல் - இது இருபெயரொட்டு அன்மொழி ஆகுபெயர். பொற்றொடி வந்தாள் என்ற தொடர் பொன்னால் ஆகிய தொடியுடைய பெண் வந்தாள் என்ற தொடரின் குறைத்தொடராக அமைகின்றது.

7. செய்தவன் பெயர் அவன் செய்த பொருளுக்கு ஆகி வருதல் - இது கருத்தாவாகு பெயர். திருவள்ளுவரைக் கற்றேன் என்ற தொடர் திருவள்ளுவர் செய்த திருக்குறளைக் கற்றேன் என்ற தொடரின் குறைத்தொடராகும்.

இவ்வாறு ஆகுபெயர்த் தொடர்கள், எழுவகையான குறைச்சொல் தொடர்களாக அமைகின்றன. இத்தொடர்களைப் படிக்கும் படிப்பாளன் (வாசகன்) தமிழ்மொழி அறிவு நன்கு உள்ளவனாக இருப்பின் பொருள் குழப்பம் இன்றி எளிதாகப் பொருளைப் புரிந்து கொள்வான். இல்லையேல் சற்று இடர்ப்பாடு அடைவான். எனவேதான் ஆகுபெயர்க் குறைச்சொல் தொடர்களைப் புரிந்து கொள்வதற்குரிய திறப்பானாகத் தொல்காப்பியர்,

> "தத்தம் பொருள்வயின் தம்மொடு சிவணலும்
> ஒப்பில் வழியான் ரிதுபொருள் சுட்டலும்
> அப்பண் பினவே நுவலும் காலை
> வேற்றுமை மருங்கின் போற்ற வேண்டும்" (சொல். 111)

என்னும் நூற்பாவை முன்வைக்கின்றார். இவ்வெழுவகை ஆகுபெயர்க் குறைச்சொல் தொடர்களைத் தம்மோடு தொடர்புடைய பொருள்களோடு பொருந்துதல் கொண்டும்(புளி தின்றான்) தம்மோடு தொடர்பில்லாத வேறு பொருள்களோடு பொருந்துதல் கொண்டும்(காஞ்சிபுரம் சிறந்தது) எளிதில் பொருள்

பெறலாம் எனக் கூறுகின்றார். அதாவது இன்றைய மொழியியலார் அண்மை உறுப்பு பகுப்பாய்வு முறையில் உறுப்பியைக் கொண்டு மறைந்த சொல்லை மீட்டுருவாக்கம் செய்வர். அதனையே தொல்காப்பியர் எளிதாக மேற்கண்ட நூற்பாவில் விளக்கியுள்ளதைப் பார்க்கமுடிகின்றது. இத்தகைய ஆகுபெயர்க் குறைச்சொல் தொடர்களைத் தொன்னூல் விளக்கமானது,

"ஆகுபெயர் என்பது அவ்அவ முதல், சினை,
கருவி, காரியம், பண்பு இவற்று ஒன்றன் பெயர்
ரிது ஒன்றற்கு உரைக்கும் பெற்றி தானே" (சொல். 49)

என ஐந்தாகக் காண்கிறது. நன்னூல் ஆகுபெயர்க் குறைச் சொற்களைப் பதினைந்தாகக் காண காலத்தால் மிகப் பிந்தியதான 'தொன்னூல் விளக்கம்' ஏன் இவ்வாறு ஐந்தை மட்டும் கூறுகிறது என்பது தனி ஆய்வுப் பொருளுக்குரியது.

தொகைநிலைக் குறைச்சொல் தொடர்கள்

குழைக்காது(குழையை உடைய காது),பொன் மேனி(பொன் போன்ற மேனி), ஆடரங்கு (ஆடிய அரங்கு, ஆடுகின்ற அரங்கு, ஆடும் அரங்கு), கருங்குதிரை (கருமை ஆகிய குதிரை), உவாப் பதினான்கு (உவாவும் பதினான்கும்), வெள்ளாடை வந்தாள் (வெண்மையான ஆடையை உடுத்திய பெண் வந்தாள்) என்பன முறையே வேற்றுமை, உவமை, வினை, பண்பு, உம்மை, அன்மொழி ஆகியவற்றிற்கான தொகைநிலை குறைச் சொல் தொடர்களாகும். இவ்வறுவகை தொகைச்சொற்களை நோக்கினால் ஒவ்வொரு தொடர்களிலும் சொற்கள்(உருபு) குறைந்து பொருளைத் தருவதைக் காணமுடிகின்றது.

'தொன்னூல் விளக்கம்' ஆசிரியர் வீரமாமுனிவர், தொகைநிலைக் குறைச்சொற்களை ஏழு எனப் பின்வருமாறு கூறுகின்றார்.

"தொகைநிலை வகைப்படின் தொகும் வேற்றுமை வினை
உவமை பண்பு உமையோடு அன்மொழி ஆறே" (சொல்.90)

"தொகைநிலை விரித்துச் சொல்லுங்கால் எழு
வகைநிலை அளவும் வகுக்கப்படுமே" (சொல்.91)

மேற்கண்ட நூற்பாக்களில் பண்புத் தொகையை உடைத்து அளவுத் தொகை என்னும் ஒன்றை வீரமாமுனிவர் கொண்டு வருகின்றார்என்பது தெரிகின்றது. மற்றப்படி தொல்காப்பியர் வழியே தொகைநிலைச் சொற்களைக் கூறுகிறார் என்பதைப் பார்க்க முடிகின்றது.

இத்தொகைநிலைக் குறைச்சொற்களைப் பொருள் புரிந்துகொள்ள தொல்காப்பியர் திறப்பானாகப் பின்வரும் நூற்பாவை முன்வைக்கின்றார்.

"முன்மொழி நிலையலும் பின்மொழி நிலையலும்
இருமொழி மேலும் ஒருங்குடன் நிலையலும்
அம்மொழி நிலையா தன்மொழி நிலையலும்
அந்நான் கென்ப பொருள் புணர் நிலையே" (சொல். 413)

இந்நூற்பா தொகைநிலையில் குறைந்து காணப்படும் சொற்களை 1. மொழிக்கு முன்னர் நிற்றல் - வேங்கை பூத்தது. இங்கு வேங்கையின் பொருள் பூ மீது நின்றது, 2. மொழிக்குப் பின்னர் நிற்றல் - கடல். இதன் பொருள் அடை மீது நின்று அடைகரையாகி நின்றது,3. இருமொழி மேலும் பொருள் சிறந்து நிற்றல் - உவாப் பதினான்கு என்பது உவாவும், பதினான்கும் என இரு சொல் மீது ஒருங்கு நின்றது,4. சொல்லுக்குப் புறமொழியில் பொருள் நிற்றல் - வெள்ளாடை. இதன் பொருள் உடுத்தினாள் என்பதன் மீது நின்றது என நால்வகையில் நின்று பொருள் தருவதை விளக்குகின்றார். இத்தகைய பொருள் புரிதலுக்கு மொழி நூல் அறிஞர்கள் மாற்றிலக்கணத்தைப் பொருத்திச் சொற்களை ஒரு முறையில் வரிசைப்படுத்தி மற்றொரு முறையில் பொருளை வரிசைப்படுத்தி இன்னொரு நிலையில் ஒலி அழுத்தத்தைக் கொண்டு மூன்றையும் இணைத்துப் பொருள் காண்பர்.

செய்யுள் விகாரத் தொடர்கள்

செய்யுள்களில் அசை மற்றும் சீரின் கட்டமைப்பு, குறைச்சொல் தொடரை வடிவமைக்கின்றது. இதனைத் தொல்காப்பியர்,

"அந்நாற் சொல்லும் தொடுக்கும் காலை
வலிக்கும்வழி வலித்தலும் மெலிக்கும்வழி மெலித்தலும்
விரிக்கும்வழி விரித்தலும் தொகுக்கும்வழித் தொகுத்தலும்
நாட்டல் வலிய என்பனார் புலவர்" (சொல்.397)

என்னும் நூற்பாவில் விளக்குகின்றார். இதற்குக் காட்டாகக் காட்டும் குறுந்தாட் கோழி, தட்டை, தண்டுறைவன், மழவரை யோட்டிய, பச்சிலை, உண்டார்ந்து ஆகியவை சொல் அளவிலும் தொடர் அளவிலும் குறைந்தவையாகும். இவ்விகாரங்கள் செய்யுட்கே உரியவை என்பதால் மொழி அறிவு நன்கு வாய்த்தவராலே பொருள் கொள்ளப்படும் என்பதால் இதற்கான திறப்பானை முன்வைக்காது விட்டுவிடுகின்றார். தொன்னூல்

விளக்க ஆசிரியர் செய்யுள் விகாரங்களைப் பல இடங்களில் தனித்தனியே சொல்கிறார்.

முடிவுரை

மொழியைக் காப்பாற்றும் வேலையைச் செய்த தொல்காப்பியர் இரண்டு வேலைகளைச் சிறப்பாகச் செய்துள்ளார். 1. தாய்மொழியாளனுக்கு மொழியின் அமைப்பை விளக்குகிறார். 2. பிறமொழியாளனுக்கு மொழியைக் கற்றுத்தரும் வகையில் மொழி அமைப்பை விளக்கி, சிக்கலான அமைப்புக்குரிய திறப்பானைக் கொடுக்கின்றார்.

அவ்வகையிலே சரியான தொடர்களை விளக்கிப் பின் சிக்கலான குறைச்சொல் தொடர்களின் (பொருள்கோள் உட்பட) அமைப்பைக் கட்டுரை காட்டியவாறு விளக்கிச் செல்வதைப் பார்க்க முடிகின்றது. மேலும் பேச்சு மொழிக்கு முதன்மை கொடுத்துப் பல்வேறு தொடர்களை விளக்கிச் செல்வதையும் காணமுடிகின்றது. இன்றைய புதுமை (நவீன) மொழியியலாளர்கள் மாற்றிலக்கணம் கொண்டு விளக்குவதை மிக எளிதாகக் குறைச்சொல் தொடர்களின் தன்மையைப் பிரித்தறிந்து தனித்தனித் திறப்பான் கொண்டு விளக்குவதில் தொல்காப்பியரின் தமிழ்த் தன்மை மிளிர்கின்றது.

வீரமாமுனிவரின் நூல் 'தொன்னூல் விளக்கம்' என்பது தொல்காப்பியத்தின் சுருக்கமாக அமைந்து அவர் புரிந்து கொண்ட கருத்தைத் தருவதாக உள்ளது. இதனை எழுத்ததிகாரத்திற்குரிய செய்திகள் சொல்லதிகாரத்தில் கிடப்பதும், சொல்லதிகாரத் திற்குரிய செய்திகள் பொருளதிகாரத்தில் கிடப்பதும் கொண்டு கூறலாம். எனவே தொல்காப்பியத்தின் வளர்ச்சி நிலையாகத் தொன்னூல் விளக்கத்தை எடுத்துக்கொள்ள முடியவில்லை.

துணை நூல்கள்

1. N. Chomsky, Syntactic structrues, Mouton , The Hague, 1957
2. முனைவர் முத்துச் சண்முகம், "இக்கால மொழியியல்", முல்லை நிலையம், சென்னை-17.
3. சேனாவரையம், தொல்காப்பியம் சொல்லதிகாரம், கழக வெளியீடு, 1962.
4. முனைவர் ச.வே. சுப்பிரமணியன் (பதி.), "தமிழ் இலக்கண நூல்கள்", மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 2009.

நேமிநாதத்தில் தொல்காப்பியத் தொடரியல் கோட்பாடு

முனைவர் நா.சுலோசனா
உதவிப் பேராசிரியர்
தமிழ்மொழி (ம) மொழியியல்புலம்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை

அன்றாட வாழ்க்கையில் மொழியைப் பயன்படுத்தி தங்களுக்குள் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ள சொற்கள், தொடர்கள், வாக்கியங்கள் இவை ஏதேனும் ஒரு வடிவில் இடம் பெறுகின்றன. சொற்களும் சொல்லமைப்புகளும் தொடர்களாக முதலில் அமைந்து பின்னர் வாக்கியங்களாக மாறும் அமைப்பு தொடரமைப்பு என்றும் வாக்கிய அமைப்பு என்றும் அழைக்கப்படுகிறது. தொடரியல் சொற்கள், சொல்லமைப்புகள் அமையும் முறையை தொடர்முறை எனவும் குறிக்கப்பெறுகிறது. மொழியிலுள்ள வாக்கியங்களின் அமைப்பை விளக்குவது 'தொடரியல்' என்று மொழியியலாளர் குறிப்பிடுகின்றனர். தொடர், வாக்கியம் ஆகிய இரண்டின் அமைப்பையும் விளக்கும் தொடரியல் கூறுகளை நேமிநாதத்தில் ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சொல்லதிகாரம்

தொல்காப்பியச் சொல்லதிகாரம் மொழியியல் நோக்கில் உருபனியல் அல்லது சொல்லியல், தொடரியல் பொருண்மையியல், அகராதியியல், கருத்தாடலியல் ஆகியவற்றை ஒன்பது இயல்களில் விளக்கிக் காட்டுகிறது. கிளவியாக்கம், வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், எச்சவியல் ஆகிய நான்கு இயல்களிலும் தொடரியல் கருத்துக்கள் அடங்கியுள்ளன. மற்ற ஐந்து இயல்களிலும் மிகுதியாக சொல்லியல் நோக்கு கொண்டு அமைகின்றன. இருப்பினும் தொடரியல் நோக்குடைய இயல்களில் சில சொல்லியல் உண்மைகளும் சொல்லியல் நோக்குடைய இயல்களில் சில தொடரியல் செய்திகளும் விரவிக் காணப்படுகின்றன.

பெயரியல் விரவுப் பெயர்களின் தொடரியல் பண்புகள் 657, 658 நூற்பாக்களிலும் வினையியலில் எச்சங்களின் தொடரியல் பண்புகள் 712, 715, 716, 719 நூற்பாக்களிலும் விவரிக்கப் பட்டிருக்கின்றன. இயற்சொல் 755, உம்மை இடைச்சொல் 768-

772, எண்ணிடைச் சொற்கள் 778 ஆகிய நூற்பாக்களிலும் தொடர் பற்றிய விளக்கங்கள் காணப்படுகின்றன.

உருபன், அடிச்சொல், வார்த்தை, தொடர், பொருள் என்ற ஐந்து பொருள்களிலும் 'சொல்'என்ற வார்த்தையே தொல்காப்பியத்தில் கையாளப்பட்டுள்ளது. சொல்லியலுக்கும், தொடரியலுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்பதை உரையாசிரியர்களின் உரையிலிருந்து அறிந்துகொள்ளமுடிகிறது. தொல்காப்பியர் சொல்லியல், தொடரியல் என்று வேறுபடுத்தி விளக்கவில்லையென்றாலும் உயர்திணைக் குறிப்பு வினையானது தொடரியல் பண்பை விளக்கும் வகையில் அமைவதை

"அதுச் சொல் வேற்றுமை உடைமை யானும்
கண்ணென் வேற்றுமை நிலத்தினானும்
ஒப்பினானும் பண்பினானும் என்று
அப்பால் காலம் குறிப்பொடு தோன்றும்" (தொல். வினையியல் : 16)

என்னும் இந்நூற்பா சுட்டுகிறது. மதுரையான், சென்னைவாசி, நெல்லையான், கரியன், திருவுடையன் என்ற சொற்கள் மதுரையில் பிறந்தவன், மதுரையில் படித்தவன் சென்னையில் வசிப்பவன் நெல்லையில் பிறந்தவன் கரிய நிறமுடையான் செல்வமுடையவன் இது போன்ற தொடரை விளக்கிக் காட்டுகிறது. எனவேதான் சொல்லியலும் தொடரியலும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையதாகக் கருதப்படுகிறது.

நேமிநாதம்

12 -ஆம் நூற்றாண்டில் எழுந்த தமிழ் இலக்கண நூல்களில் ஒன்று நேமிநாதமாகும். எழுத்து, சொல் இரண்டையும் சுருக்கித் தருவதால் இது 'சின்னூல்' என அழைக்கப்படுகிறது. வெண்பா யாப்பில் அமைந்த முதல் இலக்கண நூலும் நேமிநாதமே ஆகும். இந்நூல் நன்னூலை விடக் காலத்தால் முற்பட்டதாகும். கருத்துரை, பொழிப்புரை, உதாரணம், வினாவிடை, விளக்கம் யாவும் கொண்ட விருத்தியுரையாக அமைகிறது. நேமிநாத எழுத்ததிகாரம் வீரசோழிய சந்திப்படலத்தைப் பின்பற்றி எழுதியதாகும். சொல்லதிகாரம், தொல்காப்பியத்தைப் பின்பற்றி 71 நூற்பாக்களாக அமைந்துள்ளன. தொல்காப்பிய சொல் லதிகாரத்திலுள்ள இயல்களின் பெயர்கள் சிறு மாற்றத்துடன் நேமிநாத சொல்லதிகார இயல்கள் அமைந்துள்ளன.

கிளவியாக்கம் - மொழியாக்கமரபு, வேற்றுமையியல் - வேற்றுமை மரபு, வேற்றுமை மயங்கியல் - உருபு மயங்கியல், விளிமரபு - விளிமரபு, பெயரியல் - பெயர் மரபு, வினையியல் - வினைமரபு, இடையியல் - இடைச்சொல் மரபு, உரியல் - உரிச்சொல் மரபு, எச்சவியல் - எச்சமரபு முன்பிருந்த இலக்கண

நூல்களில் கூறப்பட்ட செய்திகளைத் தொகுத்துக் கூறும் நோக்கத்தில் எழுந்ததாக நேமிநாதம் குறிப்பிடப்படுகிறது. இலக்கணத் துறையில் சுருக்கமாக எழுதப்பட்ட முதல் இலக்கண நூல் இதுவேயாகும்.

தொல்காப்பியர், திணை, பால், வழு, வேற்றுமை, தொகை, இடம், காலம் இவ்வகையில் சொல் ஆராயப்படும் என கிளவியாக்கத்தில் பல் வேறு நூற்பாக்களின் வழி விளக்கியுள்ளார். ஆனால், நேமிநாதம் இவையனைத்தையும் ஒரே ஒரு நூற்பாவின் வழி வெளிப்படுத்தியுள்ளது.

"ஏற்ற திணையிரண்டும் பாலைந்தும் ஏழ்வழுவும்
வேற்றுமை எட்டும் தொகையானும் - மாற்றரிய
மூன்றிடமும் காலங்கண் மூன்றும் இரண்டிடத்தாற்
றோன்ற உரைப்பதாஞ் சொல்" (நேமி:சொல்:2)

ஐம்பால்களின் இறுதி நிலைகளை தனித்தனி நூற்பாக்களில் தொல்காப்பியர் விளக்கியுள்ளார். அதையே,

"அன் ஆனும் அள் ஆளும் அர் ஆர் பவ் வீறுமாம்
முன்னை உயிர் திணைப்பான் மூன்றற்கும் - தன்வினை கொண்டு
ஆய்ந்த துறுடுவும் அஆவல் வீறுமாம்
ஏய்ந்த அஃறிணைப்பாற் கீங்கு" (நேமி:சொல்.5)

திணைகளின் ஐந்து பாலும் அறியும் சொற்களின் ஈற்றெழுத்து இவை என இந்நூற்பா உணர்த்துகிறது. உயர்திணைக்கு அன், ஆன் இறுதியில் வருவன ஆடுஉ அறிசொல், அள் ஆள் இறுதியில் வருவன மகடூஉ அறிசொல், அர் ஆர் ப இறுதியாய் வருவன பலரறி சொல், அஃறிணைக்கும் வினையையும் வினைக் குறிப்பையும் கொண்டு துவ்வும், றுவ்வும், டுவ்வும் இறுதியாய் வருவன ஒன்றறிசொல், அவ்வும், ஆவும், வவ்வும் இறுதியாய் வருவன பலவறி சொல் என ஐந்து பாலையும் அறியும் சொற்களின் ஈற்றெழுத்தை விளக்கியுள்ளது. தற்போது சொற்சுருக்கமும் எளிமையும் கருதிச் சிறிய பெயர்களை இருபாலருக்கும் வைப்பதால் விகுதிகள் இடம்பெறுவதில்லை. (இராமாத்தாள் கண்ணாத்தாள் வரதராசனார், கல்யாணசுந்தரனார்)

ஒரு தொடர் என்று சொல்லும் போது அத்தொடரில் பால்மயக்கம், திணைமயக்கம், வினாமயக்கம், மரபுமயக்கம், காலமயக்கம், செப்புமயக்கம் இடமயக்கம் என்று சொல்லப்படும் ஏழு வகை மயக்கமும் இல்லாமல் சொல்ல வேண்டும். அப்படி இல்லையென்றால் அது வழுவாகும்.

"பாலே திணையே வினாவே பகர் மரபே
காலமே செப்பே கருதிடமே - போலும்
பிறழ்வுஞ் சினைமுதல் ஒவ்வாப் பிறசொல்
உறழ்வுஞ் சிதைந்த வரை" (நேமி:சொல்.6)

அவன் வந்தது / அவள் வந்தது / அவர் வந்தது / அவர் வந்தன / அது வந்தன / அது வந்தாள் / அது வந்தார் / அவை வந்தான் / அவை வந்தாள் / அவை வந்தார் இவை யாவும் திணை வழூவுக்குச் சான்றாகும். அவன் வந்தாள் / அவன் வந்தார் / அவள் வந்தான் / அவள் வந்தார் / அவர் வந்தான் / அது வந்தன / அவை வந்தது இவை யாவும் பால் வழூவை உணர்த்துகின்றது.

வந்தது அவன் / வந்தன அவன் / வந்தது அவள் / வந்தது அவர் / வந்தன அவர் / வந்தான் அது / வந்தாள் அது / வந்தான் அவை / வந்தாள் அவை / வந்தாள் அவர் / வந்தார் அவள் / வந்தாள் அவன் / வந்தான் அவள் / வந்தது அவை என இவையாவும் வினை வழூவை உணர்த்து கின்றது. கறக்கின்ற எருமை சினையோ பாலோ எனும் போது வினா வழூவாக அமைகிறது. யானை மேய்ப்பானை இடையன் என்றும் பசு மேய்ப்பானை பாகன் என்று கூறுதல் மரபு வழூவாகும். உண்டேன் நீ / உண்டாள் யான் / உண்டேன் அவள் என்பன இட வழூவை உணர்த்துகின்றது. திணையும் பாலும் வழூவாமல் அமைப்பது தான் சிறந்த தொடரமைப்பாகும்.

அவன் மேய்ந்தான் என்பது மரபு வழூ என்று தெய்வச்சிலையார் குறிப்பிட்டுள்ளார். இது தொடரியல் நோக்கு உடையதாகும். 'மேய்' என்ற வினையடி அஃறிணைக்கு அதுவும் ஆடு மாடுகளுக்கு மட்டுமே பொருந்துவதாகும். தூணை - பால் - இயைபு இருந்தாலும் இது தவறான வாக்கியமேயாகும். மற்ற உரையாசிரியர்களை விட தொடரியல் பற்றிய சிந்தனை தெய்வச்சிலையாரிடம் மேலோங்கி காணப்படுகிறது.

தொடர்கள் அமையும் முறை

சொற்கள் தொடரில் அல்லது வாக்கியத்தில் அல்லது கருத்தாடலில் அமையும் வரிசை முறையை விளக்குவது தொடர் அமைப்பு முறையாகும். "ஒரு சொல் அல்லது ஓர் இலக்கணக் கூறு அடக்கி வரும் அடுக்கு முறை, ஒரு தொடரை அடிப்படையாகக் கொண்டு செருகலும் விரித்தலும் ஆகியவை ஒரு முறை, இன்னொன்று, தொடர் அல்லது வாக்கியம் அடையும் மாற்றங்களில் முன் பின் மாற்றம், இலக்கண மாற்றம், கருத்தாடல் நோக்கில் இரண்டு வாக்கியங்களின் அமைப்பு முறை, ஒரு வாக்கியத்தை இரண்டு விதமாக விளக்கும் முறை ஆகியவற்றின் வழி தொடரமைப்பு முறை விளக்கப்பட்டிருப்ப தாக செ.வை. சண்முகம் குறிப்பிட்டுள்ளார்'' (தொல்காப்பியத் தொடரியல், ப.10). ஒரு வாக்கியத்தின் அமைப்பைப் பற்றி மட்டுமே விளக்குவது தொடரியல் ஆகும். இரண்டு வாக்கியங் களுக்கு ' உள்ள வரிசை முறை, கேட்போன், பேசுவோன்,

குறிப்பாக பதில் சொல்லுவோன் ஆகியோரிடையே உள்ள வாக்கிய அமைப்பை விளக்குவது கருத்தாடல் ஆகும். தொல்காப்பிய நூற்பாக்களில் கருத்தாடல் நோக்கு சிறப்பானதாக அமைகிறது.

வாக்கியங்கள், தொடர்கள் ஆகியவற்றில் காணப்படும் சொற்களின் அமைப்பு முறை மற்றும் வாக்கியங்களின் அமைப்பு முறையையும் அதன் பகுதிகளுக்கிடையிலான தொடர்பையும் பற்றி ஆராய்கிறது. ஆங்கில வாக்கிய அமைப்புகளில் எழுவாய் - வினை - செயப்படுபொருள் என்ற முறையில் சொற்களின் தொடர் காணப்படுகிறது. இந்த வரிசை முறையை மாற்றினால் வாக்கியத்தின் பொருள் மாறிவிடும். அல்லது வாக்கியம் பொருளற்றதாக மாறிவிடும்.

ஒரு குறிப்பிட்ட வாக்கிய அமைப்பை விளக்கும் முறையையும் தொல்காப்பியர் சில நூற்பாக்களில் விளக்கியுள்ளார்.

"தடுமாறு தொழிற்பெயர்க்கு இரண்டும் மூன்றும்
கடிவரையிலவே பொருள்வயினான"

(தொல்:வே.மயங்கியல்:10)

புலி கொல் யானை என்ற தொடரைப் புலியைக் கொன்ற யானை என்று இரண்டாவது வேற்றுமையை விரித்தும், புலியால் கொல்லப்பட்ட யானை என்று மூன்றாம் வேற்றுமை விரித்தும் பொருள் விளக்கப்படுகிறது. இரண்டும் பொருள் மாறுபாடு உடையன வாகும். வினை முதல் மாறுவதற்கு ஏற்ப வினைவடிவம் மாறுகிறது என்பதற்கு புலி கொல் யானை சான்றாகும்.

"இருசொல் இறுதி இரண்டேழ் அலாத
உருபு தொகா தென்றுரைப்ப -உருபுதான்
தொக்க விடத்துடனே தொக்கும் விரியுமிடத்
தொக்க விரி சொல்லும் உள" (நேமி: உருபுமயங்கியல் 2)

இரண்டு சொல்லின் இடையில் எல்லா உருபும் தொக்கும் விரிந்தும் நின்று பொருள் தரும் என நேமிநாதமும் விளக்கிக்காட்டுகிறது. 'குதிரைத்தேர்' இதில் மூன்றாம் வேற்றுமையாக விரியும் போது குதிரையால் பூட்டப்பட்ட தேர் எனப் பொருள் தருகிறது. உருபு மாற மாறப் பொருளும் மாறுபடுகிறது.

"வினையிற் தோன்றும் பாலறி கிளவியும்
பெயரிற் றோன்றும் பாலறி கிளவியும்
மயங்கல் கூடா தம்மரபினவே"

(தொல்:கிளவி:11)

வழு, வழு காத்தல், வழுவமைதி பற்றிய கருத்துக்கு இந்நூற்பாவே சான்றாக அமைகிறது. எழுவாய் - பயனிலை, திணை - பால் - இயைபு பற்றிப் பேசுவதால் இதுவும் தொடரின் அமைப்பை விளக்குவதாக அமைகிறது.

இயற்பெயரும் சிறப்புப்பெயரும் (பெயர்த் தொடர்கள்)

உயர்திணையில் வழங்கும் சிறப்புப்பெயரே இயற்பெயர் ஆகும். சிறப்புப் பெயர் என்பது ஒருவர் செய்யும் தொழில் காரணமாக வழங்கப்படும் பெயராகும். இந்த இரண்டு சொல்லும் ஒரு தொடரில் சேர்ந்து வந்தால் முதலில் சிறப்புப் பெயரும் அடுத்து இயற்பெயரும் இணைக்க வேண்டும். ஒருவரின் சிறப்பினையும் புகழையும் அடியொற்றியே சிறப்புப்பெயர் அமைகின்றன. தவம், கல்வி, குடி, உறுப்பு போன்ற சிறப்புகளால் ஏற்படும் பெய்ரைச் சிறப்புப் பெயர்கள் எனச் சேனாவரையர் குறிப்பிடுகிறார்.

"ஒப்பிகந்த பல்பொருண் மேற் சொல்லும் ஒரு சொல்லைத்
தப்பா வினையினஞ் சார்பினாற் - செப்புக
சாதி முதலாஞ் சிறப்புப் பேர் தன் முன்னர்
ஓதார் இயற்பெயரை உய்த்து" (நேமி:மொழியாக்க மரபு:14)

இந்நூற்பா சொற்களின் வரிசை முறையைப் பற்றிக் குறிப்பிடுகிறது. வினையினாலும், இனத்தினாலும், சார்பினாலும் ஒருவருடையச் சிறப்புப்பெயரை அறிய முடிகிறது. தெய்வப்புலவர் திருவள்ளுவர், சோழன் நலங்கிள்ளி, பாண்டியன் மாறன், சேரமான் சேரலாதன், பேராசிரியர் மீனாட்சி சுந்தரனார், பேரறிஞர் அண்ணா என சிறப்புப் பெயரின் பின் இயற்பெயர் அமைய வேண்டும். இவை மாற்றி அமைந்தால் இது மரபு வழுவமைதி ஆகும். சிறப்புப் பெயர்களைப் போலவே மக்கட் பெயர்களோடு ஊர்ப்பெயரையும் சேர்த்து அழைக்கும் போக்கு தற்போது பெரு வழக்காகக் காணப்படுகிறது. உதாரணமாக தஞ்சை இராமையாதாஸ், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், சீர்காழி கோவிந்தராஜன் போன்றோர் தமது ஊரின் புகழையும் ஊரறியச் செய்தனர் என்பதை இப்பெயா;களின்வழி அறிய முடிகிறது.

வண்ணச் சினை முதல்

தொல்காப்பியர் வண்ணச்சினைச் சொல்லில் வண்ணத்தை 'அடை' என்று குறிப்பிட்டுள்ளார். அடை எனபது ஒரு பொருளது குணம் என்று இளம்பூரணர் உரை வரைந்துள்ளார். சேனாவரையர் அடை என்பதற்குப் பண்புச் சொல் என்று பொருள் எழுதி குணம், வண்ணம் இரண்டிற்கும் உள்ள மாறுபாட்டை மனதில் கொண்டு வண்ணச் சினைச் சொல் என்று குறிப்பிட்டுள்ளார். 'வண்ணம் சினைமேல் ஏறி முதலொடு முடிந்தது' என்பதற்குச் செங்கால்நாரையை உதாரணமாகத் தெய்வச்சிலையார் சுட்டு கிறார். செம் என்பது வண்ணத்தையும் கால் என்பது சினையையும் நாரை என்பது முதலாகக் குறிப்பதாக விளக்கியுள்ளார். செங்கால்

என்ற இரண்டு சொற்களும் சேர்ந்து ஒரு தொடரான பின்பே நாரை என்ற பெயரோடு சேருகிறது என்ற தொடரியல் உண்மைகளை தெய்வச்சிலையார் எடுத்துக்காட்டியுள்ளார்.

'பொருண் மேல் செல்லாது சினை மேல் செல்லும்' என்ற தொடர் அடையும் சினையும் ஒரு தொடராக அமைந்தே முதலோடு சேருகிறது என்று கூறி செங்கால் நாரை என்ற உதாரணத்தைத் தந்து 'வண்ணம் சினை மேல் ஏறி முதலொடு முடிந்தது' என்று தெய்வச்சிலையார் கிளவியாக்கப் பதவுரையில் விளக்கியுள்ளார். சினை ம வண்ணம் ம வினை எனும் முறையில் செய்யுளில் மயங்கியும் வரப் பெறும் என்பதற்குச் 'செவிசெஞ்சேவல்' எனச் சேனாவரையார் சான்று காட்டி யுள்ளார். இச்சான்று செய்யுளில் வருவதால் தொடைநயம் கருதி இதைக் கையாண்டிருக்கலாம் எனக் கருதமுடிகிறது.

"இனமின்றிப் பண்புண்டாஞ் செய்யுள் வழக்கேல்
இனமுண்டாய்ப் பண்புவந் தெய்தும் - புனையிழாய்
திண்ணம் அடையுஞ் சினையும் முதலுமாய்
வண்ணச் சினைச்சொல் வரும்'' *(நேமி:மொழியாக்கமரபு:15)*

அடையும் சினையும் முதலும் பற்றி வருஞ்சொற்கள் வண்ணச் சினைச்சொல் எனப்படுகிறது. செங்கால் அன்னம், நெட்டிலைத் தெங்கு, நெட்டிலைஇருப்பை, சிறுகண்யானை, செஞ்செவி சேவல், தடங்கோட்டி யானை, பெருந்தோண் மன்னவன், நெடுவெண் திங்கள், வெண்கோட்டி யானை இவை யாவும் வண்ணச் சினைச்சொற்களாகும். அடையானது பண்பு, குணம் இரண்டையும் பெற்று வரும். குணமானது இரண்டடுக்கி முதலொடும், சினையெடும் வரவும் பெறும் என்பதற்குச் சிறுகருஞ்சாத்தன், சிறுபைந்தூவி, கருநெடுங்கூந்தல்காரிகை இவையாவும் சான்றாகும். அடை என்று பொதுப்படக் கூறியவதனால் ஒரு பொருண் மேல் அடை இரண்டு வருதலும் உண்டு என்று குறிப்பிட்ட தெய்வச்சிலையார் பேசுவோன் கருத்தை விட, தொடரமைப்பே பொருளை நிர்ணயிக்கும் என்ற கருத்தையும் குறிப்பிட்டுள்ளார். வினை, இடைச்சொல், உரிச்சொல் ஆகியவை அடையாக அமைந்து பெயரைக் கொண்டு முடிகிற தொடர்கள் எல்லாம் பெயர்த்தொடர் களேயாகும்.

வாக்கிய வகைகள்

மொழியில் வழங்குகின்ற சொற்கள், தொடர்கள், வாக்கியங்கள் போன்றவை ஏதேனும் ஒரு பொருண்மையை வெளிப்படுத்துகின்றன. ஒன்றுக்கு மேற்பட்ட சொற்கள் இணைந்து வாக்கியங்களாக அமைகின்றன. வாக்கியங்களைத் தனி வாக்கியம், கூட்டு வாக்கியம், கலவை வாக்கியம் என மூன்றாகப் பிரிக்கப்படுகிறது.

தனி வாக்கியம்

இதில் எழுவாய், செயப்படு பொருள், பயனிலை என்ற மூன்று கூறுகள் அமைந்திருக்கும். நான் நேற்று போனேன் என்ற வாக்கியம் நேற்று நான் போனேன், என்றும் அவள் புத்தகத்தை எடுத்தாள் என்ற வாக்கியம் புத்தகத்தை அவள் எடுத்தாள் என்றும் இயல்பாக மாறக்கூடியது. ஆனால், நேற்று போனேன் நான் ஃ அவள் எடுத்தாள் புத்தகத்தை என்னும் தொடர மைப்புகள் சில சமயங்களில் பொருள் குழப்பத்தை ஏற்படுத்துவதாக அமைகிறது.

கூட்டு வாக்கியம்

இரண்டு தனி வாக்கியக்கள் இணைந்து கூட்டு வாக்கிய மாகிறது. இரு தனி வாக்கியங்களையும் இணைப்பதற்கு அங்கு இணைப்புச் சொற்கள் பயன்படுகின்றன.

இராமன் வந்தான், கண்ணன் வந்தான் இவ்விரு தனி வாக்கியங்களிலும் 'உம்' என்னும் உம்மையுருபு சேர இராமனும் கண்ணனும் என்றாகி, பின்னர் வந்தான் என்ற இரண்டு வினையும் சேர்ந்து வந்தார்கள் என வினைமுற்று பன்மையாக்கி 'இராமனும் கன்ணனும் வந்தார்கள்' என கூட்டுவாக்கியம் உருவாகிறது. சாத்தன் வந்தான், கொற்றன் வந்தான் என்பதில் உம்மை எஞ்சி நிற்கிறதைக் காட்டுகிறது. இடக்கண் வலிக்கிறது, வலக்கண் வலிக்கிறது எனத் தனித்தனியே கூறுவதுண்டு. இரண்டு கண்களும் வலித்தால் இரண்டு கண்கள் வலிக்கின்றன என்பது பிழையாகும். ஏனெனில் கண்கள் இரண்டே என்பதால் உம்மை இட்டு 'இரண்டு கண்களும் வலிக்கின்றன' என்று கூறுவதே சரியானது ஆகும். அதைத் தான் தொல்காப்பியர்

"இனைத்தென வறிந்த சினைமுதற் கிளவி
வினைப்படு தொகுதியின் உம்மை வேண்டும் (தொல்.கிளவி.31)

என்று சினை முதற்சொல் முற்றும்மை பெற உம்மை வேண்டும் என்கிறார்.

கலவை வாக்கியம்

ஒன்றுக்கு மேற்பட்ட தனி வாக்கியங்கள் இணையும்போது சில மாற்றல் விதிகளுக்குட்பட்டு கலவை வாக்கியங்களாக மாறுகின்றன.

"உலைவில் உயர்திணைமேல் உம்மைத் தொகைதான்
பலர் சொல் நடைத்தாயப் பயிலும் - சிலைநுதலாய்
முற்றும்மை எச்சப் படுதலுமுண்டோ மிடைச் சொல்
நிற்றலு முண் டீறு திரிந்து" (நேமி. எச்சமரபு 5)

உயர் திணையினால் வந்த உம்மைத்தொகையினை கபிலரும் பரணரும் வந்தார் ஏன்பதில் கபிலப்ரணர் வந்தார் என வரும்.

ஒருவனைக் காணும் போது என்னிடமிருந்த பத்து ருபாயையும் கொடுத்து விட்டேன் என்பதில் அவனிடமிருந்ததே பத்து ருபாய் தான் அதையும் கொடுத்து விட்டான் எனப் பொருள்படும். எங்குமே இல்லாத பொருளைச் சொன்னாலும் உம்மை தந்தே சொல்ல வேண்டும். ‘எந்த முயலுக்கும் கொம்பு இல்லை’ எனும் வாக்கியத்தில் ‘உம்’ இல்லையென்றால் எந்த முயலுக்கு கொம்பு இல்லை எனவும் முயலுக்கு கொம்பு உண்டு என்று இல்லாதப் பொருளைத் தருவதாய் அமைகிறது. சேரன், சோழன், பாண்டியன் வந்தார் இவ்வாக்கியத்தை சேர சோழ பாண்டியனும் வந்தார் என்று குறிப்பிடும்போது என்பது சிறப்பிடம் பெறுகிறது. ’உம்’ என்பது ஒரு வாக்கியத்தில் இடைச்சொல்லாகப் பயின்று பொருள் வளம் சேர்கிறது.

அடிமை வந்தது / குழவி அழுதது / குருடு வந்தது / செவிடுபோயிற்று என உயர்திணையை அஃறிணை போல் சொல்லுதல், சாத்தனார் வந்தார், நரியார் வந்தார், கழுகாரின் பதில்கள் எனத் திணை பால் மரபுகளின் வழுவமைதியோடு சொல்லுதல், என் பாவை வந்தது, என் அன்னை வந்தாள், எருதை நம்பி எனவும், கிளியை நங்கை எனவும், மாசறு பொன்னே, வலம்புரி முத்தே, காசறு விரையே! கரும்பே! தேனே! என அஃறிணைப் பெயர்களை உயர் திணைப் பெயர்களின் மேல் ஏற்றிச் சொல்லுதல் இவையாவும் அன்பின் வெளிப்பாடுடன் தொடரியல் பண்புகளை வெளிப்படுத்துவதாய் அமைகிறது. இன்றைய சூழலில் அவன், அவள், அவர், அது, அவை, எனும் ஐம்பால்களில் ‘அவர்’ உயர்நிலைக் கிளவியாகவும் ‘அவர்கள்’ பலர்பாலாகவும் குறிப்பிடுவது இன்றைய நிலையில் உள்ள இலக்கண மாறுபாட்டை எடுத்துக் காட்டுவதாய் அமைகிறது. தற்கால சூழலில் பேசுவோர் தம் மன இயல்பிற்கும் பேசப்படும் செய்திக்கும் ஏற்றவாறு தொடர்களை அமைத்து பேசும் போது மொழி அமைப்பில் பல்வேறு மாற்றங்கள் ஏற்படுவது இயல்பாகின்றது. இலக்கணங்களை மீறினாலும் பொருள் புலனாகும் சூழலில் இத்தகைய மாற்றங்களை ஏற்றுக் கொள்ளவேண்டிய சூழலும் உருவாகின்றது. இவை மொழியின்

கிளவியாக்கத் தொடரியல் கூறுகளும் தற்கால மொழிநடையும்

முனைவர் தி. அமுதன்
உதவிப் பேராசிரியர்
தமிழ்த் துறை
பெருந்தலைவர் காமராசர் கலைக்கல்லூரி
புதுச்சேரி

ஒரு மொழியின் இலக்கணம் என்பது எழுத்து, சொல், தொடர், பொருள் ஆகிய நான்கு அலகுகளையும் விளக்குவதாக அமைய வேண்டும். ஆனால் தமிழ்மொழியின் முதல் இலக்கண நூலான தொல்காப்பியத்தை மூவிலக்கண நூலாகவும், ஐந்திலக்கண நூலாகவும் அறிஞர்கள் கூறுகின்றனர். அஃதாவது தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்று அதிகாரங்களாகப் பகுக்கப்பட்டுள்ளதால் மூவிலக்கண நூலாகவும், யாப்பு, அணி ஆகிய இரண்டினையும் செய்யுளியலில் பேசுவதால் ஐந்திலக்கண நூலாகவும் சிறப்பிக்கப்படுகின்றது. இவற்றில் எழுத்து, சொல் ஆகிய இரண்டு கூறுகளும் மொழி சார்ந்தவை. ஏனைய மூன்றும் இலக்கியம் சார்ந்தவை. பொருளதிகாரமும் மொழியின் அடிப்படைக் கூறுகளில் ஒன்றான பொருள் (Meaning) என்பதைக் குறிக்காமல் இலக்கியம் சார்ந்த அகப்பொருள், புறப்பொருள் ஆகியவற்றையே பேசுகின்றது.

சொல்லுக்கான பொருள் என்னும் நிலையில் பிற்கால நிகண்டுகளும் தற்கால அகராதிகளும் செய்த பணியின் தோற்றுவாயாகச் சொல்லதிகார உரியியல் திகழ்கின்றது. இதே போன்று மொழியின் அடிப்படை அலகுகளில் ஒன்றான தொடர் பற்றிய சிந்தனை தொல்காப்பியத்தில் காணக்கிடக்கின்ற தன்மையும் அது சொல்லதிகாரக் கிளவியாக்கத்தில் சிறப்புற்றிருந்த தன்மையும் தற்கால மொழிநடையோடு ஒப்பு நோக்குவதும் இக்கட்டுரையின் முக்கிய நோக்கங்களாகும்.

தற்கால மொழிநடையில் தொடர்

தற்கால மொழிநடையில் தொடர் பற்றிய சிந்தனைகள் முதலில் விளக்கப்படுகின்றன. இங்கு வாக்கியம் என்பதே முதன்மை அலகாகத் திகழ்கின்றது. இதனை முற்று பெற்ற சொற்றொடர்

என்பர். சொற்கள் தொடர்ந்து வந்து பொருள் தருகின்ற நிலையில் இணைவதாலேயே தொடர் எனப்படுகின்றது.

இது அமைப்பு அடிப்படையில்

1. தனி வாக்கியம்
2. தொடர் வாக்கியம்
3. கலவை வாக்கியம்

என்று மூன்று வகைப்படும்.

கருத்து/ பொருள் அடிப்படையில்

1. செய்தி வாக்கியம்
2. வினா வாக்கியம்
3. உணர்ச்சி வாக்கியம்
4. கட்டளை வாக்கியம்

என்றும்,

1. செய்வினை வாக்கியம்
2. செயப்பாட்டு வினை வாக்கியம்

என்றும்,

1. நேர்கூற்று வாக்கியம்
2. அயற்கூற்று வாக்கியம்

என்றும்,

1. உடன்பாட்டு வாக்கியம்
2. எதிர்மறை வாக்கியம்

என்றும், தற்காலத்தில் வகைப்படுத்தப்படுகின்றன.

இனி தொல்காப்பியத்தில் தொடர் பற்றிய சிந்தனையைக் காண்பது தேவையாகின்றது.

தொல்காப்பியத்தில் "தொடர்"

தொல்காப்பியத்தில் 'தொடர்' என்னும் சொல் பல்வேறு இடங்களில் பயின்று வந்துள்ளது. தொடர் என்னும் சொல் எழுத்துகள் தொடர்ந்து வருதல் என்கின்ற பொருண்மையிலேயே கீழ்க்கண்ட நூற்பாக்களில் பயன்பட்டு வந்துள்ளமையைக் காண முடிகின்றது. "நெட்டெழுத் திம்பரும் தொடர்மொழி ஈற்றும்" (தொல்.எழுத்து.36) என்னும் நூற்பாவில் இடம்பெறும் 'தொடர்மொழி' என்பது எழுத்துகள் தொடர்ந்து வந்து சொல்லாகின்ற தன்மையையே விளக்குகின்றது.

"ஓரெழுத் தொருமொழி ஈரெழுத் தொருமொழி
இரண்டிறந் திசைக்குந் தொடர்மொழி உளப்பட"

(தொல்.எழுத்து.45)

என்னும் நூற்பாவிலும் 'தொடர்மொழி' என்பது இரண்டிற்கும் மேற்பட்ட எழுத்துகள் சேர்ந்து வருகின்ற தன்மையையே குறிக்கின்றது.

"ஈரெழுத் தொருமொழி உயிர்த்தொடர் இடைத்தொடர்
ஆய்தத் தொடர்மொழி வன்றொடர் மென்றொடர்"

(தொல்.எழுத்து.407)

என்னும் நூற்பாவிலும்

"அவற்றுள்,
ஈரொற்றுத் தொடர்மொழி யிடைத்தொட ராகா"

(தொல்.எழுத்து.408)

என்னும் நூற்பாவிலும் மேற்குறித்த பொருண்மையிலேயே 'தொடர்' என்னும் சொல் இடம்பெற்றுள்ளது. புணர்ச்சி இலக்கணம் கூறும் இடத்திலேயே சொற்கள் தொடர்ந்து வரும் நிலையினை நிறுத்த சொல்லென்றும் குறித்து வருகிளவி என்றும் குறிப்பிடுகின்றார்.

இதனை,

"உயிரிது சொல்முன் உயிர்வரு வழியும்
உயிரிறு சொல்முன் மெய்வரு வழியும்
மெய்யிறு சொல்முன் உயிர்வரு வழியும்
மெய்யிறு சொல்முன் மெய்வரு வழியுமென்(று)
இவ்வென அறியக் கிளக்குங் காலை
நிறுத்த சொல்லே குறித்து வரு கிளவியென்(று)
ஆயீ ரியல புணர்நிலைச் சுட்டே" (தொல்.எழுத்து.108)

என்னும் நூற்பா உணர்த்துகின்றது.

மேலும், உயிர் மயங்கியலில் இடம்பெறும்,

"வினையெஞ்சு கிளவியும் உவமக் கிளவியும்
எனவென் எச்சம் சுட்டினெ இறுதியும்
ஆங்க என்னும் உரையசைக் கிளவியும்
ஞாங்கர்க் கிளந்த வல்லெழுத்து மிகுமே"

என்னும் நூற்பா

வினையெஞ்சு கிளவி	-	உணச் சென்றான்
உவமக்கிளவி	-	புலிபோலப் பாய்ந்தான்

எனவென் எச்சம் - கொள்ளெனச் சொன்னான்
சுட்டின் இறுதி - அச்சாத்தன்

ஆகியவை வல்லொற்று மிகும் என்கின்றன. இவ்வாறு தமிழில் ஒற்று மிகும் இடங்களும் மிகாத இடங்களும் தொடர்நிலையில் பொருண்மை அடிப்படையிலேயே இறுதி செய்ய இயலும்.

புணர்ச்சி இலக்கணம் எழுத்திகாரத்தில் விரிவாகப் பேசப்படு வதால் தொடர் பற்றிய சிந்தனையின் வித்து இவ்வதிகாரத்திலேயே பதியப் பட்டுள்ளமையை அறியமுடிகிறது. அது எவ்வாறு சொல்லதிகாரத்தில் கிளைத்துச் செழித்துள்ளதென்பதை இக்கட்டுரை விளக்குகின்றது.

சொல்லதிகாரத்தில் இடம்பெறுகின்ற கிளவியாக்கம், வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு, பெயரியல், வினையியல், இடையியல், உரியியல், எச்சவியல் அகிய ஒன்பது இயல்களின் இயல்பை ஆராயுமிடத்து, அவை உரையாசிரியர்களின் விளக்கங்களும் எடுத்துக்காட்டுகளும் அவை ஒரு தொடரின் பகுதிகளாக அமைந்தவை என்றே கருத இடமளிக்கின்றன.

இக்கருத்தினை வலியுறுத்தும் விதமாக, சொல்லதிகாரத்தின் பெயர்க்காரணம் கூறுமிடத்துச் சேனாவரையர் இளம்பூரணரைப் பின்பற்றி,

"நிறுத்த முறையானே சொல் உணர்த்திய எடுத்துக் கொண்டார், அதனால் இவ்வதிகாரம் சொல்லதிகாரம் என்னும் பெயர்த்தாயிற்று" (சிவலிங்கனார், 1982:3) எனக் கூறுகின்றார்.

ஆனால் இவ்வதிகாரம் சொல் இலக்கணம் மட்டுமன்றித் தொடரிலக் கணமும் கூறுகிறது என்பதை, "சொற்றான் இரண்டு வகைப்படும் தனி; மொழியும் தொடர் மொழியும் என. அவற்றுள், ஞ். தொடர் மொழியாவது அவாய நிலையானும் தகுதியானும் அண்மை நிலையானும் இயைந்து பொருள் விளக்கும் தனிமொழியீட்டம்... இரொழித் தொடரும் பன்மொழித் தொடரும் எனத் தொடர் மொழி இரண்டு வகைப்படும்.- சாத்தன் வந்தான் என்பது இருமொழித் தொடர்; 'அறம் வேண்டியரசன் உலகம் புரந்தான்' என்பது பன்மொழித் தொடர்" *(சிவலிங்கனார், 1982:5)* என விளக்குகிறார்.

தொல்காப்பிய உரையாசிரியர்களில் தனக்கெனத் தனியானதொரு சிந்தனை மரபைப் பின்பற்றும் தெய்வச்சிலையார் சொல்லதிகாரம் முழுமையும் தொடர்மொழிக்கு இலக்கணம் கூறுவதாகவே கருதுகின்றார் என்பதைக் கீழ்க்காணும் அவர் உரைப்பகுதி விளக்குகின்றது.

"இவ்வதிகாரம்... எழுதினான் இயன்று பொருளறிவிக்கும் சொற்களைப் பாகுபடுத்துதலாற் சொல்லதிகாரம் என்னும் பெயர்த்து. அஃது யாங்கனம் உணர்த்தினார் எனின், சொற்களைப் பொருள் நிலைமை நோக்கித் தொடர்மொழி, தனிமொழி என இருவகைப்படுத்து, அவ்விருவகைத் தொடரும் செப்பும் வினாவுமாக நிகழ்தலான் என்றும்,

அதன்பின் தனிமொழிப் பெயர்ச்சொற் பாகுபாடும், வினைச்சொல், இடைச்சொல் உரிச்சொற் பாகுபாடும் உணர்த்தி; அதன்பின் சொற்கள் விகாரப்படுமாறும், ஒட்டுமாறும், எஞ்சு மாறும், பிறவும் உணர்த்தினாரென்க. அவற்றுள் அல்வழித் தொடர் கிளவியாக்கத்துள்ளும், வேற்றுமைத் தொடர் வேற்றுமை யோத்துள்ளும், வேற்றுமை மயங்கியல், விளிமரபு என்பன வற்றுள்ளும் எஞ்சிய தனிமொழிப் பகுதியாகிய பெயரிலக்கணம் பெயரியலினுள்ளும் வினையிலக்கணம் வினையியலினுள்ளும், இடைச்சொல் இலக்கணம் இடைச்சொல்லோத்தினுள்ளும், உரிச் சொல் இலக்கணம் உரிச்சொல்லோத்தினுள்ளும், எஞ்சியவெல்லாம் எச்சவியலினுள்ளும் உணர்த்தினார் என்று கொள்க. இவ்வகையினான் ஓத்தும் ஒன்பதாயிற்று.

பொருள் உணர்த்துவன தனிமொழியாதலால், தொடர் மொழியென வகுத்ததனாற் பயன் என்னையெனின், பொருள் உணர்த்துதற்குச் சிறப்புடையன தொடர் மொழி என்று கொள்க. என்னை சிறந்தவாறெனின், சாத்தன் என்றவழிப் பொருண்மை மாத்திரம் உணர்த்துதலல்லது கேட்டார்க்கொரு பயன்பட நில்லாமையின் சாத்தன் உண்டான் எனப் பயன்பட உரூஉந் தொடர்மொழியே பொருள் இனிது விளக்கும் என்க.

சொல்லிலக்கணம் அறிந்ததனா பயன், தொடர் மொழியாகிய வாக்கியத் தினைப் பிரித்துப் பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் எனக் குறியிட வேண்டுதலின் அதன்பிற் கூறப்பட்டது" (சிவலிங்கனார், 1982:6,7) என்று கூறுகிறார்.

சொல்லிலக்கணத்தின் பயனே வாக்கியத்தைப் பிரித்துக் குறியிடுவது எனக் கூறும் தெய்வச்சிலையார் கருத்து இன்றைய மொழியியலார் கவனிக்கத்தக்கது.

ஆனால் செ.வை.சண்முகம், "கிளவியாக்கம், வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், எச்சவியல் ஆகிய நான்கு இயல்களும் மிகுதியும் தொடரியல் நோக்கு உடையவை; ஏனைய ஐந்து இயல்களும் மிகுதியும் சொல்லியல் நோக்கு உடையவை. இருந்தாலும் தொடரியல் நோக்குடைய இயல்களில் சில சொல்லியல் உண்மைகளும், சொல்லியல் நோக்குடைய

இயல்களில் சில தொடரியல் செய்திகளும் காணப்படுகின்றன என்பது குறிப்பிடத் தகுந்தது" (சண்முகம், 2004-6) என்கிறார். மேலும், சொல்லியல் மிகுதியும் காணப்படுகின்ற இயல்களாக அவர் கூறிய விளிமரபு, பெயரியல், வினையியல், இடையியல், உரியியல் ஆகிய ஐந்தனுள் விளிமரபு நீங்கலாக உள்ள நான்கு இயல்களிலும் இடம்பெற்றுள்ள தொடரியல் கூறுகளை, பெயரியலில் விரவுப் பெயர்களின் தொடரியல் பண்புகள் இரண்டு சூத்திரங்களிலும் (657-8) வினையியலில் எச்சங்களின் தொடரியல் பண்புகள் நாலு சூத்திரங்களிலும் (712, 715,716, 719) விவரிக்கப்படுகின்றன. இடையியலில் 'முன்னும் பின்னும் மொழியடுத்து வருதலும்' {அது மன் (முன் அடுத்து வந்தது), கொன்னூர் பின்னடுத்து வந்தது} என்பது தொடரியல் நோக்கு உடையது. இயற்சொல் - ஆர் விகுதி ஏற்றால் வினைமுற்றில் பலர்பால் ஏற்று வரும் (755) என்பது தொடரியல் தொடர்பானதே. உம்மை இடைச்சொல் (768-772) எண்ணிடைச் சொற்கள் (778) பற்றிய சூத்திரங்களும் தொடர் பற்றியவையே. உரியியலில்,

"................ உரிச்சொல் எல்லாம்
முன்னும் பின்னும் வருபவை நாடி
ஒத்த மொழியாற் புணர்த்தனர் உணர்த்தல்
தத்தம் மரபில் தோன்றுமன் பொருளே" (872)

என்று கூறுவது தொடரியல் சொல்லின் சரியான பொருளை உணர்ந்து கொள்ள உதவுகிறது என்பதை விளக்குவதுதான்". (சண்முகம், 2004-7). ஆனால் விளிமரபு பற்றிக் கூறும் பொழுது. "விளிமரபு மட்டுமே முழுவதும் சொல்லியல் பற்றியதாக அமைந்துள்ளது. ஆனாலும்,

தொழிலில் கூறும் ஆண் என் இறுதி
ஆய் ஆ இம்மே விளிவயி னான (618)

போன்ற சூத்திரங்கள் (624) படர்க்கைப் பெயர் முன்னிலைப் பெயராகி விளி ஏற்பதால் அடையும் மாற்றம் பற்றிப் பேசுவதால் இங்கும் தொடரியல் உண்மை பேசப்பட்டிருப்பதாக ஒரு கருத்து நிலவுகிறது. ஆனால் தொல்காப்பியர் இங்கு ஓர் இலக்கணக் கூறு அடையும் எழுத்து மாற்றங்களைப் பற்றி மட்டும் பேசுவதால் அதைத் தொடரியல் மாற்றமாகக் கருத முடியாது" (சண்முகம், 2004-7) என்கிறார். விளிமரபு பற்றிய இவரின் கருத்து மேலும் ஆய்வுக்குரியது. ஏனெனில், விளிமரபு நூற்பாக்களை விளக்கு மிடத்துச் சேனாவரையர் தருகின்ற எடுத்துக் காட்டுகளான,

சுடர்த்தொடீ கேளாய் (தொல்.சொல்.120)
நம்பி வாழி, வேந்து வாழி.... (தொல்.சொல்.127)
வந்தான் வந்தாய், சென்றான் சென்றாய் ...) (தொல்.சொல்.133

என்பன தொடரியல் சார்ந்தவையே.

கிளிவியாக்கமும் தொடரியல் சிந்தனையும்

தெய்வச்சிலையார் கிளவியாக்கம் என்பதற்கு "அது கிளவியது ஆக்கம் என விரியும். அதற்குப் பொருள், சொல்லினது தொடர்ச்சி என்றவாறு. சொற்கள் ஒன்றோடொன்று தொடர்ந்து பொருள் மேலாமாகும் நிலைமையைக் கிளவியாக்கம் என்றார். அது வேற்றுமைத் தொகை புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாகி அதனையுடைய ஓத்திற்குப் பெயராயிற்று" என்று தொடர்மொழி கண்ணோட்டத்தில் விளக்கமளிக்கின்றார்.

அவ்வகையில் கிளிவியாக்கத்திற் காணப்படுகின்ற தொடரியற் கூறுகளை இக்கட்டுரையின் பின்வரும் பகுதி விரிக்கின்றது. கிளவியாக்க முதல் நூற்பாவாகிய,

"உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே" *(தொல்.சொல்.1)*

என்னும் நூற்பாவில் சுட்டப்படுகின்ற 'என்மனார்' என்னும் சொல் தொடரியல் சிந்தனை சார்ந்ததே. என்மனார் என்பதில் 'என்ப' என்பது முற்றுச்சொல் என இளம்பூரணரும், 'என்மனார்' என்பது செய்யுள் முடிபுயெய்தி நின்றதோர் ஆர் ஈற்று எதிர்கால முற்றுச்சொல் என்று சேனாவரையரும், 'எதிர்காலச் சொல்லாயினும் இறந்த காலம் குறித்துநின்றது, இறப்பும் எதிர்வும் மயங்கப்பெறும் ஆதலின், எனத் தெய்வச்சிலையாரும், நிகழ்கால முற்று வினைத் திரிசொல் என்று நச்சினார்க்கினியரும் கூறுவதைக் காணமுடிகிறது.

மேற்கூறிய அனைத்து உரையாசிரியர்களும் இச்சொல்லை முற்றுச்சொல் என்று கூறுவது குறிப்பிடத்தகுந்தது.

"பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின்
ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியும்
தெய்வம் சுட்டிய பெயர்நிலைக் கிளவியும்
உயர்திணை மருங்கின் பால்பிரிந்து இசைக்கும்" *(தொல்.சொல்.4)*

என்னும் நூற்பா உயர்திணையிடத்துப் பெண் தன்மை குறித்த ஆண்மை திரிந்த பெயர்ச்சொல்லான பேடி என்பது பேடி வந்தாள், பேடர் வந்தார், பேடியர் வந்தார் எனவும் தெய்வத்தைக் குறித்த பெயர்ச்சொல்லாகிய தேவன், தேவி, தேவர் என்பவை தேவன் வந்தான், தேவி வந்தாள், தேவர் வந்தார் எனவரும் என்று விளக்குகின்றது.

"ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவி
ஆண்மை அறிசொற்கு ஆகிடன் இன்றே" *(தொல்.சொல்.12)*

என்னும் நூற்பா மேற்கூறிய கருத்தை உறுதி செய்கிறது.

"வினையின் தோன்றும் பாலறி கிளவியும்
பெயரின் தோன்றும் பாலறி கிளவியும்
மயங்கல் கூடா தம்மர பினவவ" (தொல்.சொல்.11)

என்னும் நூற்பா எழுவாயும் பயனிலையும் தம்முள் மயங்காமல் வரவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது.

(எ.கா) அவன் வந்தான், அவள் வந்தாள், அவர் வந்தார், அது வந்தது, அவை வந்தன.

செப்பும் வினாவும் சார்ந்த நூற்பாக்கள் (தொல்.சொல்.13 - 16) நான்கும் தொடரியல் சார்ந்தவையே. அவை இன்றளவும் பயன்பாட்டில் உள்ளன. எ.கா.

1. 'கறி பிடிக்குமா?' என்னும் கேள்விக்கும் 'பிடிக்காதா?' என வினாவுவதை இன்னும் கேட்கின்றோம்.
2. 'சாப்பிட்டாயா?' என்னும் வினாவிற்கு 'வயிற்று வலி' என்றுரைப்பது.

ஆகியவற்றைக் கூறலாம்.

"அடைசினை முதலென முறை மூன்று மயங்காமை
நடைபெற்று இயலும் வண்ணச் சினைச் சொல்"

என்னும் நூற்பாவிற்கு உரையாசிரியர்கள் கூற்றினை மேற்கோள் காட்டி எஸ்.ஆரோக்கியநாதன் (2009, பக்.75, 76) கீழ்க்கண்டவாறு விளக்குகின்றார்:

'அடை, சினை, முதல் என மூன்றும் முறை மயங்காது நடைபெற்றியலும் வண்ணச் சினைச்சொல்' எனும் நூற்பாவிற்குச் சேனாவரையர் தொடரியல் சிந்தனையோடு தெளிவானதொரு விளக்கத்தைத் தந்துள்ளார். 'செங்கால்நாரை' என்பது 'வண்ணச் சினைச்சொல்' வாய்ப்பாட்டில் அமைந்த தொடராகும். இதில் 'செம்' எனும் அடை வண்ணத்தைக் குறிக்கும். 'கால்' என்பது உறுப்பு; இது சினையாகும். நாரை என்பது பறவையைக் குறிக்கும் சொல்; இது முதல் சொல். இந்த முதற்சொல்லுக்கு அடையாகக் கால் எனும் சினைச்சொல் வர, கால் எனும் அடைக்குச் 'செம்' எனும் சொல் மேலும் ஒரு அடையாக இடம்பெறுகிறது. செம் என்பது நாரை எனும் முதற் சொல்லோடு தொடர்புடையதன்று.

இவ்வாறு செங்கால் நாரை முறையாக வந்துள்ள, 'கால் 'செந்நாரை' என்பது 'முறைமரி வந்த வழுவாகும். ஆயினும்

செய்யுளில் சில சமயம் செவி செஞ்சேவல் எனவும் வாய்வண் காக்கை எனவும் வண்ணச் சினைச்சொல் வாய்பாட்டு முறை மரி வருவதும் உண்டு. இதில் 'பெருந்தோட் சிறு நுசும்பின் பேரமர்க்கண் பேதை' எனும் தொடர் மரபுமுறை மரி வழுவி வந்ததாக இளம்பூரணர் காட்டுவார். சேனாவரையர் இக்கருத்தை மறுத்துள்ளார். 'பெருந்தோட் சிறுநுசும்பின் பேரமர்க்கண் பேதை' என்பது பெருந்தோள் பேதை, சிறு நுசும்பின் பேதை, பேரமர்க்கண் பேதை ஆகிய அடை, சினை, முதல் எனும் வரிசையில் முறையாக இந்த தொடர்கள் மூன்றும் அடுக்கி வந்ததாக விளக்கியுள்ளார்.

அடை, சினை, முதல் எனும் வரிசையில் பேரமர்க்கண் நிலை மொழியாகவும் பேதை என்பது முதல் மொழியாகவும் அமைய, பின்னர்ச் சிறுநுசும்பின் எனும், அடை, சினைச் சொற்களுக்குப் பேரமர்க்கண் பேதை எனும் தொடரையே முதல் சொல்லாகக் கொண்டு, பின்னர் அவ்வாறே பெருந்தோள் எனும் நிலைமொழிக்குச் சிறு நுசும்பின் பேரமர்க்கண் பேதை எனும் தொடர் வருமொழியாக அமைகிறது என்று தொடர்கள் அடுக்கி வந்து இடம்பெறும் தொடரியல் முறையினைச் சேனாவரையர் விளக்கியுள்ளார்.

பெருந் தோள் சிறு நுசும்பின் பேரமர்க் கண் பேதை



ஆனால், 'கருங்கோட்டு யானை' எனும் தொடரை முன்வைத்து, முதல் சொல்லோடு இரு அடைகளும்?டர்பு கொள்ள இயலும் எனும் கிடைக்கோட்டுத் தொடரியல் அமைப்பிற்கு மாறாகப் பொருண்மையியல் அமைப்பில் அகவடிவில் பொருள் காண வேண்டிய சிறந்ததொரு சான்றினைத் தெய்வச்சிலையார் தந்துள்ளார்.

கருங் கோட்டு யானை

ஒருவரைப் பன்மை முடிவு கொடுத்து வழங்கும் தன்மை இன்றளவும் உள்ளமையை, அஃதாவது,

'அமைச்சர் அவர்களே'
நீங்கள் வாருங்கள்

என்னும் நிலையில் வருவனவற்றை மற்றொரு நூற்பாவான,

"ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும்" (தொல்.சொல்.27)

விளக்குகின்றது.

செலவு முதலாகிய நான்கு சொற்களும் மூவிடத்தும் வரும் (தொல்.28) என்பதும், யாது எவன் என்னும் இரண்டு வினாச் சொற்களும் அறியாப் பொருளிடத்துத் தோன்றும் (சொல்.31) என்பதும் இவற்றில் யாது என்னும் வினாச்சொல் அறியாப் பொருளேயன்றி ஐயம் நீக்குவதற்கு அறிந்த பொருளிடத்தும் வரும் (சொல்.32) என்பதும்,

"இனைத்து என அறிந்த சினை முதல் கிளவிக்கு
வினைபடு தொகுதியின் உரிமை வேண்டும்"

என்னும் இடத்து 'முரசு முழங்குதானை மூவருங்கூடி' எனவருவதும் தொடரியல் கூறுகளேயாகும்.

முடிவு

இவ்வாறு எழுத்ததிகாரத்தில் புணர்ச்சி விதிகள் தொடங்கி சொல்லதிகாரம், எச்சவியல் முடிய உள்ள இயல்களில் தொடரியல் கூறுகளே மிகுந்து காணப்படுகின்றன என்பது இக்கட்டுரையின் கருத்தாகின்றது. மேலும் தெய்வச்சிலையார் கூறுவது போன்று சொல்லியல் கூறுகளும் தொடரின் பகுதிகளாகவே பிரித்துணர வேண்டியுள்ளது.

துணை நூல்கள்

1. ஆரோக்கியநாதன், எஸ்., மொழியியல் நோக்கில் தொல்காப்பிய சங்க இலக்கிய ஆய்வுகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2009.

2. சண்முகம், செ.வை., தொல்காப்பியத் தொடரியல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை, 2000.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

தரமணி, சென்னை - 600 113

	அண்மை வெளியீடுகள்	ரூ. பை.
1.	சிலப்பதிகார இலக்கியக் கட்டமைப்பு	160.00
2.	பழந்தமிழரின் பழக்க வழக்கங்கள்	55.00
3.	பேரறிஞர் அண்ணாவின் சமூகப் பொருளாதாரச் சிந்தனைகள்	75.00
4.	தமிழ்ச் செவ்வியல் நூல்களில் அறம், அறிவியல், சமூகம்	70.00
5.	கிறித்தவக் காப்பியங்கள்	225.00
6.	தமிழ் நாளிதழ்களின் மொழிநடை	70.00
7.	சுயமரியாதை இயக்க வீராங்கனைகள் அன்றும் இன்றும்	50.00
8.	குலோத்துங்கனின் கவிதை வளம்	60.00
9.	தமிழ்த்தூது (கட்டுரைக் கொத்து)	40.00
10.	தனிநாயக அடிகளாரின் ஆய்வுகள்	50.00
11.	அறிவியல் பார்வையில் வேதாத்திரிய உடல்நலக் கொள்கைகள்	60.00
12.	பழங்குடி மாணவர்களுக்கான தமிழ்மொழிப் பாடநூல் மதிப்பீடு	65.00
13.	பதினெண் கீழ்க்கணக்கு நூல்களும் மனிதவள மேம்பாடும்	50.00
14.	மேலைநாட்டறிஞர்களின் தமிழ்த் தொண்டு	175.00
15.	பெரியார் என்னும் பேரொளி	60.00
16.	சீனக்கவிஞர் குமோரோவின் தேவதைகள் (கவிதைத் தொகுப்பு)	70.00
17.	புலம்பெயர்ந்தோர் படைப்புகளில் செவ்வியல் இலக்கியங்களின் தாக்கம்	100.00
18.	உலகத் தமிழியல் ஆய்வுகள் (தொகுதி 1)	450.00
19.	செவ்விலக்கியச் சாரம்	70.00

வெ.எண் : 770

தொடரியல் கோட்பாடுகளின் வளர்ச்சி

விலை : ₹ 65.00



ISBN 978-81-925359-3-7